# பாரதமணி

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

ஸரஸ்வதி பூஜா மலர்

| மாலை 8 | OCTOBER 1942 : : சித்திரபானு ௵ ஐப்பசி ௴ | முத்து 4 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | போகிற போக்கில் | .... | | 141 |
| 2 | நாமகள் துதி | .... | அ. ஆறுமுகம் | 143 |
| 3 | ஸாயி பாபா | .... | | 144 |
| 4 | வைதூர் | .... | வே. சுப்ரமண்யம் | 145 |
| 5 | என் கனவு | .... | கா. சி. வேங்கடரமணி | 149 |
| 6 | தமிழ் நவீனத்தின் தாய் | .... | வே. ரா. சுந்தரராமன் | 153 |
| 7 | ஐன்ஸ்டைனின் தத்துவம் | .... | ஆர். கே. விசுவநாதன் | 160 |
| 8 | பீஷ்மரும் அபிமன்யுவும் | .... | ரா. ஸ்ரீ. தேசிகன் | 164 |
| 9 | ஒரு நாள் வேலை | .... | ந. சிதம்பரசுப்ரமண்யன் | 169 |
| 10 | கற்பா கனவா? | .... | 'தேவதத்தன்' | 172 |
| 11 | ஸரஸ்வதி பூஜை | .... | கி. சந்திரசேகரன் | 178 |
| 12 | பாசாங்கு | .... | 'பேரன்' | 182 |
| 13 | கணவனின் கடிதம் | .... | ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் | 183 |
| 14 | கெட்ட பிள்ளை | .... | 'ஜோதி' | 190 |
| 15 | அரசியல் ஸ்மிருதி | .... | கே. எஸ். எஸ். என். சர்மா | 191 |
| 16 | சிறுவர் பகுதிக் கட்டுரைகள் | .... | | 196 |
| 17 | தமிழ் வளர்ச்சிக்கு வழி | .... | எஸ். கல்யாணசுந்தரையர் | 200 |
| 18 | தமிழின் பெருமையும் நம்மவர் கடமையும் | .... | டாக்டர் உ.வே. சாமிநாதையர் | 202 |

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

## இப்படி ஒரு நிமிஷம்!

உள்ளத்தைக்கவரும் இனிய சிறுகதைகள்,
அறிவை வளர்க்கும் ரஸமான கிராமக் குறிப்புகள்,
கவிதைகள், நாட்டுப் பாடல்கள்,
இவற்றிற்கு
'பாரத மணி'
நீங்கள் உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

கா. சி. வேங்கடரமணியின்
சுயசரிதம்
'என் கதை'
இவ்விதழில்
ஆரம்பமாகியுள்ளது.

வருஷ சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணா 4

**முத்து மாலை!**

அழகாகப் பைண்டு செய்யப்பெற்றுள்ள
**பாரத மணி**
வால்யூம்களை எவ்வளவோ பேர்
வாங்கிக்கொண்டிருக்கிறார்களே, நீங்கள் இன்னும்
வாங்கவில்லையா?

7 வால்யூம்கள் — ஒவ்வொன்றும் ரூ. 2—8—0

# TRAVANCORE AYURVEDA DEPARTMENT.

## The Government Ayurveda Pharmacy, Main Road, Trivandrum.

All Ayurvedic medicines prepared according to the standard prescriptions under the expert supervision of the Honorary Director of Ayurveda, Dhanwantharidas C. N. Narayana Moose of Olesa, will be sold from this Pharmacy at cheap rates. V.-P. orders accompanied with one-fourth value in advance are promptly attended to.

SALES DEPOT WILL BE OPEN TO THE PUBLIC ON ALL WEEK DAYS FROM 8-30 A. M. to 5-30 P. M.

Apply to:— CHIEF VAIDYAN,
Government Ayurveda Pharmacy,
Trivandrum.

## SUBSCRIBE TO AND ADVERTISE IN THE TRAVANCORE INFORMATION.

A profusely illustrated and attractively got up Magazine (Size 11" x 8") published in the first week of every month by the DEPARTMENT OF INFORMATION, for the Government of Travancore.

| | | |
|---|---|---|
| Annual Subscription | Rs. 3/- | (Inland) |
| | Rs. 5/13 | (Foreign) |
| Single Copy | As. 4. | |

THE TRAVANCORE INFORMATION is read by influential classes, businessmen, and just those people possessing purchasing power.

### ADVERTISEMENT TARIFF.

| | | |
|---|---|---|
| Back cover page | Rs. 100/- | Per insertion |
| Front inside cover page | Rs. 80/- | " |
| Back inside cover page | Rs. 75/- | " |
| Any inside page | Rs. 50/- | " |
| Half page | Rs. 30/- | " |
| Quarter page | Rs. 15/- | " |

N. B.— These rates are subject to a reduction of 25 per cent. in the case of advertisements for a year or more and 15 per cent. for advertisements of shorter duration, but not shorter than three months.

Watch for the Annual Number of "Travancore Information" to be published in October in connection with the birthday of His Highness the Maharaja. The Annual will be profusely illustrated and contain articles from such eminent persons as Sir C. P. Ramaswamy Aiyar, Sir S. Radhakrishnan, Dr. C. R. Reddy, St. Nihal Singh and Dr. J. H. Cousins. The price of the Annual is Annas 8 per copy.

*For further particulars address:—*

The Department of Information,
TRIVANDRUM.

Tel.
'GOKUL'

Estd.
1909.



# டி. எஸ். ஆர்.

## கம்பெனி, கும்பகோணம்.

மூளைக்குக் குளிர்ச்சி தரும்

எங்கள்

**- சந்தனாதித் தைலம் -**

**அரைக்கீரை விதைத் தைலம்**

**- கோகுல் கூந்தல் தைலம் -**

**கோகுல் வத்தி**

மற்றுமுள்ள வாசனை சாமான்களை உபயோகியுங்கள்.

விவரங்களுக்கு கேட்லாகுக்கு எழுதுங்கள்.

நகர ஏஜண்டுகள்:

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**

**திருவல்லிக்கேணி :: மதராஸ்.**

# போகிற போக்கில்



'பாரத மணிக்கு' இந்த மாதம் எப்போதும் விசேஷம். நவராத்திரிக் கொண்டாட்டம், ஸரஸ்வதி பூஜை, விஜயதசமி.

இயற்கையை மானிடர் செயலாலும் புத்தியாலும் திருத்தி மேன்மை பெறச் செய்த கவிதா சிருஷ்டியைக் கொண்டாடும் காலம் இதுதான். மேலுக்கு மேல் மேன்மை பெற ஈசனை வேண்டும் காலமும் இதுதான்.

இந்த நவராத்திரி, 'பாரதமணிக்கு' ஐந்தாம் நவராத்திரி ஆகும். ஐந்தாவது பிறந்த நாள். சுபதினம். சற்று திரும்பிப் பார்த்தால், இந்த 1825-நாட்களேயும், நான் எப்படி சோராமல், முறியாமல் நிறைவேற்றினேன் என்று நினைத்து ஆச்சரியமடைகிறேன். ஈசன் கருணை!

'பாரதமணி' பால அரிஷ்டத்தைத் தப்பிக்கொண்டு விட்டது என்று எண்ணுகிறேன். இனிமேல் குழந்தைக் கட்டியின் உபாதை இல்லை. ஆனல் யுத்தப் புயல்காற்று இன்னும் கல்லேயும், மண்ணேயும், நெருப்பையும் வாரி இறைத்து வேரோடு வாழ்வைப் புரட்டிக்கொண்டிருக்கிறது. இதை ஈசனருளால் 'பாரதமணி' சமாளிக்க வேண்டும்.

யுத்தத்திற்கு முன் ஒருபவுண்டு அரிசி விலை 0—0—6. யுத்தத்திற்குபின் இப்போது ஒரு பவுண்டு அரிசி விலை 0-1-6. முன்பு ஒரு பவுண்டு மட்ட மெருகில்லாத பேபர் 0—2—0. இப்போது அதே பேபர் விலை 0—10—0. அதுகூட பணம் கொடுத்தாலும் கிடைப்பது அரிதாகிவிட்டது. இந்த விலையின் தாரதம்மியங்களைப் பற்றியும், நமது நவ நாகரிகப் பொருளாதார நிலைமை, முடிவு இவற்றைப்பற்றியும் ஒரு மாதமாக ஆராய்ச்சியும் சிந்தனையும் செய்துவருகிறேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. யோசிக்க யோசிக்கக் குழப்பந்தான் அதிகரிக்கிறது.

யுத்தத்தால் விலை ஏன் அதிகரிக்க வேண்டும்? இயற்கையா, அல்லது விஷமமா? பெய்யும் மழைக்கும், இறைக்கும் வெய்யிலுக்கும் விலை ஜாஸ்தியாகவில்லையே!

வாழ்வுக்கு இன்றியமையாததாயுள்ள விவசாய உழைப்புக்கும், பொருளுக்கும் ஒரு விலை—அது தாழ்ந்த விலை. அவசியமில்லாத போகத்தை வாழ்வில் பிரசார மூலம் நுழைத்து, அதன் மூலம் தொழில் என்று அபிவிருத்தி செய்து,

அதற்கு நியாயத்தை யடுக்காத அபாண்டமான விலை. மிகப் பாடுபட்டும், சேற்றிலும் சகதியிலும் உழைத்து விளையும் தானியத்திற்கு தாழ்ந்த விலை. காட்டில் தானாகவே விளையும் புல்லையும் மூங்கிலையும், பூண்டையும் வெட்டிப் போட்டு யந்திரத்தின் மூலமாய் ஆக்கும் பொருளுக்கு 'யானை' விலை. இந்த விஷப்பூச்சி நமது நவீன நாகரிகத்தின் ரத்த ஓட்டத்தில் துள்ளி விளையாடும் வரையில் சுகம் கிடையாது.

இந்த வலுத்த யுத்த நெருக்கடியில் நான் பாரதமணியை அஞ்சாமல் நடத்துவது நேச நாடுகள் போடும் போருக்கு ஒப்பிடலாம். இப்பொழுது தோல்விகள் அடைந்தாலும், இறுதியில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு பாடுபடுகிறேன். ஏனென்றால் சுயேச்சையிலும், ஜனநாயகத்திலும், கல்விப் பெருக்கிலும், நியாயத்திலும் பாரதமணிக்கு உண்மையான நம்பிக்கை இருக்கிறது. தவிர, ஏற்படப் போகும் 'புதிய அமைப்பில்'—New Order—இந்தியாவுக்கு பெரிய செல்வாக்குள்ள இடமுண்டு என்ற நம்பிக்கையும் பாரதமணிக்கு உண்டு. இந்த வெற்றியை அடைய என் நண்பர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

காவிரிப்பூம்பட்டினம்,<br>15—10—1942.

மணி





# நாமகள் துதி

("வள்ளிக்கணவன் பெயரை வழிப்போக்கர் சொன்னாலும்"
என்ற மெட்டு)

(இராகம்-மாண்டு)

வெண்மணியின் தடையாளை வெண்மரையில் வாழ்வாளை
வெண்கலையாழ் தரித்தாளைக் காண்பேனே வெண்மயிலே

உயிரோம்பும் உயர்கலையாம் உழவென்னும் கலைமாதை
உயிர்களெல்லாம் உய்வதற்கோர் உயர்வரங்கேள் வெண்மயிலே

விஞ்ஞானக் கலைவடிவாள் வித்தகமாம் பெண்பிள்ளை
அஞ்ஞான மனதகற்றி அருள்வாளோ வெண்மயிலே

நூல்நூற்றும் தொழில் முதலாம் நுண்துடிசைத் தொழில்களெல்லாம்
நூலணங்கின் உருவமென்று தொழுவேன் நான் வெண்மயிலே

முப்பாலின் நறுஞ்சுவையாம் முருக்கம்பூ மேனியாளை
இப்பாரில் நான்காண இயலுமோ வெண்மயிலே.

அ. ஆறுமுகம்.



# ஸ்ரீ ஸாயி பாபா

நாகூர் ஆண்டவரைப்போல், ஸாயி பாபா எல்லா மதஸ்தர்களாலும் பூஜிக்கப்படுகிறார். பாபாவின் மகிமை அளவிட முடியாதது. விஜயதசமி அவர் ஸித்தியடைந்த தினம். ஆகவே இம்மலரில் பாபாவைப் பற்றிய குறிப்பு வெளிவருவது பொருத்தமல்லவா?

**ஸ**ங்க்ஷேப ராமாயணத்தில் லக்ஷ ச்லோகம் கொண்ட ராமாயணத்தில் உள்ள ராம சரிதத்தைச் சொல்லுவது போல், ஸாயிபாபாவைப்பற்றி சுருக்கமாக இங்கு வரைவோம். இவர் பிறந்தது நைஜாம் ராஜ்யத்தில் ஒரு பிராம்மண குலத்தில்; வளர்ந்தது முதலைந்து வருஷம் ஒரு துலுக்கு பக்கிரி வீட்டில்; அதற்குப் பின் பத்து வருஷம் சேலு (நைஜாம் ராஜ்யம்) வில் ப்ரதாபம் பெற்ற ஜமீன்தார் யோகி கோபால் ராவ் (பட்டப் பெயர் வேங்கடேசா) இடம் குருகுல வாசம் செய்து, குருவின் பூர்ணக்ருபை பெற்று வேங்கடேச மயமாய்விட்டு, பக்தி, ஞானம், அணிமாதி ஸித்திகள் இவ்வளவும் அடைந்தார். பிறகு மஹாராஷ்டிர தேசம் அஹமட்நகர் ஜில்லா ரஹாதா கிராமம் மஹாராஷிர்டியில் வந்து முதலில் ‘கரதலபிட்சா தருதல வாஸஹா’ என்றபடி வேப்பமரத்தடியில் சில காலம் வசித்துப் பிறகு ஒரு பாழடைந்த மசூதியில் சுமார் நாற்பது வருஷம் தங்கி அங்கேயே 1918ம் வருஷம் விஜயதசமி யன்று தேகத்தைத் தியாகம் செய்தார்.

அதன் அருகே ஒரு சோடீச்வரரால் கட்டப்பட்ட பெரிய சமாதியில் பாபாவுக்குத் தினந்தோறும் நாலு வேளைகளில் பூஜை நடந்து வருகிறது. அவர் இருக்கும் பொழுதே, தம் தேகம் நீங்கின பின்னரும் ப்ரார்த்தனை செய்யும் எல்லா பக்தர்களிடமும் இருந்துகொண்டே அவர்கள் இடையூறுகளையும் அபாயங்களையும் நீக்கிப்பற்பல வரங்களையும் பொழிந்து தாய் குழந்தையைக் காப்பாற்றுவதுபோல் காப்பாற்றுவதாக வாக்களித்தார். அவர் சொன்னவாக்கு எப்பொழுதும் தவறினதில்லை. ‘ஸத்ய வாக் ஸத்யஸங்கல்ப” என்னும் ஈசன் குணம் தினந்தோறும் அவரிடம் விளங்குவதை ஆயிரக்கணக்கான ஜனங்கள் முன்னும் பார்த்து வந்தார்கள். இப்பொழுதும் பார்த்து வருகிறார்கள். இவ்வாறு ப்ரேமை ஒன்றினாலேயே அவரை அடிமையாக்கி பற்பல நன்மைகளை அடைந்து வருபவர்கள் ஒரு இனத்தாரல்லர், ஒரு மதத்தாரல்லர். ஹிந்து, முஸ்லீம், பார்ஸி, க்றிஸ்டியன் முதலிய எல்லா வகுப்பாரும் அவரை அடைந்தார்கள், இப்பொழுதும் அடைகிறார்கள். ஜாதி த்வேஷம் மதப்போர்கள் இவருக்கு ஆகாதபடியால் இவர் பக்தர்களுக்குள் அவ்வித துர்குணங்கள் இல்லை. இவர் ஸமாதி இப்பொழுது காசி க்ஷேத்திரத்திற்கும் மெக்காவுக்கும் சமமானதென்று சொல்லலாம். காசிக்கு ஹிந்துக்கள் மட்டும் மெக்காவுக்கு முஸ்லீம்கள் மட்டும் போகிறார்கள். இவர் திவ்ய ஸமாதிக்கும் மந்திரங்களுக்கும் எல்லா ஜாதியாரும் போய் பற்பல அபீஷ்டங்களை அடைந்து வருகிறார்கள். பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளையே கொண்டாடுவோரும் அவரையே வணங்கிச் சிறப்படைந்து வருகிறார்கள்.

# மைசூர்

வே. சுப்ரமண்யம்

நவராத்திரி என்றதுமே மைசூரையும் என்னுடைய மைசூர் பிரயாணத்தையும் பற்றிய சில நினைவுகள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. நான் அப்பொழுது மாணன்டாடி என்ற ஊரில் காட்டிலாக அதிகாரியாயிருந்த என் நண்பர் ஒருவரிடம் சென்றிருந்தேன். நான் போயிருந்த சமயம் தசரா பண்டிகை சமயமானதால் என் நண்பர் என்னை மைசூருக்கு அழைத்துச் சென்றார். போகும்போது அவருடைய சொந்த மோட்டார் காரில் சென்றேன்.

வழிநெடுக அடர்ந்த காடுகளும் சோலைகளும், அநேக சிற்றாறுகளும் பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமாக இருந்தன. நாங்கள் சமஸ்தானத்து எல்லையை சமீபித்துவிட்டோம் என்பதற்கு அறிகுறியாக ரஸ்தாக்கள் மிகவும் சுத்தமாகவும் அகலமாகவும் தாராளமான போக்குவரத்துக்குச் சௌகரியமாகவும் காங்கிரீட்டினால் போடப்பட்டிருந்தன. சாலையின் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்கள் நெருக்கமாக அடர்ந்து சுவர் வைத்தாற்போல் வளர்ந்திருந்தன. மேலும் சொல்வானேன்! நமது நாட்டுப் பிரசித்திபெற்ற ஜில்லாபோர்டு ரஸ்தாக்களைப்போல் அல்ல.

சாதாரணமாக நவராத்திரி என்றாலே அந்த அந்த ஊர்களில் உள்ள மக்கள் குதூகலமாக பண்டிகை கொண்டாடுவார்கள். இங்கு ராஜதானியிலோ என்றால் மேன்மை தங்கிய மகாராஜா அவர்கள் குலதெய்வமான ஸ்ரீசாமுண்டேச்வரி தேவியை உபாஸித்து விரதத்துடன் ஒன்பது நாட்களும் பூஜை செய்து பத்தாவது தினத்தில் தேவியின் அன்பிற்குப் பாத்திரராய் தர்பார் கூட்டுவார். அன்றுதான் முக்கிய விசேஷம். அன்று மன்னர் சமஸ்தான பிரஜைகளுக்கு வெகுமானங்களும், வித்வான்கள் பிரமுகர்கள் முதலான பலருக்கு திறமைக்குத் தகுந்தவாறு சன்மானங்களும் அநேக தர்ம ஸ்தாபனங்களுக்கும், கலாசாலைகளுக்கும் நன்கொடை கொடுத்தும், ஏழைக்குடிகளுக்கு சமயோசிதம்போல் வரிவஜா செய்தும் எல்லோரும் களிப்புற்று இருக்கசெய்வார்.

ராஜதானியில் எங்குபார்த்தாலும் சங்கீதக் கச்சேரியும், நடனசாலைகளுந்தான். சாதாரணமாக தேர் திருவிழா என்றால் கிராமங்களில் பக்ஷணக் கடைகளையும் மிட்டாய் கடைகளையும் பார்க்கலாம். ஏராளமான ஜனத்திரள். எங்கு பார்த்தாலும் பலவிதமான கடைகள்—அதுவும் நாகரீகம் வளர்ச்சியின் காரணமாய் மின்சார விளக்குகளைப்போட்டு ஒரு மினுக்கு மினுக்கிப் பகட்டாக நல்ல சாமான்களையும் போலி சாமான்களையும் கழுத்தில்கட்டும்கடைகள்பலகாணலாம்.

நான் முன்பின் மைசூரைப் பார்த்ததில்லை யாதலால், எனக்கு சில முக்கிய இடங்களைக் காட்டும்படி என் நண்பரைக் கேட்டுக் கொண்டேன். நாங்கள் இருவரும் ஒருவாரம் பூராவும் சுற்றினோம். அநேக இடங்களைப் பார்த்தேன். எனக்கு கிராமங்கள் அங்குள்ள ஜனங்களின் வாழ்க்கை இவைப்பற்றியும், தற்சமயம் சமஸ்தானத்தின் முன்னேற்றத்தின் காரணபூதமான கைதொழிற்சாலைகளையும் பற்றி தெரிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் உண்டு. அதற்காகத்தான்—ராஜதானியில் இருந்து நாங்கள் புறப்பட்டு ஸ்ரீரங்கப்பட்டணம் நோக்கிச் சென்றோம்—அதுதான் திப்புசுல்தான் காலத்தில் தலைநகராய் விளங்கியதே, அந்தப் புராதன நகரந்தான். நாலாபுறமும் காவிரி நதியால் மாலை போல் சூழப்பட்டு ஒரு தீவாக இருக்கின்றது ஸ்ரீரங்கபட்டணக் கோட்டை கொத்தளங்கள் ஒருபுறம் அழிந்திருந்தாலும், சரித்திர சம்பந்தமான வர்ணம் தீட்டப்பட்ட ஓவியங்களைப்

பார்க்கப் பார்க்க—எவ்வளவு மனதைக் கவர்ச்சி செய்கிறது. ஓவியங்களில் ஒரு சில ஹைதரின் வெற்றிகளைப் பற்றியும் அதில் ஒன்று பிரசித்தி பெற்ற ஆங்கில தளகர்த்தரான பாலிலூர் வீரர் கர்னல் பைலி (Colonel Bailie) என்பவரைக் கைது செய்து கொண்டு வரும் காட்சியையும்—குறிப்பிடுகிறது. இன்று தான் வரையப்பட்டதோ என்று எண்ணும்படி இருக்கின்றது. அதற்கடுத்தாற்போல் ஹைதரின் சமாதி இருக்கிறது. இப்படிப்பட்ட சரித்திர சம்பந்தமான நகரை விட்டு கிருஷ்ண ராஜ சாகரம், மாண்டியா சர்க்கரைத் தொழிற்சாலை இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு ஹாஸன், காடூர் முதலிய ஜில்லாக்களையும் கடந்து பத்ரா வந்து சேர்ந்தோம். பத்ரா என்பது துங்க பத்ரா நதியின் ஒரு உபநதி. அதன் கரையில் உள்ளதுதான் பத்ராவதி என்ற இடம். இங்கு பத்ராவதி ஹைட்ரோ எலக்டிரிக் வொர்க்ஸ் என்ற மின்சார உற்பத்திசாலையும், மிகவும் பிரசித்தி பெற்ற டாடா இரும்புத் தொழிற்சாலைக்கு அடுத்தபடியான ஒருஎஃகு தொழிற்சாலையும் இருக்கின்றன. இங்குள்ள இத் தொழிற்சாலைகளில், இரவும் பகலுமாக பதினாயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்கிறார்கள்.

முந்தியே சொல்லியதுபோல் எனக்கு இயற்கைவனப்பில் அதிக பிரியமாதலால் சமஸ்தானத்தின் எல்லையில் ஷிமோகா ஜில்லாவில் உள்ள கெர்ஸொப்பர் (Gersopper falls) நீர்விழ்ச்சியைப் பார்த்தோம்—அங்கு சுற்றுப்புறங்களில் உள்ள கழனிகளையும், சோலைகளையும், தேக்கு, சந்தனமரம் இவைகள் அடங்கிய காடுகளையும் கண்டேன் எனக்கு என் தந்தை கற்பித்த நைடதத்தின் ஞாபகம் வந்தது. என் என்றால் நிஷத தேசம் என்று நள சரிதத்தில் சொல்லுகிறார்களே—அது இந்த மைசூர் சமஸ்தானமும் சுற்றியுள்ள சில பாகங்களும்தான். ஆம்! கவிகள், நைடதத்திலும் நளவெண்பாவிலும் வர்ணித்திருக்கிறார்களே நிடத நாட்டின் வளமையைப் பற்றி—அவை சில அதிகப்படியாய் இருந்தாலும் மற்றவை முற்றிலும் உண்மைதான்—எவ்வளவு ரமணீகரமாக இருந்தது தெரியுமா! ஸ்விட்ஸர்லாந்துக்கும் காச்மீரத்துக்கும் போகிறார்களே கண்காட்சி பார்க்க—என் அவ்வளவு தூரம் போக வேண்டும்—சமீபத்தில் இம்மாதிரியான வனப்பு மிக்க இடங்கள் இருக்க?

பின்பு நாங்கள் ஹரிஹர் என்ற புராதன நகரத்திற்கு வந்தோம்—இங்கு 500-ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுவந்த ஹோயசால வம்ச அரசர் ஒருவரால் கட்டப்பட்ட நேர்த்தியான கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலில் உள்ள விக்ரஹம் ஹரியினுடையவும் சிவனுடையவும் உருவங்கள் ஒன்று சேர்ந்து விநோதமாக இருக்கிறது. ஏதோ ஒரு அரக்கனை அழித்து பூலோக வாசிகளைக் காப்பாற்ற இருவரும் இம்மாதிரி வேடந்தரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. கோயிலின் சித்திரவேலை சிற்பவேலை எல்லாம் 500 ஆண்டுகளுக்குமுன்பு இருந்த கலையின் பண்பை நன்கு விளக்குகின்றன—ஏது நானும் சரித்திர ஆராய்ச்சிக்காரன் ஆகிவிடலாம் போலிருக்கிறதே!

அதன் பின்பு நாங்கள் பதினாயிரக்கணக்கான ஏகர் நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவரக்காரணமான வாணிவிலாச சாகரம், மார்கோனஹலி, மார்கண்டேயா ஏரி முதலியவைகளையும், குப்பி, குனிகால் முதலிய நகரங்களையும் கடந்து கோலாருக்கு வந்தோம்—அதுதான் தங்க வயல்கள் என்கிறார்கள். நான் நினைத்தேன் தங்கம் அப்படி விளையுமானால் எல்லோரும் பணக்காரர் ஆகிவிடலாம் என்று. அப்படி யொன்றுமில்லை பூமியில் சுரங்கங்களைத் தோண்டி யிருக்கிறார்கள். ஏதோ சில யந்திரங்களைக்கொண்டு தங்கத்தை வெட்டி யெடுக்க ஆட்களை அனுப்புகிறார்கள்—பாவம் உள்ளேயே இருந்தால் பிணம்—வெளியே வந்தால் பணம்—என்ன கொடுமை—ஒரு சாண் வயிற்றிற்கு!

ஏதோ மாதாமாதம் சுமார் 30,000 அவுன்ஸ் சுத்த தங்கம் எடுக்கிறார்களாம். இதற்காக இவ்வளவுபாடு. ஆனால் கோலார் நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும்தான் அம்மாதிரியே தவிர கோலார் ஜில்லாவில் மட்டும் 1382 கிராமப் பஞ்சாயத்து சபைகள் மூலம் கிராமவாசிகள் கிராம குடியரசு முறையில் சுபிக்ஷமாக வாழ்ந்து வருகிறார்கள். விவசாயம், கல்வி, வைத்தியம், சுகாதாரம் இவைகளுக்கு சமஸ்தானத்தினின்றும் ஏராளமான பொருள் உதவி செய்யப்பட்டிருக்கின்றது என்றால் எவ்வளவு தூரம் மக்கள் முன்னேற்றமடைய வழி இருக்கிறது பாருங்கள். சென்ற தசரா தர்பாரில்தான் ஒவ்வொரு வருஷமும் குறைந்தது 150 கிராமங்கள் விதம் எடுத்துக்கொண்டு அவைகளைச் சீர்திருத்துவது என்ற ஒரு 10-வருஷ திட்டம் தயாரித்தார்கள். வெறும் திட்டம் மட்டும் வகுக்கவில்லை. அதற்காக சுமார் 25-லக்ஷம் ரூபாய் நிதியாக ஒதுக்கி வேலையும் துவக்கியிருக்கிறார்கள். கிராமங்களுக்குத் தேவையான சுத்தமான குடி தண்ணீர் வசதியை உத்தேசித்து ஜலாசயங்களை ஏற்படுத்தல்—கட்டாய ஆரம்பக் கல்வியை நடைமுறைக்குக் கொணர்தல்—சுகாதார முறையில் கிராமவாசிகளை வாழும்படி வற்புறுத்தல், சிசு சம்ரக்ஷணை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தல், எழுதப் படிக்கத் தெரியாத முதியோர்களுக்கு முதியோர் கல்விச்சாலைகள் ஏற்படுத்தல், பெரியகைத்தொழில்களுடனே கிராமக் கைத்தொழில்களும் அபிவிருத்தியடையச் செய்தல் முதலிய பலவுண்டு.

சென்ற வருஷத்தில் பிற்பகுதியில் ஆரம்ப காலத்திலேயே 192 முதியோர் கல்வி வகுப்புகள் நடந்து இருக்கின்றன—அதற்கு 2850 பேர் பங்கு எடுத்துக்கொண்டார்கள்! வெறும் வகுப்புகள் மட்டும் நடத்துவது போதாது என்று அநேக இலவச வாசகசாலைகளும், நூல் நிலயங்களும் தேவை என்று எண்ணி கிராமப் பஞ்சாயத்துக்களும் பேருபகாரிகளும் நன்கொடை கொடுத்து உதவுகிறார்கள். மேலும் ஆயமங்கலம் என்ற ஊரில் ஒரு கதர் உற்பத்திச்சாலை ஒன்றும் இருக்கிறது. மக்கள் பெரும்பான்மையோர் கன்னட பாஷையும் ஒரு சிலர் துளு பாஷையும் பேசுகின்றனர். அவர்கள் மிகவும் உழைப்பாளிகள்—எளிய முறையில் வாழ்கிறார்கள்.

நாங்கள் கோலாரிலிருந்து நந்திதுர்க்கம் என்ற ஊருக்குப் போனோம். அது நமக்கு எவ்விதம் கொடைக்கானல் உபயோகமோ அதுபோல் அம்மக்களுக்கு கோடைகால வாசஸ்தலமாக இருக்கிறது.

பின்பு ராஜதானியைக் காட்டிலும் மிகவும் முக்கியமான பங்களூர் என்ற நகரம் வந்துசேர்ந்தோம். இங்கு பிரபல விஞ்ஞான ஆராய்ச்சி நிலயமிருக்கிறது. இன்று அதற்கு நம்மிக்திய பிரபல விஞ்ஞானி ஸர். சி. வி. ராமன் அவர்கள் தலைமை வகிக்கிறார். 1938-ல் மகாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி Jeans, Eddington, Jung, Spear man முதலிய பிரபல விஞ்ஞானிகள் விஜயம் செய்தனர். பல விஞ்ஞான ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன.

ஏன்? விஞ்ஞானத்திலுமட்டுமல்ல, பெரிய தொழிற்சாலைகள் பலவும் இந்த சமஸ்தானத்தில் ஏற்பட்டு இருக்கின்றன. சர்க்காரே மின்சாரசாலை, பட்டு உற்பத்திசாலை, சந்தன எண்ணெய் உற்பத்திசெய்தல், பீஸ்கள் தொழிற்சாலை முதலிய பல பெரிய தொழிற்சாலைகளையும் ரயில்வேயையும் தங்கள் நிர்வாகத்தில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட தனி நபர் எவரும் தம் இஷ்டம் போல் செய்வதில்லை. கோலாரைச் சுற்றி அநேககிராமங்களில், விவசாயிகள் விவசாய காலம் போக மற்ற நாட்களில் பட்டு உற்பத்தியில் ஈடு பட்டிருக்கிறார்கள்.



# என் கனவு

கா. சி. வேங்கடரமணி

'கும்பலக்னம் கனவுக்கும் கதைக்குந்தான் லாயக்கு கவைக்குப் பிரயோசனப்படாது' என்று பெரியோர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன் இதன் உண்மையை உங்களுக்கு சிறுகச்சிறுக உணர்த்துவேன்.

**நா**னூறு நாள் ஓய்வில்லாமல் ராப்பகலாய் ஆங்கிலத்திலும் பிறகு தமிழிலும், 'தேசபக்தன் கந்தனை' எழுதி முடித்தேன். அதை முடித்தவுடன் நான் எழுதி முடித்திருக்கும் புஸ்தகங்களை, சின்னதும் பெரிதும், கணக்கிட்டேன். பன்னிரண்டுக்கு மேல் எண்ணிக்கை நின்றது. செழித்த வாழைக்கொத்தில் கூட இதற்குமேல் 'சிங்கங்'கள் கிடையாதே! சொல் மூலமாய் நான் சொல்லவேண்டியது முடிவு பெற்றுவிட்டது இனிமேல் ஒன்றும் எழுதவேண்டாம்; செயலால் முடியுமானல் செய்து காட்டுவோம் என்ற எண்ணத்தைக் கொண்டேன்.

பல உயர்தர நண்பர்கள் தூண்டியும் நான் எழுத்துத்துறையில் பிறகு இறங்கவில்லை. செயலையே கருதி நான் திட்டம் போட்டேன். அத்திட்டத்தை நிறைவேற்ற ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தை முக்கியமான கருவியாக எண்ணினேன். ஒருவருஷம் தயங்கித் தயங்கி ஆலோசித்து, எடுத்த அடியைப் பல தடவைகள் பின் வாங்கிக் கடைசியாக 1938 ஆம் வருஷத்தில் நவராத்திரி சமயத்தில் ஒரு ஆசிரமத்தையும், **'பாரதமணி'** யையும் ஸ்தாபித்தேன்.

ஆரம்பத்தில் பாரதமணி ஆசிரியர் பதவியையும் எனக்கே அக்ஷதைபோட்டுக்கொண்டேன். அதற்கு நான் பலவிதங்களில் தகுதியில்லை என்பது எனக்கே தெரியும். இருந்தாலும் என் கொள்கையில் ஆசிரியருக்கு முக்கியமான லக்ஷியம் என்னவென்றால், மளிகைக்கடைக்காரன் போல் உப்பு புளி இருக்குமிடம் கிடைக்குமிடம் தெரியவேண்டும். அவை மரத்தில் விளைகின்றனவா, பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றனவா என்பதுகூடத் தெரியவேண்டியதில்லை.

ஆகையால் பாரதமணியின் ஆசிரியராக நான் இருந்தபோதிலும், நான் அதில் ஒன்றும் எழுதுவதாக ஆதியில் எனக்கு உத்தேசமேயில்லை. ஆனல் நண்பர்கள் முறையிட ஆரம்பித்தார்கள்.

"நீ ஒன்றும் எழுதவே இல்லையே? உன் பேப்பரில்கூட நீ எழுதாவிட்டால், நாங்கள் எப்படி உன் பத்திரிகையை எப்படி ஆதரிப்போம்?" என்றார்கள். இந்தக் கூக்குரலில் என் ஏக்கம் அதிகரித்தது. பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரம் ஏறவேண்டாமா? பொது ஜனங்களுக்குப் பத்திரிகாசிரியரென்றால் அவரே எழுத வேண்டுமென்ற அபிப்ராயம் குடிகொண்டிருக்கிறது.

இதை அனுசரித்தே நானும் பாரதமணியை இந்த வழியிலாவது வெற்றிக்குக் கொண்டுவரலாமென்று தீர்மானித்தேன். ஆனல் என்ன எழுதுவது, எதைப்பற்றி எழுதுவது? 'பொய்யான தொடர்கதை எழுதுவதா அல்லது மெய்யான **என் கதை**யையே எழுதலாமா?' என்ற போராட்டம் வெகு நாளாய்

என் மனதில் இருந்து போராடிவந்தது. இந்தப்போராட்டத்தை தீர்த்துத் முடிவு கட்டுவதிலும் எனக்கு இஷ்டமில்லை. முடிவுக்கு வந்தால் எழுத ஆரம்பித்தாக வேண்டுமல்லவா? எழுதுவதுதான் எனக்குப் பிரஸவ வேதனையாயிற்றே!

சலசலவென்று ஓடும் வாய்க்காலில் துள்ளிக் குதிக்கும் மீனை தூண்டிலைப் போட்டா இழுப்பது? கரையில் நின்று அல்லவோ வேடிக்கைபார்க்கவேண்டும் துள்ளும் மீனுக்குத் தூண்டிலும், வலையும் எப்படியோ, அப்படியேதான் துள்ளிக் குதிக்கும் கற்பனைக் குஞ்சுகளுக்கு பத்திரிகைகளும் புஸ்தகங்களும். பிடிபட்டவுடன் உயிர்நாசம்! லாபம் உயிருக்கில்லை, வாழ்வுக்கில்லை, — புஸ்தக வியாபாரிக்குத்தான்!

கற்பனைக் குஞ்சுகள், தாயின் வயிற்றில் புரளும் சிசுப்போல், எப்போதும் எனக்குப் பயத்தையும், சுகத்தையும் கொடுக்கும். ஜனனத்திற்குப் பிறகு ஏற்படும் சந்தோஷம் இந்த சுகத்திற்கு ஒருநாளும் ஈடாகாது. ஆகையால்தான் சென்ற பத்து வருஷகாலமாக நான் ஒன்றும் எழுதவில்லை.

## 2

சமீபத்தில் திருக்கடையூருக்குப் போயிருந்தேன். 'மார்க்கண்டேய ஆசிரம' மணல்முட்டில் சோராத கறுத்த பசுமை கொண்ட புன்னைமர நிழலில் சலசலவென்று பிதற்றும் பள்ளிக்கூடக் குழந்தைகளின் மழலைச் சொல்லின் அருகில் ஏகாந்தமாய் உட்கார்ந்து கனவில் ஆழ்ந்தேன்.

'அடிமை நாட்டில் சொல்லின் திறமையால் என்ன பலன்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா? உடலை ஊட்டி வளர்க்குமா?' என்ற கொள்கையைக் கொண்டு பத்து வருஷகாலம் மௌனமாக இருந்துவிட்டேனே. செயலில் பாடுபட்டுப் பார்த்தேனே— அந்தச் செயலால்தான் யாருக்கு என்ன பலன்! சொல்லையும் இழந்தேன், பல துறைகளில் பாடுபட்டும் செயலையும் இழந்தேன். மறுபடியும் சொல்லின் சிறப்பைக் கொஞ்சம் கையாண்டு பார்ப்போம்—அல்ல, சொல்லையும் செயலையும் ஒன்றுசேர்த்து ஒரே நுகத்தடியில்பூட்டி ஓட்டினால், கரடு முரடான வழியில் குடையடிக்காமல் ஒரு வேளை நான் சென்றாலும் செல்லலாம், ஊரும் போய்ச் சேரலாம். ஈசுவர சிருஷ்டியில் இரண்டுகைகள் நமக்கு இருக்கும்போது சொல், செயல் என்ற இரண்டு காளைகளையும் சேர்த்துப்பூட்டி சோர்வடையாமல் ஸாரத்யம் செய்யவல்லவோ வேண்டும்?

சொல்லை இடத்திலும், செயலை வலத்திலும் பூட்டி நாம் தினசரி வாழ்க்கையில் நடந்தால் நமக்கும் பிறருக்கும் சுகம் கிட்டுமென்பதில் ஐயமில்லை என்ற தோற்றம் இந்தக் கனவில் நனவுபோல் என்முன் பிரத்தியக்ஷமாய் நின்றது. ஆகையால் உடனே தீர்மானம் செய்தேன். என் அநுபவங்களையும், கனவுகளையும் நனவுகளையும் என் நண்பர்களிடம் சொல்லி மகிழ்ச்சி யடையலாமென்று தோன்றிற்று.

இந்தத் தோற்றம் உண்டானவுடன் புன்னைக் காட்டின் நடுவில் எழுந்து நின்றேன். காலை சுமார் எட்டுமணி இருக்கும். திருக்கடையூரின் லேசான காற்றிலேயே கவிதையின் கிண்டலையும் கிளர்ச்சியையும் உணர்ந்தேன். கிழக்கு முகமாய்த் திரும்பித் தலைநிமிர்ந்தேன். காலை வெயிலில் சோலையின் நடுவில் கோவிலின் சிகரம் கண்ணில் மின்னிற்று அமிர்தகடேசுவர ஸ்வாமியின் அருளையும், அபிராமி அம்மன் கிருபையையும் வேண்டி நமஸ்கரித்தேன். **என்கதை**யை இப்பொழுது ஆரம்பிக்கிறேன்.

## 3

கர வருஷம் வைகாசி மாதம் 29ஆம் தேதி புதன்கிழமை புஷ்ய நக்ஷத்திரம், கும்பலக்னத்தில் திருவெண்காட்டுக்குச் சமீபத்திலுள்ள நெப்பத்தூர் என்ற குக்கிராமத்தில் நான் பிறந்தேன். அது

என் தாயாரைப் பெற்ற பாட்டி பிறந்த இடம்—'பேபர் போட்ஸ்'ஸில் உள்ள 'எனது பாட்டி'யில் வரும் கிழவி அவள் தான்—என் தாய் பிறந்த இடமும் அது தான். நானும் அங்கேயே பிறந்தேன்.

என் ஜனன காலத்தில் பிரசித்தி பெற்ற திருவெண்காட்டு ஜோஸ்யர் அங்கிருந்தார். சாமானிய ஜாதகனுக்குக் கூட பொருந்தும்படியான ஒரு ராஜ யோக வாக்கியம் 'ஜாதக பாரிஜாதக' மென்னும் புஸ்தகத்தில் உண்டு. இது எல்லா ஜோஸ்யர்களுக்கும் ஒரு ஆபத்து தனம்! கிருஹஸ்தர்களைச் சந்தோஷ காலத்தில் சுலபமாய் எய்க்கும் வழி.

ஆனால் திருவெண்காட்டு ஜோஸ்யர் சாமானியமானவரல்ல. தேஜஸோடு கூடிய முகம். பரிசுத்தமான, தெளிவான குரல்—மகாகனம் சாஸ்திரியார் கூட பொறாமைப்படக்கூடிய குழைவுள்ள இனிமையான சாரீரம். அவர் ஆங்கிலம் படித்திருந்தால் மகாகனம் சாஸ்திரியாருக்குப் போட்டியாக ஆங்கில பாஷையில் 'த்வனி' தவறாமல் உச்சாடனம் செய்யக்கூடியவராக ஆகியிருப்பார்!

'ஜாதக பாரிஜாதக' ராஜயோக வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டே வாயில் கற்கண்டுக் கட்டியுடன் திருவெண்காட்டு ஜோஸ்யர் என் ஜாதகத்தைக் கணித்தார்.

"என்ன லக்னம், ஜோஸ்யர்வாள் குழந்தைக்கு?" என்று என் தாயின் மாமா கேட்டார். அவர் அந்தப் பக்கத்தில் செல்வாக்குள்ள ஒரு பிரபு.

"ஐயர்வாள், குழந்தைக்கு உயர்ந்த ஜாதகம். கும்பலக்ன ஜாதகம். லக்னத்தில் குரு, நாலில் சுக்கிரன்—ஸ்வக்ஷேத்திரம். சந்திரன்—ஸ்வக்ஷேத்திரம். பெரிய ராஜயோகம்—ஜட்ஜ் முத்துஸ்வாமி ஐயரே பிறந்திருக்கிறார்! அவரும் கர வருஷந்தான், கும்பலக்னம், லக்னத்தில் குரு...." என்றார் மலர்ந்த முகத்துடன் ஜோஸ்யர்வாள்.

இதை நானே கத்தலை நிறுத்திவிட்டுக் கேட்ட ஞாபகம்!

சந்தேகத்திற்கு பிறகு ஜோஸ்யனையும் கேட்டு நிச்சயப்படுத்திக்கொண்டேன். இந்த ஜோஸ்யரை நான் நாற்பத்தைந்து வயதுவரை தெய்வமாகக் கொண்டாடினேன்—பின்வரும் சம்பவம் நேரும் வரையில்.

சென்னை ஹைக்கோர்ட்டில் வழக்கம் போல் வேலை இல்லாமல், வாடகையில்லாமல், நாலுங்கச் 'சட்டையுடன் உலாவிக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயரைச் சந்தித்தேன். அவர் ஸௌமுகமாய் "என்ன ரமணி......." என்று என்னை வரவேற்றார்—எதிர்பாராதபடி ஏதோ பெரிய அப்பீலை ஜயித்துவிட்டு கோர்ட்டிலிருந்து வரும் சமயம் போலும்!

"உங்களைப் போலொத்த கெட்டிக்காரர்களுக்கு இந்தத்தொழிலில் இடமில்லையே என்று வருந்துகிறேன்" என்றார்.

எனக்கும் தகுதியான இடம் ஒரு காலத்திலாவது உண்டு என்ற கனவிலாழ்ந்து உலாவிவந்த எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"ஏன்?" என்று கேட்டேன். "பத்து வருஷந்தானே ஆகிறது. தேர்ச்சியடைய இன்னும் இருபது வருஷமாவது காக்கவேண்டாமா?" என்றாரவர்.

"விளையும் பயிர் முளையிலேயே, ரமணி, உமக்கு ஒரு 'சான்ஸ்' இருந்திருக்கலாம். புஸ்தகங்களை எழுதி கவி என்ற பெயரை வாங்கி தொழிலை இழந்துவிட்டீர்!" என்று புன்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே என்னை விட்டுவிட்டு எதிரில் வந்துகொண்டிருந்த ஸ்ரீ எம். பதஞ்சலி சாஸ்திரியார் தோளில் கையைப் போட்டுக்கொண்டு அவர் செல்லலானார்.

ஸர் அல்லாடி கைபலமும் திருவெண்காட்டு ஜோஸ்யர் வாக்கு பலமும், பதஞ்சலி சாஸ்திரியாருக்குப் போய் விட்டது! இப்போது ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியார் ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாக இருக்கிறார். அவர் ஓர் உத்தமர். சாந்தர். தெளிவான புத்தியுடையவர். தைரி லக்ஷ்மியின் கடாக்ஷத்தைப் பெற்றவர்.

திருவெண்காட்டு ஜோஸ்யர்—அவர் பெயர் ஒருவருக்கும் தெரியாது. அவர் ஓர் பெரியார். பரிசுத்தர். பிரும்ம தேஜஸ் உள்ளவர். அவரைப் பார்த்தால் பசி தீரும். அவர் ஜீவித்திருக்கும் வரையில் நான் காவேரிப்பூம்பட்டினம் போகும்பொழுதெல்லாம் திருவெண்காட்டில் அவர் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி அவரைத் தரிசனம் செய்யாமல் போனதில்லே. கடைசியாக அவரைப் பார்த்தது என் ஞாபகத்தில் நன்ருய் ஆழ்ந்து கிடக்கிறது.

ஜோஸ்யர் கொல்லேத் தோட்டத்தில் இருந்தார். "ஜோஸ்யர்வாள்!" என்று கூப்பிக்கொண்டே நுழைந்தேன். கையேற்றத்தை மாட்டி, கிணற்றிலிருந்து சர்க்கரைநார்த்தை மரத்துக்கும், ரோஜாச் செடிகளுக்கும் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு அப்போது வயது எண்பத்திநாலு.

"வேங்கடரமணியா? வா குழந்தாய்" என்று சொல்லியவாறு, ஏற்றத்தை விட்டுவிட்டு, ஒரு நார்த்தை மரத்தின் அடியில்போய், மேலே உன்றிப்பார்த்து கனிந்த பழமொன்றைப் பறித்து என் உள்ளங்கையில் கொடுத்தார். அதன் ருசி ஹைக்கோர்ட்டு ஜட்ஜியின் பதவியின் ருசியைவிட உயர்தரமாய் என் நாவுக்கு இனிப்பாய் இருந்தது.

'கும்பலக்னம் கனவுக்கும் கதைக்குந் தான் லாயக்கு. கவைக்குப்பிரயோசனப் படாது' என்று பெரியோர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதன் உண்மையை உங்களுக்குச் சிறுகச் சிறுக உணர்த்துவேன்.

(தொடரும்)



# தமிழ் நவீனத்தின் தாய்

[காலஞ்சென்ற பி. ஆர். ராஜமய்யரின்
வாழ்க்கைக் குறிப்பு]

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

**ப**டிப்பில் எவ்வளவு சோபிதமாயிருந்தாலும் பையன்களுக்குப் பள்ளிக்கூடமென்றால் கொஞ்சம் மனக் கசப்புத்தான். அங்கிருக்கும் கட்டுப்பாடுகள் படிக்கும் மாணவர்களின் உரிமைகளைக் களைந்தெடுத்துவிடுகின்றன என்னும் எண்ணந்தான் இதற்குக் காரணம். பள்ளிக்கூடங்கள் எப்படியோ அப்படியேதான் அங்கு உழைக்கும் உபாத்தியாயர்களும். ஓடியாடித்திரியும் சுதந்திரத்தை மாணவர்களிடமிருந்து பறித்தெடுக்கும் பணியில் இங்கிலயங்களுக்கு அனுசரணையாயிருப்பவர்கள் உபாத்தியாயர்கள் என்பது பிள்ளைகளின் எண்ணம். ஆகையால் அவர்களிடத்திலும் மாணவர்களுக்குப் பொதுவாக வெறுப்பே. எனவே பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு சின்னங்கள் இழைப்பதில் பிள்ளைகளுக்கு ஒரு தனிப் பிரியம். இதை விளக்க ஒரு செய்யுளும் உண்டு.

"நெடுமால் திருமருகா
நித்த நித்தம் இந்த இழவா?
வாத்தியார் சாகாரா
வயிற்றெரிச்சல் தீராதா!"

என்பதுதான் அது. இச் செய்யுள் மூலம் மாணவர்களின் உள்ளத்தைப் படம் பிடித்து சித்திரித்துக்காட்டி அவர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் காட்சியொன்றை யமைத்து எழுதப்பட்டிருக்கும் கட்டம் தமிழ் நவீனம் ஒன்றில் வருகிறது. இந் நவீனந்தான் "ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்" என்னும் நவீனம். தமிழிலேயே இதற்கீடான 'நாவல்' இது வரையில் வெளிவரவில்லையென்றே சொல்லலாம். தமிழ்மொழியில் 'நாவல்' அல்லது 'நவீனம்' என்னும் இலக்கிய அங்கத்திற்கு இதுதான் சிறந்த வழி காட்டியாய் நிற்கிறது என்றாலும் அது முற்றிலும் தகும். இதை எழுதிய பெரியார் காலஞ்சென்ற பி. ஆர். ராஜமய்யர் என்பவர். அவரைத் தமிழ் நவீனத்தின் தாய் என்று மிகவும் பொருத்தமாய் அழைக்கலாம்.

ராஜமய்யருக்கு சிவசுப்பிரமணிய அய்யர் என்றும் ஒரு பெயர் இருந்தது. இவர் மதுரை ஜில்லா வாசியாயிருந்தவர். இவர் பிறந்தவூர் வத்லகுண்டு என்பது இது மதுரை ஜில்லாவில் நிலக்கோட்டை என்னும் தாலுக்காவைச் சேர்ந்தது. அம்மய்யநாய்க்கனூர் அல்லது கொடைக்கானல் ரோட்டு என்று சொல்லப்படும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கொடைக்கானல் மலைக்குப் போகும் பாதையில் இவ்வூர் உள்ளது. ஆதியில் இவ்வூருக்கு "பத்துல குண்டா" என்று பெயராம். தெய்வபக்தியுள்ள ஸாதுக்கள் நிறைந்த ஓர் இடமாயிருந்தது. நாளடைவில் அப்பெயர் 'வத்தலகுண்டு' என்று மருவியது. முந்நாட்களில் அவ்விடத்தில் நல்ல ஜலத்தையுடைய ஒரு நீர்நிலை, அதாவது ஏரி, இருந்ததையும் தூய ஒழுக்கமுள்ள அவ்வூர் வாசிகளுக்கு ஸ்நான பானாதிக்கு அது மிகவும் பயன் பட்டதென்பதையும் அப்பெயர் குறித்ததென்றும் சொல்லப்படுகிறது.

இவ்வூரில் பி. ஆர். ராஜமய்யர் என்பவர் 1872-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் அந்தணர் மரபில் வடமர் என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர்.

இவருடைய ஆரம்பக்கல்வி மதுரையில் நடந்தேறியது அவ்வூரிலுள்ள 'மதுரைக்கலாசாலை' என்னும் நிலயத்தில்

இவர் எப். ஏ வரையில் படித்துப் பின்னர் 1887-ல் சென்னைக்குச் சென்றார். அங்கு கிறிஸ்தவ கலாசாலையில் சரித்திரப்பகுதியில் மாணவராகச் சேர்ந்து 1889-ல் பி. ஏ. பட்டப் பரீக்ஷையில் தேறினர். அப்புறம் மூன்று வருஷங்கள் சட்டப்படிப்பில் சென்றன.

இளமையில் மாணவராயிருக்கையில் இவரிடம் ஒருவித விசேஷ குணமும் காணப்படவில்லை யென்று சொல்லப் படுகிறது. பிறருடன் சேர்ந்து கலகலப்பாயிருக்கமாட்டாராம். பள்ளிக் கூடத்திலுள்ள விளையாட்டுகளில் அதிகமாகக் கலந்துகொள்ளும் சுவபாவம் இவருக்கு இல்லை என்று தெரிய வருகிறது. இதைத்தவிர இவர் இளமையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை.

கலாசாலையில் மேற்படிப்பு பயிலுகையில் இவருக்கு அவ்வயதிற்குரிய மிடுக்கு மட்டும் இருந்தது. அத்தகைய மாணவர்கள்—ஆங்கில மொழியின் பழக்கம் ஏற்பட்டதன் பயனுக—மேனுட்டு நாகரிகத்தில் மோகங் கொண்டு நம்நாட்டுப் பழக்கவழக்கங்களை வெறுப்பது சகஜம். இவ்விதிக்கு இவரும் உள்ளானர். இந்துமதத்திலுள்ள பல கோட்பாடுகளை இவர் கண்டனம் செய்தார். முக்கியமக, ஜாதி வித்தியாசத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டார். நாட்டின் எளிய நிலைமைக்கு இந்த வர்ணசிரம தர்மமும் ஏனைய பழைய இந்துமத ஆசாரங்களுமே காரணம் என்றுகூட இவர் நினைப்பதுண்டாம்.

ஆங்கில மொழியிலும் பிரபல ஆங்கிலக்கவிகளான ஷேக்ஸ்பியர், பைரன், கீட்ஸ், ஷெல்லி, வோர்ட்ஸ் வொர்த் முதலியோரின் கவிதைகளில் இவருக்கு அதிக ஈடுபாடு. அதேமாதிரி தமிழ் மொழியிலும், தாயுமானவர், கம்பர் இவ்விரு கவிகளின் வாக்கில் இவர் மெய்மறந்துவிடுவார். கம்பருக்கு ஈடு இணை உலக மகாகவிகளிலேயே ஒருவருமில்லை என்று இவர் கருதினர்.

மேனுட்டு நாகரிகத்தில் இவருக்கிருந்த ப்ரமை அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று அச்சமூகத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொண்டு பின்னர் இங்கு வந்து இந்நாட்டையும் அதே முறையில் சீர்திருத்துவதற்குத் தக்க முயற்சிகள் செய்ய வேண்டுமென்று இவரை எண்ணங் கொள்ளச் செய்ததாம்.

இத்தருவாயில் இவருக்கு முதல் முதலாகப் படிப்பில் ஒரு தோல்வி நேர்ந்தது. பி. எல். பரீக்ஷையில் இவர் தேறவில்லை. இத்தோல்வி எதிர்பாராத விதத்தில் இவர் மனதை மாற்றிவிட்டது. இவருடைய நோக்கம் இதிலிருந்து மத விஷயத்தில் சென்று விட்டது. இப் பற்றுதல் இவருடைய இறுதிக்காலம் வரையில் மாருமல் இருந்தது. கைவல்ய நவநீதம், தத்வராய ஸ்வாமிகள் பாடல் என்பவைகளிலும் ஏனைய அநுபூதி நூல்களிலும் இவர் மனம் லயித்தது. சதா அவைகளையே படிக்க வாரம்பித்தார். இம்மனம் மாறுதலின் பயனுக இதற்கு முன் மாணவராயிருக்கையில் இந்துமத ஆசாரங்களிலும் வழக்கங்களிலும் கொள்கைகளிலும் இவர் கொண்டிருந்த வெறுப்பு பறந்துபோயிற்று. மேனுட்டு சஞ்சாரத்திலுள்ள ஆசையும் மறைந்தது. அதுமுதல் இவர் தாம் நாளடைவில் ஒரு யோகியாவதற்குப் போதிய அஸ்திவாரத்தை நாட்டிக்கொண்டார்.

கட்டுரை எழுதுவதில் இவருக்கிருந்த திறமை முதல் முதலில் இவர் கிறிஸ்தவ கலாசாலையில் இருக்கையிலேயே வெளிப் பட்டுவிட்டது. பிரபல கணித ஆசிரியரான காலஞ்சென்ற பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள் கச்சிக்கலம்பகம் என்னும் ஒரு நூல் இயற்றியிருந்தார். அதைப்பற்றி இவர் ஒரு விமர்சனம் எழுதி அதை அக்கலாசாலைப் பத்திரிகையில் வெளியிட்டார். அக்கட்டுரை மூலம் இவருடைய ஆற்றல் நன்கு வெளிப்பட்டது. அதுமுதல் கட்டுரை எழுதும் பணி இவருக்கு ஒரு பொழுது

போக்காக அமைந்துவிட்டது. 1892-ம் வருஷத்தில் விவேகசிந்தாமணி என்னும் மாதப் பத்திரிகையில் இவர் தம்முடைய அருமையான நவீனமாகிய "ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்" என்னும் கற்பனைக் கதையைக் தொடர்ச்சியாக எழுத வாரம்பித்தார். இவருக்கிருந்த அபரிமிதமான கற்பனை சக்தி இந் நவீனத்தின் மூலம் நன்கு புலப்பட்டது. இதே பத்திரிகையில் பின்பு இவர் "சீதை" என்ற தலைப்பிட்ட வேறொரு தொடர் கதையையும் எழுதினர்.

கமலாம்பாள் சரித்திரத்தின் மூலம் இவரிடம் அச்சமயம் தோன்றிவந்த மற்றொரு மனப்பான்மையும் பிறருக்கு விளங்கிற்று. அதுதான் யோகசித்தியில் இவருக்கிருந்த ஈடுபாடு. இப் புத்தகத்தில்வரும் "விசுவரூப தரிசனம்" என்னும் 25-ம் அத்தியாயப் பிற்பகுதியிலும், "இருதும் அன்பர் மிடுநீரப்பருகவந்த செழுத்தேனுகி" என்னும் 30-ம் அத்தியாயத்திலும் இவர் வைத்தமைத்திருக்கும் அநுபூதி-விஷயங்களிலிருந்தும் இது நன்ருய் விளங்குகிறது. மேலும் இப் புத்தகத்தைப்பற்றி இவரே விடுத்திருந்த அபிப்பிராயத்தையும் இதற்கு பெருஞ் சான்ருகச் சொல்லலாம். இவருடைய அபிப்பிராயம் வருமாறு:—

> "இக் கதை உண்மையை உணர உள்ளபடி விடாது பாடுபட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்து, முடிவில் மோக்ஷதாகம் தீரப்பருகும் படியான தடாகத்தைக்கண்டு நீர் பருகிக் களைப்புத் தீர்ந்த ஓர் சுத்த ஆத்மாவின் அநுபூதி பேதங்களை அடக்கியுள்ளது."

இப் புத்தகத்தை இருபாகங்களாகப் பிரித்து, அவைகட்கு முறையே, "வியஷ்டிபாவ யோகம்" அல்லது "ப்ரபஞ்ச நாடகம்", "ஸமஷ்டி பாவ யோகம்" அல்லது "ப்ரபுத்தலக்ஷணம்" என்ற பெயர்களைக் கொடுத்திருப்பதிலிருந்தும் இது நன்கு தெரியவருகிறது.

இவர் மனம் மாறி யோகாப்பியாசத்தில் முற்றிலும் ஈடுபட்டதும் முதல் முதல் இவருக்கு அநுபூதி நிலை கிடைத்ததும் ஒரு ரஸமான கதை. இவர் சென்னையில் திருவல்லிக்கேணியில் இருந்துவந்த வீட்டிற்குச் சமீபத்தில் ஓர் ஸந்நியாஸினி மத விஷயங்களைப் பற்றி அருமையான உபந்நியாசங்கள் செய்து வந்தாள். இவரும் அங்கு சென்று அடக்கத்துடன் அவ்வுபதேச மொழிகளைக் கேட்டுவந்தார். இவருடைய சாந்தங்கலந்த தோற்றத்தையும் அடக்க ஒடுக்கத்தையும் கண்டு மனமுவந்த அந்த அம்மாள் இவருடன் அளவளாவ விரும்பினள். ஒரு நாள் நடந்த பிரசங்கத்தில் உருகி மெய்மறந்து பிரஸங்கம் முடிந்து மற்றெல்லோரும் போன பின்பும் அங்கேயே வீற்றிருந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்த இவரை அந்தம்மாள் அருகிலழைக்கவே இவரும் சென்ருர். அந்தம்மாளிடம் இவர் தம்முடைய வரலாற்றை எடுத்துரைத்து தமக்குத் தவப்பெரியார்களுக்குக் கிட்டிய அநுபூதி எவ்வாறு ஸித்திக்கும் என்று வினவினர். இவ்வளவு இளம் வயதிலேயே மோக்ஷ சாம்ராஜ்யத்தில் இச்சைகொண்ட இவருடைய மனோ நிலையைக்கண்டு மெச்சி, இவருக்குத் தக்க போதனைகளைக்கூறி, இவருடைய தலையின்மேல் தன்னுடைய கரத்தை வைத்தாள். இவருக்கு உடனே ஒரு புதிய உணர்ச்சி தோன்றிற்று. தம்மையும் வெளியுலகையும் பற்றியுள்ள அறிவை க்ஷணநேரம் இழந்தார். அளவிலா ஓர் ஆனந்தத்தை யடைந்தார். இம்மாதிரி இவருக்கு உபதேசித்து இவர் கோரியபடியே நிஷ்டையினுல் உண்டாகும் ஆனந்தத்தை இவருக்களித்த அவ்வம்மாள் கொஞ்ச நாட்களில் போன இடந்தெரியாமல் மறைந்துவிட்டாள். இவர் எழுதிய "கமலாம்பாள் சரித்திர"த்தில் "விசுவரூப தரிசனம்" என்னும் கட்டத்தில் இச் சம்பவத்தைத்தான் இவர் சித்திரித்திருக்கிருர் என்று எண்ண இடமிருக்கிறது.

மேற்கூறிய சம்பவம் நடந்ததுமுதல் இவருக்கு மதவிஷயத்திலிருந்த பற்றுதல் அதிகரித்து, அதன் விளைவாக உலக விஷயங்களில் அலக்ஷியம் தோன்றி விட்டது. இவர் செய்த காரியங்களும் பிறருக்கு விளங்கவில்லை. ஆகையால் இவருக்கு மூளை கலங்கி பைத்தியம் பிடித்துவிட்டது என்று அவர்கள் எண்ணலாயினர்.

இந்த சமயத்தில் சென்னையில் ஸ்வாமி விவேகானந்தரின் முயற்சியால் தொடங்கப்பட்டு நடந்துவந்த "பிரும்மவாதினி" என்னும் ஒரு ஆங்கில மாதப்பத்திரிகைக்கு இவரை விஷயதானம் செய்யச் சொன்னார்கள். பத்திரிகை ஆசிரியரின் தொந்தரவின்பேரில் இவர் "மனிதன் அவன் தாழ்வும் ஏற்றமும்" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதிக்கொடுத்தார். முதலில் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சிலமாதங்கட்குப்பின் அப்பத்திரிகைக்கு போதுமான கட்டுரைகள் கிடைக்காமல் பஞ்சம் ஏற்படவே, மீண்டும் இதை வாசித்துப்பார்த்து வெளியிட்டனர். இது வெளிவந்தவுடன் பலர் இதை மெச்சினர். கேவலம் படிப்பினால் மட்டும் அடையக் கூடாததும், ஸ்வாநுபூதியால் மட்டுமே உணரப்படுவதாயுமுள்ள பல அரிய விஷயங்கள் இதில் அடங்கி இருந்ததைக்கண்டு எல்லோரும் அதிசயித்தனர். இவ்வாறு இதைப்படித்து மகிழ்ந்தவருள் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் தவப்பெரியாரும் ஒருவர். அவர் அப்போது மயிலாப்பூரில் இந்துமத விஷயமாய்ப் பல அரிய உபந்யாசங்களைச் செய்துவந்தார். இக் கட்டுரையைக்கண்டு ஆனந்தித்தவுடன் இதை எழுதிய ஆசிரியரையும் காண அம்மகான் விரும்பினர். ராஜமய்யரும் அவரையடைந்து ஞானோபதேசம் பெறுவதற்கு முயன்று கொண்டிருந்தார். ஆனால் ஸ்வாமிகளைச் சுற்றிலுமிருந்த சிஷ்யகோடிகள் ஸ்வாமிகளுக்குக் குறிப்பிட்ட காணிக்கையைச் செலுத்த சக்தியுள்ளவர்களையே அவரை அண்ட விட்டனர். ஆகையால் என்ன முயன்றும் அவர்கள் விதித்திருந்த காணிக்கையைச் செலுத்த அசக்தராயிருந்தபடியால் அவருடைய தரிசனம் இவருக்குக் கிட்டாமலேயே யிருந்தது. இக் கட்டுரையைப் படித்தவுடன் ஸ்வாமிகளே இவரைக்கண்டு சல்லாபஞ்செய்யப் பிரியப்பட்டதனால் இவருக்கு அவருடைய பரிசயம் ஏற்பட்டது. பின்னர் அவரே இவருக்கு உபதேச குருவுமானர். இந்த சுவாமிகளை யடைவதற்கு முன் பக்திமார்க்கத்தில் தீவிர நம்பிக்கையுடனிருந்தவரும் பக்தியின் மேலீட்டால் ஆனந்த பாஷ்பம் முதலிய வெளித் தோற்றங்களுடன் கூடியவராயிருந்த ராஜமய்யர் அந்த குருவை யடைந்து அவர் செய்த உபதேசங்களைக் கேட்டுச் சிந்தித்ததன் பயனாக இவை யெல்லாம் முற்றிலும் மாறி ஒரு சிறந்த ஞானயோகியானர்.

ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நம் மதத்தைப்பற்றிப் பிரசாரம் செய்து புகழுடன் சென்னைக்குத் திரும்பியதும் அவருடைய ஆசிர்வாதத்துடன் "பிரபுத்தபாரதா" அல்லது "விழித்துக் கொண்ட இந்தியா" என்னும் மத விஷயமான ஆங்கிலப் பத்திரிகை சென்னையில் தொடங்கப்பட்டது. அதற்கு ராஜமய்யர் ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பத்திரிகையை வெகு விமரிசையாய் நடத்தியதுடன் அதில் தாமே நேரில் தம் சொந்தப் பெயரிலும், மறைமுகமாக 'டி. வி. நடராஜன்', 'எம். ரங்கநாத சாஸ்திரி,' 'அநாமதேயன்,' 'தியாகி' என்னும் புனை பெயர்களிலும் பலகட்டுரைகள் எழுதினர். அப்பத்திரிகை தொடங்கிய மூன்றும் வருஷத்தில் இவர் அகால மரணமடைந்தவுடன் இவரைப்போல் திறமையுடன் அதை நடத்தவல்லார் எவருமின்றி அதை நிறுத்தும்படி நேர்ந்ததிலிருந்தே இவருடைய ஆற்றல் நன்கு புலப்படுகிறது.

இப் "பிரபுத்த பாரதா" என்னும் பத்திரிகையில் இவர் எழுதிய மதவிஷயமான கட்டுரைகளைத் திரட்டி "வேதாந்த

ஸஞ்சாரம்" என்ற தலைப்புடன் கூடிய ஒரு புத்தகமாகப் பிரசுரித்திருக்கிறார்கள். இது படிக்கப் படிக்கத் தெவிட்டாத் தேனாக இருக்கிறது.

சிறுவயதிலேயே மதப்பற்று தோன்றி விட்டபடியால் இவருடைய இல்வாழ்க்கையும் சற்று விநோதமாகவேயே அமைந்திருந்தது. இவருக்கு மணமானவுடன் இவருடைய இல்வாழ்க்கை இவருடைய யோக நிஷ்டைகட்கு இடையூறாயிருந்தது. எனினும் வெற்றியுடன் சமாளித்துக்கொண்டு தம் பத்தினியையும் தக்கபடி திருப்திசெய்து வந்தார். நடுவில் 1896-ம் வருஷத்தில் இவருக்குள்ள ஒரு கொடிய குடல் நோயினால் இந்த பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இவருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. வியாதி சொஸ்தமானவுடன் இவர் மனைவியிடம் நடந்துகொள்ளும் விதத்தைச் சற்று மாற்றிக்கொண்டார். கணவன் தன்னிடம் வைத்துக்கொண்ட புதிய உறவில் தோன்றிய மாறுதல் அந்த அம்மாள்—நல்ல வேளையாக—அந்நோயினால் விளைந்ததென்றே நம்பினாள். ஆனால் உண்மை எப்படியோ அந்த அம்மாளுக்கும் ராஜமய்யரின் தந்தையாருக்கும் நாளடைவில் தெரிந்துவிடவே, இளம் வயதிலேயே, பிஞ்சில் பழுத்து உதிர்ந்து விடும் பழம்போல், இவருக்கு உலகத்தின்மேல் அலக்ஷியபுத்தி ஏற்பட்டு அதனால் அநியாயமாய் இவர் கெட்டு விட்டாரே என்று அவர்கள் வருந்தினர். அவர்கள் இவ்வாறு துன்புற்றது இவர் தேடிக்கொண்டிருந்த மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு ஒரு பெருத்த இடைஞ்சலாக முடிந்தது.

1897-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் மீண்டும் இவர் பழையபடியே குடல் நோயால் பிடிக்கப்பட்டார். அம்முறையும் தெய்வ சங்கல்பத்தாலும் தக்க சிகிச்சையாலும் உயிர் தப்பினார். ஆனால் மூன்றும் முறையாக அவ்வியாதி இவரைப் பிடிக்கையில் இவரால் சமாளிக்க முடியவில்லை. இவரை ஆதரித்தோரும் இவரிடம் விசேஷ பிரியமும் மதிப்பும் வைத்திருந்தோருமான பல மயிலாப்பூர் பிரமுகர்கள் உயர்ந்த சிகிச்சைகளை ஏற்பாடு செய்தனர். ஆனால் அவை யொன்றும் பயன்படாமல் 1898-ம் வருஷம் மேமீ 13-ந்தேதி இளம் வயதாகிய தம்முடைய 26-ம் பிராயத்தில் இவருடைய ஆத்மா சொர்க்காரோகணம் செய்தது.

தமிழில் எழுதப்பட்டுள்ள "கமலாம்பாள் சரித்திர"மும் ஆங்கிலத்திலுள்ள "வேதாந்த சஞ்சார"மும் ராஜமய்யர் உலகுக்களித்திருக்கும் இலக்கியச்செல்வம். கமலாம்பாள் சரித்திரம் சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒப்புயர்வற்ற ஒரு நவீனம். அதில் தென்னிந்திய குடும்பவாழ்க்கையை ஆசிரியர்நன்றாய்ப் படம் பிடித்துக் கொடுத்திருக்கிறார். ஸ்திரீகள் குளக்கரை முதலிய நீர்நிலைகளுக்கருகில் கூடிப்பேசும் வம்பு, மாமியார் நாட்டுப்பெண்—இவர்களுக்குள்ள சம்பந்தமும் சச்சரவும், ஓரகத்திகளுக்குள் ஏற்படும் மனத்தாங்கல்களும் சண்டைகளும், கிராம வாழ்க்கையில் உள்ள மற்ற முக்கியமான அம்சங்கள், கிராமங்களில் நடக்கும் "பலீன்சடுகுடு" போன்ற விளையாட்டுகளும், "ஜல்லிகட்டு" போன்ற கொண்டாட்டங்களும், ஏனைய விழாக்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் திரையில் தோன்றி மறைகின்றன. சிறு பிள்ளைகளின் மனோபாவத்தையும் இக்கதையில் சித்திரித்திருப்பது ஏற்கனவேயே கூறப்பட்டுள்ளது. தமிழில் நகைச்சுவை உண்டா என்று கேட்போருக்கு கமலாம்பாள் நல்ல ஆணித்தரமான விடை யளிக்கிறது; உண்டு என்று அழுத்தந்திருத்தமாய் "கடல் சூழ்ந்த இந்நிலவலயத்திற்கு ஒரு திலகம்போன்ற ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர் புகழும் அஷ்டாவதானம் அருந்தமிழ்ப் புலவர் வித்வான் அம்மையப்பப்பிள்ளை" அவர்களைப்பற்றிய வரலாறுகளையும், சுப்பம்மாளின் பிரசங்கங்களில் சரமாரியாகத்தோன்றும் 'ரயயோரபேத' மென்னும் சூத்ரப் பிரயோகமும், பொன்னம்மாளின் பேச்சிலுள்ள 'அதியிலக்

கணத்தை'யும் படித்தபின் யார்தான் தமிழில் நகைச்சுவை யில்லை என்று சொல்லத் துணிவார்கள்?

இந்நவீனத்தின் மூலம் ராஜம் அய்யர் தமிழ்மொழிக்கு வேருெரு சிறந்த தொண்டும் செய்திருக்கிருர். அதை நாம் கம்பராமாயணப் பிரசாரம் என்று சொல்லிவிடலாம். கம்பராமாயணத்தி லிருந்து மேற்கோள்கள், அதில் வரும் சில பிரசித்தமான சொற்ருெடர்களைச் சரியான சந்தர்ப்பத்தில் பிரயோகித்தல், அதைப்போன்ற தொடர்களைத்தாமே சிருஷ்டித்தல் முதலிய வழிகளில் படிப் போரின் மனதில் கம்பர் காவியத்தில் ஒரு பற்றுதல் ஏற்படுத்திவிடுகிருர்.

இக் கதையின் மூலம் இவர் வெளியிட்டிருக்கும் மதவுண்மைகள் எற்கனவே குறிக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய 'வேதாந்த ஸஞ்சாரத்தில் இத்தகைய உண்மைகளை எளிய நடையில் விஸ்தாரமாய் மனதைக்கவரும் ரஸமான கதைகள்மூலம் விளக்கியிருக்கிருர்.

இருபத்தேழு வயதிற்குள் இவ்வளவு காரியங்களைச் செய்த இவருடைய திறமை அமானுஷ்யமானது என்பதில் என்ன சந்தேகம்?

—()—

## சித்திரக்கலை பயிலும் மாணவர்களுக்கு

அரசியல், தினசரி வாழ்க்கையில் நிகழும் ஹாஸ்யங்கள், நற்கலை, இவை சம்பந்தப்பட்ட சித்திரங்களையும் ஓவியங்களையும் வரவேற்கிருேம். உயர்ந்த கற்பனையும், கலைப்பண்பும் உள்ள படங்களைப் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொண்டு தக்க பரிசுகள் வழங்குவோம்.

## சந்தாதாரர்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்துசேரா விட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்யமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

மானேஜர்.

நம்பிக்கை
நாகரீகம்
நறுமணம்

# இவைகளுக்கு

# நரசூஸ்

# காபி

# &

# டீ

கிளை ஆபீஸ்கள்: தென் இந்தியா முழுவதும்.

தலைமை ஆபீஸ்:-

**ஜான்ஸன் பேட்டை, சேலம்.**



**வேண்டுமென்றே
உங்களை
அவர்கள்
குறிபார்க்கவில்லை**



ஆனால் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனால் நீங்கள் **இன்ஷூரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,**

**7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.**

மதராஸ் பிராஞ்சு: **362, சைனா பஜார் ரோடு, சென்னை.**

# ஐன்ஸ்டைனின் தத்துவம்

ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.

**பௌ**திக அறிவு வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது இயக்க விதிகளாகும். முதல் முதலில் வானத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களைக்கவனித்து அவற்றின் இயக்கத்திற்குண்டான விதிகளை அறிஞர் ஆராயத்தொடங்கினர்கள். டைகோ பிராஹி, கெப்ளர் என்ற விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளின் பயனக, வானவியல் இயக்கங்களை ஒருவாறு அறியச் சாத்தியமாயிற்று. பின்னர் பூமியிலுள்ள பொருள்களின் இயக்கங்களையும் விஞ்ஞானிகள் கவனிக்கலாயினர்.

சாதாரணமாக கனமான பொருள்கள் லேசான பொருள்களைக் காட்டிலும் வேகமாய் உயரத்திலிருந்து விழுவதைக் கண்டு அரிஸ்டாடில் என்ற யவன அறிஞர் பொருள்கள் எல்லாம் தமது நிறைகளுக்கு ஏற்ற கதிகளுடன் விழுகின்றன என்று முடிவுகட்டினர். அந்நாளில் அரிஸ்டாடலின் செல்வாக்கு அதிகமாதலின் அவர் கூறியதைத் தயக்கமின்றி அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனல் இவரது முடிவைக் கலிலியோ என்ற விஞ்ஞானி ஒப்புக்கொள்ளவில்லை. அதற்காக மிகுந்த கஷ்டத்துக்கும் ஆளானர். இவர் பைஸா என்னும் நகரத்திலுள்ள பிரசித்திபெற்ற சாய்ந்த கோபுரத்தின் உச்சியில் ஏறி, நூறு பவுண்டு எடையுள்ள ஒரு கல்லையும், ஒரு பவுண்டு எடையுள்ள மற்றொருகல்லையும் ஒரே சமயத்தில் கீழே எறிந்தார். அவை யிரண்டும் ஏககாலத்தில் விழுவதை அங்குள்ளவர்களுக்குக் காண்பித்தார், அரிஸ்டாடலின் விதிப்படி இவற்றில் ஒன்றின் விழ்ச்சி நேரம் மற்றொன்றின் நேரத்தைவிட நூறுமடங்காக இருந்திருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் சேர்ந்தே விழுந்ததைக்கண்டு எல்லோரும் திகைத்துப் போனர்கள். லேசான பொருள்கள் மெதுவாக பூமியில் விழுவதற்கு அவற்றின் குறைவான நிறை காரணமல்லவென்றும், அவற்றின்மீது ஏற்படும் காற்றின்தடையே (Resistence of air) காரணமென்றும் காட்டினர். கெப்ளரின் முடிவுகளையும் கலிலியோவின் முடிவுகளையும் கொண்டு நியூடன் இவற்றிடையே உள்ள தொடர்பைக்கண்டார். மேலும் இயக்கங்கள் எல்லாம் புற ஆக்கங்களினலேயே நிகழ முடியுமென்று உணர்ந்து அதற்கு சக்தி (force) என்று பெயரிட்டார். இயக்கவியலுக்கு அடிப்படையான இவரது பெயர்போன மூன்று விதிகளையும் வெளியிட்டார். இதனல் சக்தியையும், இயக்கத்தையும் அளவிடுவது சாத்தியமாயிற்று. பௌதிக அளவைகள் எல்லாவற்றிற்கும் இதில் அடங்கிய ராசிகளே உபயோகப்படுவதால் இவற்றின் சிறப்பை உணரலாம்.

ஒரு பொருள் பலவேறு காலங்களில் பலவேறு இடங்களில் இருந்தால் அது இயங்குவதாகக் கூறுகிறோம். எனவே ஒரு பொருளின் இயக்கத்தை அறிய வேண்டுமானல் பலநொடிகளில் அதன் நிலைகளைக்கண்டு குறித்துக்கொள்ள வேண்டும். அதாவது இடைநேரத்தையும் இடை தூரத்தையும் அளக்கவேண்டும். நியூடன் விதிப்படி இயக்கம் ஒரு சக்தியினலேயே நிகழ்வதால் அதை அளக்கப் பொருளின் நிறையும் தெரியவேண்டும். எனவே தூரம், காலம், நிறை இவற்றை அளவிடுவதற்குண்டான இராசிகளின் முக்கியத்தை நன்கு உணரலாம். மற்றொருவிதத்தில் இவ்விஷயத்தைக்கவனிப்போம். இவ்வுலகில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது யாது செய்கின்றோம்? அது நிகழ்ந்த இடத்தைக் கூறுவதோடு அது நிகழ்ந்த காலத்தையும் உடன் கூறுகிறோம். அதற்கு நிகழ்ச்சி ஏற்பட்ட இடத்தின் அட்சம் (Latitude) துருவகம் (Longitude,) நிவப்பு (altitude) ஆகியவற்றையும், கிரீன்விச்சு மணிப்படி நேரத்தையும்

குறிப்பிட்டால் போதுமானது. இப்பொழுது அடுத்தடுத்து இரண்டு நிகழ்ச்சிகள் ஏற்படுவதாகக் கொள்வோம். இதனால் ஏற்படும் வேறுபாடு இருவகையாகும் என்று உணரலாம். ஒன்று இடைநேரம்; மற்றொன்று இடைத்தூரம். இவைகளை அறிந்தால்தான் நிகழ்ச்சிகளை நன்கு உணரலாம். தூரத்தையும் காலத்தையும் அளவிடுவதில் அவை ஒன்றுக்கொன்று யாதொருஉறவும் அற்றவை என்று நியூடன் கருதினார். இக்கொள்கை மற்ற விஞ்ஞானிகளால், சற்றும் தயக்கமின்றிச் சமீபகாலம்வரை ஒப்புக்கொள்ளப்பட்டு, பௌதிகவியல் அறிவு வளர்ச்சி பெற்று முன்னேறி வந்தது. இக்கருத்து தவறு என்று விஞ்ஞானிகள் நினைக்கலாயினர். இது எவ்வாறு ஏற்பட்டது என்று இங்கு கவனிப்போம்.

இயக்கத்திற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். பூமி மணிக்குப் பதினெட்டு மைல் கதியுடன் சுற்றுகிறது என்கிறோம். இவ்வாறு கூறும்போது சூரியனைப் பொறுத்தே பூமி இக்கதியை மேற்கொள்ளுகிறது. அதாவது சூரியன் அசைவற்றிருக்கின்றதென்றும், பூமி அதைச்சுற்றி மணிக்குப்பதினெட்டு மைல் கதியுடன் செல்லுகின்றது என்றும் ஏற்படுகிறது. எனவே ஒரு பொருளின் கதியைக் கூறும்போது அசைவற்றிருக்கிற மற்றொரு பொருளைப்பொறுத்தே கூறவேண்டுவதன் அவசியத்தை உணரலாம். இதற்கு முதலில் சூரியன் முதலிய நக்ஷத்திரமண்டலங்கள் நிலையானவை யென்று கொள்ளப்பட்டன. ஆனால் அவை நிலையற்றவை என்று பின்னர் பரிசோதனையினால் தெரியவந்தது. நுட்பமான கருவிகளினுதவியால் எல்லா நக்ஷத்திரங்களுக்குமிடையே உள்ள கதிகளையும், சூரியனைப்பொறுத்த அவற்றின் கதிகளையும் அளவிட்டு அறிந்தார்கள். இவ்வாறு அறிந்தபின்னர் நியூடன் விதிகளின்படி நாம் அளவிட்டு அறிந்த எல்லா இயக்கங்களும் கேவலத்தன்மை (absolute) பெற்றிராமல் போவதை உணர்ந்தார்கள். இதைத் தவிர்க்க மற்றொரு வழியை மேற்கொண்டார்கள். ஆராய்ச்சிகளின் பயனாக, அறிஞர் சூரியனிடமிருந்து நாமடையும் வெப்ப ஆற்றல், ஒளி ஆற்றல், என்ற இவை அலைகளாக வந்து நம்மை அடைய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். அதன் பொருட்டு இவ்வலைகள்பரவ ஒரு யானம் (medium) மேற்கொள்ளப்பட்டது. இதுவே விசும்பு ஆகும். இதைக்கொண்டு இயக்க அளவைகளின் கேவலத்தன்மையை நிறுவ முயன்றார்கள். அதாவது எங்கும் வியாபிக்கும் விசும்பு அசைவற்று நிலையாயிருக்கின்றதாகக் கொண்டார்கள். எனவே, எல்லா இயக்கங்களும் நிலையான விசும்பைப் பொறுத்து நிகழ்வதாகவும் அதனால் எல்லா இயக்க அளவை இராசிகளும் கேவலத்தன்மை பெற்றிருப்பதாகவும் மேற்கொள்ளப்பட்டது. அப்படியானால் பூமிக்கு விசும்பைப் பொறுத்து ஒரு கதி இருக்கவேண்டுமென்று ஏற்பட்டது. இதை அளக்க விஞ்ஞானிகள் முன்வந்தார்கள். 'மைக்கேல்ஸன்' 'மார்லி' என்ற இரு விஞ்ஞானிகளும் தங்கள் பெயர்போன சோதனையை நடத்தி, பூமிக்கும் விசும்புக்கும் இடையே யாதொரு கதி வித்தியாசமும் இல்லை என்று காட்டினார்கள். பன்முறை சோதனைகள் நடத்தி இம்முடிவை உறுதிப்படுத்தினார்கள். எனவே விசும்பும் நிலையற்றது என்று ஏற்பட்டது. அதனால் இயக்கங்களும், அவற்றில் அடங்கியுள்ள தூரம், காலம் முதலிய இராசிகளும் கேவலத்தன்மையை இழந்தன. விஞ்ஞானிகள் திகைத்துப்போனார்கள் இந்த சங்கடத்தை ஐன்ஸ்டைன் நிவர்த்தி செய்தார். அவரது அரிய தத்துவத்தைக்கண்டு எல்லோரும் வியந்து இவரைப் போற்றினார்கள். பௌதிக உலகத்திற்கே புத்துயிர் அளித்த இப்பெரியாரின் தத்துவத்தை மேற்கொண்டார்கள்.

காலமும் இடமும் கேவலத்தன்மை வாய்ந்தன அல்லவென்றும் அவைகள் காண்போர்களின் கதிக்குத் தக்கவாறு மாறும் தன்மையுடையன என்றும் ஐன்ஸ்டைன் எடுத்துக் கூறினர்.

ஒருவனுக்கு ஒருமைல் தூரமாகத் தோன்றுவது வேறொருவனுக்கு நான்குமைல்களாகவும், பிரிதொருவனுக்கு கால்மைலாகவும் தோன்றும் என்றார். இதைப்போலவே ஒருவனுக்கு இரு நிகழ்ச்சிகளின் இடைநேரம் ஒருவாரமாகத் தோன்றினால் மற்றொருவனுக்கு அது ஒரு மாதமாகவும், வேறொருவனுக்கு ஒரு நாளாகவும் தோன்றும் என்றார். மேலும் ஒருவனுக்கு ஒருபொருள் ஒருபவுண்டு நிறையாகத் தோன்றுவது மற்றொருவனுக்கு இரண்டு பவுண்டுகளாகவும், மூன்றாமவனுக்கு அரைப்பவுண்டாகவும் இருக்கும் என்றார். **எனவே பல்வேறு கதிகளுடன் இயங்கும் பல காட்சியாளர்களுக்கு நேர, தூர, நிறை அளவுகள் வேறுபடும் என்பதே இவருடைய தத்துவமாகும்.** நிற்க ஒளியின்கதி பலவேறு கதிகளுடன் இயங்கும் பலகாட்சியாளர்களுக்கு ஒரே அளவினதாய்த் தோன்றுவதைப் பரிசோதனையினால் விஞ்ஞானிகள் கண்டார்கள். ஆகையினால் இதுமட்டுமே மாறாமல் இருப்பதை உணர்ந்தார்கள். மேலும் கேவலத்தன்மைவாய்ந்த சமீகரணம் ஒன்றை ஐன்ஸ்டைன் அடைந்துகாட்டினார். இதற்கு "ஐன்ஸ்டைன் இடை" என்று பெயர். இது கால இடங்களுக்குத் தாயகமானது. இது மாறாததன்மை உடையது. கணக்கியலால் அன்றி மன உணர்வால் அறியப்படாதது. இதிலிருந்து காலமானது நீள, அகல உயரங்களைப்போல இவ்வுலகின் நான்காவது அளவை என்று கொள்ளப்பட்டது. மனிதர்கள் மூன்றளவைப் பிராணிகளாதலால் இவற்றின் கலவைத் தோற்றமாகிய இப் பிரபஞ்சம் மனதிற்குப் புலனாகாது என்றார்கள்.

கடைசியாக நியூடன் கொள்கையைக் காட்டிலும் ஐன்ஸ்டைன் கொள்கையே சரி என்று நிரூபிப்பதற்குச் செய்யப்பட்ட சில பரிசோதனைகளின் முடிவுகளை இங்கு காண்போம். ஒளிக்கிரணங்களெல்லாம் சிறு தூள்களின் பாதைகள் என்று அறியப்பட்டது. இத்தூள்கள் மிகச் சிறியனவாய் இருந்தபோதிலும் அவைகளுக்கு நிறை உண்டு என்றும் அறியப்பட்டது. ஐன்ஸ்டைன் தத்துவத்தின்படி இத்தூள்களின் நிறை, அவை செல்லும் கதியைச் சார்ந்திருக்கும். நியூடன் கொள்கைப்படி அவற்றின் நிறை, செல்லும் கதியைச்சார்ந்திராது. இதில் எது சரியென்று பரிசோதனை வாயிலாகத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு நக்ஷத்திரத்திலிருந்து வரும் ஒளிக்கிரணங்கள் சூரியனுக்குச் சமீபத்தில் வரும் பொழுது சூரியனால் கவரப்படவேண்டும் என்று உணரலாம். எனவே அந் நக்ஷத்திரம் தன் உண்மை நிலையிலிருந்து விலகித் தோன்றும். இவ்விலக்கத்தை ஐன்ஸ்டைன் தத்துவத்தின்படி கணக்கிட்டார்கள். நியூடன் கொள்கைப்படியும் கணக்கிடப்பட்டது. 1919-ம் வருஷம் நிகழ்ந்த சூரிய கிரகணத்தன்று சோதனை நடத்தப்பட்டு ஐன்ஸ்டைன் கணக்குத்தான் சரியென்று நிரூபிக்கப்பட்டது. மற்றொரு பரிசோதனையின் முடிவைப்பார்ப்போம். ஒவ்வொரு பொருளும் தன் நிலைமைக்குத் தக்கவாறு நிறமாலையின் (Spectrum) பலபாகங்களில் அமைத்துள்ள குறிப்பிட்ட அலை நீளங்களையுடைய ஒளியை வெளியிடும். நிறமாலைமானியைக்கொண்டு அவற்றின் அலை நீளங்களை அளக்கலாம். இப்பொருள் சூரியனிடத்தில் இருந்தால் இது வெளியிடும் ஒளிப்பகுதியின் அலை நீளங்கள் ஒருவிதமாகவும், பூமியிலிருந்தால் வேறொருவிதமாகவும் இருக்கும். இவ் வேற்றுமையை இரண்டு முறைகளிலும் கணக்கிட்டார்கள். பரிசோதனைசெய்து பார்க்கையில் ஐன்ஸ்டைன் கணக்கே சரி என்று கண்டார்கள். மூன்றாவது பரிசோதனையில் புதன்கோள் முனையின் இயக்கத்தை அளவிடுவதில் இரண்டு முறைகளும் கையாளப்பட்டு ஐன்ஸ்டைன் முறையே இங்கும் சரியென்று கண்டார்கள். எனவே ஐன்ஸ்டைனின் தத்துவம் ஐயந்திரிபு அன்னியில் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

—0—



எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.




நண்பா! போய் ஸிரோலின் 'ரோச்' சாப்பிடு.
இப்பொழுதே ஸிரோலின் 'ரோச்' சாப்பிட்டு இருமல் அல்லது ஜலதோஷத்தை ஒழியுங்கள்
ஸிரோலின் 'ரோச்'
இருமலையும் ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது

# பீஷ்மரும் அபிமன்யுவும்

ரா. ஸ்ரீ. தேசிகன்

அமரநாட்டில் அவர்கள் சந்தித்தார்கள்......

"என்னுடைய தாய் மானபங்கம் அடைந்ததுமாதிரி நான் பிறந்த நாடு அடையக்கூடாதென்ற கவலைதான் என்னை மறுபடியும் தங்களை வினவும்படி தூண்டுகிறது. முக்காலத்தையும் அறிந்த பெரியவரே, ஞானதிருஷ்டியில் பார்த்தருளவேண்டும்'' என்றான் அபிமன்யு, பீஷ்ம பிதாமகரைப்பார்த்து......

"......உன் தகப்பன் அர்ச்சுனன் வீரமும், உன் வீரச்சுடற்கு முன் மங்கித்தான் போய்விட்டது. உன் வீர ரத்தம் அல்லவோ அப் புண்ணிய பூமியில் சிந்தியிருக்கிறது. அம் மண்ணினின்றும் எழுவார்கள். வாழ்வைவிட்டு ஓடுகிற விதுரர்களுக்கு இனிக்காலமில்லை நிராசில் நிறுத்து நிறுத்துத் தர்மம் செய்கிற சோதனையில் திகைத்து நிற்கும் என்போன்றவர்கள் வேண்டாம்......'' என்கிறார் பீஷ்மர்.

உத்தராயணம் பிறக்கிறது. சுக்கில பக்ஷமும் வந்துவிடுகிறது. நிலவு வெள்ளத்தில் உலகம் தோய்ந்து கிடக்கிறது. அமரநாட்டு மணிமாடமொன்றில் நிற்கிறான் ஒரு வாலிப வீரன். அவன் கண்கள் போரொலி அவிந்து சோக அமைதி காட்டும் குருக்ஷேத்திரத்தை நோக்கி விரைகின்றன.

நெய், மாலைகள், வாசனை திரவியங்கள், பட்டுக்கள், சந்தனக்கட்டைகள், அகிற்கட்டைகள் இவைகள் வந்துகொண்டிருக்கின்றன. தம் தம்பிமார்கள், தாயார், குந்தி, திருதராஷ்டிரன், கிருஷ்ணன், விதுரர், யுயுத்ஸு—இவர்களுடன் தர்மபுத்திரர் வருகிறார். புரோகிதர்களும், ரிஷிகளும் அம்புப் படுக்கையில் கண் வளர்கிற பீஷ்மரைச் சுற்றி நிற்கிறார்கள்.

"பிதாமகரே, நான் யுதிஷ்டிரன் இதோ வணங்குகின்றேன். தாங்கள் குறித்த காலத்தில் அக்கினியை எடுத்துக்கொண்டு எல்லோரும் வந்திருக்கிறோம்" என்று தர்மபுத்திரர் பீஷ்மரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கண்களைத் திறந்து சுற்றியிருக்கும் பரதவம்சத்தவரெல்லோரையும் பார்த்து நீருண்ட மேகக்குரலில் பேசுகிறார் பீஷ்மர்.

"தர்மபுத்திரா, நீ குறித்த காலத்தில் வந்ததைப்பற்றிச் சந்தோஷிக்கிறேன். நீதான் தர்மத்தின் சூட்சுமத்தை நடத்திக் காட்டினாய்; என் விஷயம் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது."

பிறகு அவருடைய பார்வை திருதராஷ்டிரன் மீது விழுகிறது.

"திருதராஷ்டிரா, நீ நுட்பமான சாஸ்திரங்களை அறிந்திருக்கிறாய். நடந்ததைப் பற்றி விசனியாதே. தர்மபுத்திரனை உன் புத்திரனாக நீ கருதவேண்டும். அவன் அஹிம்சையேதர்மமாகக் கொண்டவன். உன் பிள்ளைகள் கோபத்தினாலும் பொறாமையினாலும் மாண்டனர். எல்லாம் பகவானுடைய சங்கல்பம்; அப்படி ஆகிவிட்டது; நீ வருத்தப்பட வேண்டாம்."

வாசுதேவனைப் பீஷ்மர் நோக்குகிறார்.

"என் அப்பனே, பூபாரம் தீர்த்த புயல் வண்ணா; உன்னையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் பாண்டவர்களைக் காப்பாற்ற வேண்டும். துரியோதனனுக்கும் அப்போதே சொன்னேன். 'எங்கே வாசுதேவர் இருக்கிறாரோ, அங்கே தர்மம் இருக்கும். எங்கே தர்மம் இருக்கிறதோ அங்கே ஜயமிருக்கிறது,'

என்று பலவாறு கூறினேன். அவ் வார்த்தைகளைக் கேளாமல் அவன் வேருடன் அழிந்தான். எனக்கு விடையளிப்பாயாக. நீதான் உண்ணுஞ் சோறும், பருகுநீரும். எனக்குத் தாரகமும் நீயே," என்று இறைஞ்சுகிறார் பீஷ்மர்.

"மன்னவரே, உமக்கு நான் அனுமதி கொடுக்கிறேன். நீர் பரிசுத்தமானவர். நல்ல லோகத்தை அடையப் போகிறீர் தந்தையாரிடம் நீர் பக்திவைத்ததுபோல ஒருவரும் இவ்வேழு உலகத்திலும் வைத்ததாக நான் அறியவில்லை. அந்தப் பக்தியினால் தர்மராஜன் ஒரு சேவகன் போல வணங்கி உமது வசமிருக்கிறான்," என்று கூறுகிறார் வாசுதேவர்.

வாசுதேவருடைய வார்த்தைகள் அவருடைய உள்ளத்தில் அமிர்தம் போலப் புகுந்து தொனிக்கின்றன். பாண்டவர்களையும் திருதராஷ்டிரன் முதலானவர்களையும் பார்த்து "என் ஆவி பிரியப்போகிறது. அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும். நீங்கள் சத்தியத்திற்கே முயலவேண்டும். சத்தியந்தான் சிறந்த பலனை யளிக்கும். எப்பொழுதும் மனத்தை யடக்கி அன்பை முக்கியமாகக் கருதவேண்டும்," என்கிறார் பீஷ்மர்.

சிறிதுநேரம் பேசாமலிருந்து அவர் பிராணனை அடக்கி அதைப் பிரம்மரந்திரத்தின் வழியாய் விடுகிறார். நிலவு வெளிச்சத்தை வெண்மையாக்கிக் கொண்டு ஒரு சோதிப் பிழம்பு மேலே செல்லுகிறது.

பல சந்தனக்கட்டைகளையும், பலவித வாசனைகளையும் கொண்டுவந்து சிதை செய்கிறார்கள். தர்மபுத்திரரும் திருதராஷ்டிரரும் அழுதுகொண்டு பட்டுகளாலும், பூமாலைகளாலும் பீஷ்மரை மூடுகிறார்கள். யுயுத்ஸு அவருக்குக் குடை பிடிக்கிறான். பீமசேனனும் அருச்சுனனும் சாமரங்கள் போடுகிறார்கள். நகுல சகாதேவர்கள் க்ரீடம் வைக்கின்றனர். திருதராஷ்டிரன் தருமபுத்திரரோடு காலண்டையில் இருக்கிறான். இறந்துபோன ஒரு பெரும் போர் வீரனுக்குச் செய்யவேண்டிய மரியாதைகள் எல்லாம் சிறப்பாக நடைபெறுகின்றன.

அக்னியில் ஹோமம் நடக்கிறது. சாமகானம் பாடுகிறார்கள். பிறகு தீ மூட்டுகிறார்கள். வெண்ணிலவிலே ஆயிரம் நாக்குகளை நீட்டிக்கொண்டு செந்தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கிறது.

எல்லோரும் ஜலதர்ப்பணம் செய்கிறார்கள். அந்நீரிலிருந்து ஒரு ஸ்திரீ புலம்பிக்கொண்டு எழுந்திருக்கிறாள்.

"என் மனங் கல்தானா? என் பிள்ளையைச் சிகண்டி கொன்றான் என்று கேட்கச் சகிக்கவில்லையே. பலத்தில் இவருக்குச் சமானமானவன் ஒருவருமில்லையே. எடுத்த விரதத்தை விடாத மஹா வீரனை என் பிள்ளைக்கு இப்படியா வரவேண்டும்?" என்று கங்காதேவி புலம்புகிறாள்.

"நீ துயரப்படாதே; அவர் சிகண்டியினால் கொல்லப்படவில்லை, தனஞ்சயன்தான் அவரைக்கொன்றது. பீஷ்மரை அடிப்பது சாதாரணக் காரியமில்லை. தேவேந்திரனே நேரில் வந்தாலும் முடியாது. எல்லாத் தேவர்கள் சேர்ந்தாலும் அவரை வெல்லுவது சாத்தியமில்லை. உன் பிள்ளை உயர்ந்த பதவி அடைந்துவிட்டார் துயரமற்றிரு" என்று வாசுதேவர் அவளைத் தேற்றுகிறார்.

கங்கையின் புலம்பல் நின்றுவிடுகிறது. மஹாவீரனும் மஹா மேதாவியுமான பீஷ்மருடைய உடல் வெந்துகொண்டிருக்கிறது. மௌனத்தில் ஆழ்ந்த பரத வம்சத்து அரசர்கள் விடுதிரும்புகிறார்கள் குருக்ஷேத்திரத்தில் மறுபடியும் அதே சோக அமைதிதான்.

ஆனால் அமரநாட்டில் பரபரப்பு. எங்கே பார்த்தாலும் தோரணங்களும்

கொடிகளும் காற்றில் அசைந்தாடு கின்றன. தேவதுந்துமிகள் முழங்கு கின்றன. கின்னரர்கள் மதுரமான கீதங்களைப் பாடுகின்றார்கள். முன் மணி மாடத்தில் நின்று கீழே நடந்த காட்சி யைக் கவனித்த வாலிபவீரன் மேல் நோக்கிவருகின்ற ஒரு மஹாபுருஷனின் சோதிப்பிழம்பின் திசைநோக்கி அநேக வீரர்கள் புடைசூழச் செல்லுகிறான்.

அச் சோதிப்பிழம்பு கொஞ்சங் கொஞ்சமாய் ஓர் உருவை அடைகிறது. ஒரு வயதுசென்ற வீரர் அவர்கள் முன் தோன்றுகிறார். அவர் முகத்தில் சொல்ல முடியாத சோகக் குறிப்பைப் பார்க் கிறான் தலைமைவகிக்கிற அவ்வாலிப வீரன். அப்பெரியவரைப் பார்த்தவுடன் அவருக்கு மாலை யிடுகிறான். இட்டதும் "அப்பா குழந்தாய், உன்னைத்தான்காண எனக்கு ஆசை," என்று கண்களில் நீர்ததும்ப அவனைக் கட்டிக்கொண்டார் அப்பெரியவர்.

இந்த அபூர்வ காட்சியைக்கண்ட அமரநாட்டு வீரர்கள் இவர்களைச்சுற்றிச் சற்று தூரத்தில் சித்திரத்தில் அலர்ந்த தோற்றம்போல அசைவற்று நிற்கிறார்கள்.

"என் தாத்தா, என்னமோ பெருஞ் சிந்தையில் ஆழ்ந்திருக்கிறீர்களே கீழே பூமியில் என் தகப்பன்மார்கள் தங்க ளிடத்தில் காட்டிய பக்தியைப் பார்த் தால் தெய்வங்களுக்குக்கூட அவ்வளவு நடந்திராது என்று தோன்றும். என்னு டைய பெரிய தகப்பனார் தர்மபுத்திரர் உங்களைப் புகழ்ந்து பேசுகிறார். வாசு தேவரோ உமக்குப் பாவம் ஒன்றுமில்லை பரிசுத்த ஆத்மா என்று சொல்லுகிறார். கங்காதேவி அழுகிறபொழுது உங்களைப் புகழ்ந்து பேசுகிறார் அவர், இங்கேயோ உங்களை வரவேற்க பல்லாயிரம் வீரர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் உங்கள் முகத்தில் ஒருசோகம் படர்ந்திருப்பா னேன்? அதன் காரணத்தைத் தெரிவிக்க வேண்டும்," என்று கேட்கிறான் அவ் வாலிபன்.

"பிறருடைய எண்ணத்தில் குழந்தாய் அபிமன்யு, நான் ஒரு பெரியவனாய் விளங்கலாம். என் மனத்தில் சமாதானம் இல்லை. ஒருசம்பவம் என் மனத்தை எப்பொழுதும் துடிக்கும்படி செய்து வருகிறது. உன்னிடத்தில் சொன்னால் தான் அவ்வேதனை நீங்கும். உன்னு டைய தாயாரைத் துஷ்டர்கள் மஹா வீரர் நிரம்பிய சபைநடுவே மானபங்கம் செய்கிறபொழுது, நாங்கள் அவளை ரக்ஷிக்காமலிருந்துவிட்டோம் அது என் ஹிருதயத்தை அறுத்துக்கொண்டே யிருக்கிறது," என்றார் பீஷ்மர்.

"தர்மத்திற்காகப் பாடுபடுகிற பெரி யோர்கள் என் சபையில் ஒன்றுஞ் செய்யாமல் பார்த்துக்கொண்டிருந்தீர் கள்? என்று வினவுகிறான் அபிமன்யு.

"தர்மத்தின் சுவரூபம் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிப்பது சாதாரணக் காரியமில்லை. அதன் நுட்பத்தைத் துருவி ஆராய முயலுகிறோமே, அந்த முயற்சி தான் பெரிது. எனக்குத் தர்மத்தின் யதார்த்த ரூபம் தெரியவில்லை யென்று சொன்னேன். உன் பெரிய தகப்பனார் தர்மபுத்திரர் செய்கையில் காண்பித்து விட்டார். பீமசேனன் அவர்களைத் தன் கதையினால் அடிக்க எழுந்தான். உன் தகப்பன் தனஞ்ஜயனுடைய கை காண்டீப மிருக்கிற இடத்திற்கு விரைந் தது. இவ்விரு வீரர்களையும் அடக்கினார் அவர்."

"இப்படித் தர்க்கித்துக்கொண்டு போனால் எந்தக் காரியந்தான் நடை பெறும்? ஏதோ ஒன்றைத் துணிந்து காரியத்தில் இறங்கிவிடுவதுதானே வீரர் களுக்கு லக்ஷணம்?"

"அப்பா, பாலியம் நீ, அப்படிப் பேசு கிறாய். ஆனால் ஒன்றை நினைக்கிற பொழுது ஆயிரம் விஷயங்கள் என் மனத்தின்மீது மோதி அடிக்கின்றன அதில் குழப்பமடைந்தேன்."

"அதிக சந்தேகம் ஏற்பட்டால் அவன் அழிந்து போய்விடமாட்டானா?

"ஆமாம் உண்மைதான். சந்தேகத்திலும் ஒரு சந்தேகம் இருக்கவேண்டுமென்றதை அறிவேன். இருந்தாலும் தர்மத்தின் சூட்சுமம் அறியாது காரியத்தில் இறங்குவது தவறில்லையா? சந்தேகங்கள் எங்கிருந்தோ வந்துவிடுகின்றனவே! உன் தகப்பனுக்குச் சந்தேகங்கள் வந்து காண்டீபத்தைக் கீழே எறிந்துவிட்டானே, வாசுதேவர் இல்லாத போனால் என்னைப்போலக் குழப்பமடைந்திருப்பான். அல்லது விதுரரைப்போல ஓட்டம் பிடித்திருப்பான்."

"சில சமயத்தில் சந்தேகமின்றிப் பேசுகிறீர்கள். 'எந்த இடத்தில் வாசுதேவர் இருக்கிறாரோ அந்த இடத்தில் தர்மம் இருக்கும், எந்த இடத்தில் தர்மமிருக்கிறதோ அந்த இடத்தில் ஜயமிருக்கும்,' என்று சொன்னீர்களே"

"ஆமாம், சொன்னேன். ஆனால் விதி ஒன்று தனித்து நின்று சதிசெய்கிறதே அதை மாற்றமுடியுமா?"

"விதியா! விதிக்கு விதியாய் நிற்க வேண்டாமா, விரவாழ்வு நடத்துகிற நாம்?"

"முடியாது அப்பா, குழந்தாய் அவனுடைய சங்கல்பத்தை மாற்றவே முடியாது. அந்த மாயக்கண்ணன் பண்ணுகிற கூற்றை யார் அறிய முடியும்? சங்கையும் ஊதுவான். சாட்டையும் எடுப்பான்."

"மாயக்கண்ணன் சேர்ந்த கட்சியில் தாங்களும் சேர்ந்துவிடக்கூடாதா?"

"அதர்மம் ஜயிக்காது என்று நன்றாய்த் தெரியும். கௌரவர்களை நான் அடைந்ததனால் தர்மத்திற்குக் குறைவுவருமோ?"

"சேர்ந்தவரையில் தர்மத்திற்குத்தடை போட்டதுதானே"

"இல்லை அப்பா, இல்லை. நாங்களெல்லோரும் மேகங்கள் மாதிரி. உண்மை ஒளி இருண்ட மேகத்தினிடையே அதிக ஒளிவிடுமல்லவா? குழந்தாய், இன்னொரு விஷயத்தை நீ மறந்துவிட்டாயே அவர்களுடைய உப்பை நான் தின்றிருக்கிறேன்."

"தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு எல்லாவற்றையும் விடவேண்டாமா?"

"ஆமாம் விடவேண்டியதுதான். அப்படி அவர்களை நரகத்தில் உழலவிட்டு தர்மத்தைச் சார்ந்து நான்மட்டும் தப்ப மனமில்லை. அவர்களோடு நானும் உழல விரும்பினேன்."

"அப்படியா! என்னை மன்னிக்க வேண்டும். தர்மங்கூட உங்களைக் கைவிட்டிருக்கும். உங்கள் கருணையல்லவோ இங்கு தங்களை வரும்படி செய்தது? மன்னித்தருள வேண்டும்."

"என்ன மன்னிப்பு? தக்கதே கேட்டாய்."

"அதிருக்கட்டும், தாத்தா, குருக்ஷேத்திரத்தில் அரும்பாடுபட்டு நாட்டப்பட்ட அறக்கொடி அவர்களுக்குப்பின் மண்ணில் வீழ்த்தப்படுமோ? அல்லது அநேக இன்னல்களுக்கிடையே அது எப்பொழுதுத் தலைநிமிர்ந்து ஆடிக்கொண்டிருக்குமா?"

"தர்ம விஷயத்தில் கொஞ்சங்கூட சந்தேகம் வைக்கவேண்டாம் நீ. 'தர்மத்திற்கு குறைவு' வருகிறபொழுது நான் வருவேன்,' என்று சபதம் செய்த கண்ணனுடைய வாக்கும் பொய்க்குமோ?"

"என்னுடைய தாய் மானபங்கம் அடைந்தது மாதிரி நான் பிறந்த நாடு அடையக்கூடாதென்ற கவலைதான் என்னை மறுபடியும் தங்களை வினவும்படி தூண்டுகிறது. முக்காலத்தையும் அறிந்த பெரியவரே, ஞானதிருஷ்டியால் பார்த்தருளவேண்டும்."

"அப்பா கவலைவேண்டாம். புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போய்விடுமா? உன்னை வளைத்த வியூகத்தை நிமிர்ந்து சிங்கம்போலத் தீயெழ நோக்கினாய். உன்னுடைய காம்பீரியம் என் கண் முன்னே நிற்கிறது. உன் தகப்பன் அருச்சுனன் வீரமும், உன்வீரச்சுடற்கு முன் மங்கித்தான் போய்விட்டது. உன் வீர ரத்தம் அல்லவோ அப் புண்ணிய பூமியில் சிந்தியிருக்கிறது. அம் மண்ணிலின்றும் எழுவார்கள். வாழ்வைவிட்டு ஓடுகிற விதுரர்களுக்கு இனிக்காலமில்லை. திராசில் நிறுத்து நிறுத்துத் தர்மம் செய்கிற சோதனையில் திகைத்து நிற்கும் என் போன்றவர்கள் வேண்டாம். தர்ம சூட்சுமம் தெரிந்தும் புத்திரபாசத்தினாலும், பிரகிருதி தோஷத்தினாலும் திருஷ்டிமங்கின திருதராஷ்டிரர்களும் வேண்டாம். இதோ நீண்ட காலத்திரைமீது உன்னைப் போல அறக்கொடி பிடித்தெழும் வீரர்களின் நிழல்களை நான் காண்கிறேன். கவலைப்படாதே."

பீஷ்மர் முகத்தில் ஓர் அமானுஷ்யமான அமைதியும் ஒளியும் தெரிகின்றன. அபிமன்யுவும் மற்ற வீரர்களும் ஆச்சரியத்தில் அசைவற்று அம் மஹாபுருஷனைப் பார்த்தவண்ணமே நிற்கிறார்கள்.



# ஒரு நாள் வேலை

## ந. சிதம்பரசுப்ரமண்யன்



**இரண்டணா என்ன? ஐந்தணாவையே பொருட்படுத்தாமல் வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். காலையிலிருந்து சாப்பிடப் போகும் வரையில் பார்த்த வேலைக்கு எனக்குக் கிடைக்கும் சம்பளம் அது. வண்டி புறப்பட்டு வேகமாகக் கிளம்பிற்று 'நல்ல குதிரை சீக்கிரம் போய்விடலாம்' என்று நினைத்தேன். ஒருசந்துப்பக்கம் வந்தவுடன் திடீரென்று நின்றது. அதற்கப்புறம் வண்டி நகரவில்லை...**

எனக்கு மிகவும் ஆத்திரமாயிருந்தது. மணி பதினொன்றேகால் (அதாவது புதுமணிப்படி) காலையில் எட்டரை மணிக்கு வந்தவன், இந்நேரம் வரையிலும், சாப்பிட்ட நேரம் போக, புள்ளி விவரங்களையும், தொகைகளையும்வைத்துக் கொண்டு அழுதாகிவிட்டது. நல்ல பிழைப்பு எனக்கு. மிகவும் அருவருப்பாயிருந்தது. படுக்கையிலிருந்து எழுந்திருந்ததுமுதல், திரும்பிப் படுக்கைக்குப் போகும் வரையில் வேலை—வேலை—வேலை.

குடும்ப ஜோலிகளைக் கவனிக்க நேரமுண்டா? குழந்தையோடும் மனைவியோடும் அவகாசமாய் பேசிக்கொண்டிருக்க நேரமுண்டா? புஸ்தகங்கள் படிக்கவும், அறிவை விசாலப்படுத்திக் கொள்ளவும், ஈசுவர சிருஷ்டியின் அற்புதங்களைக்கண்டு ஆனந்திக்கவும் ஓய்வு உண்டா? கிடையாது. சித்ரகுப்தனுக்கு மேலாக நிமிஷங்களைக் கணக்குப்பண்ணிக்கொண்டு, சாகும்வரையில் வயிற்றுக்காகப் பாடுபட்டுக்கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டியதுதான். இதுதான் வாழ்க்கை!

தினசரி வீட்டிற்குப்போகும்போது மனம் கசந்து இருக்கும். அன்றும் அப்படித்தான் இருந்தது. 'இந்த உலகத்திலேயே ஒரு நீதி கிடையாது. வேலைக்குத் தகுந்த கூலி கிடையாது. 'தகுடுதத்தம்' பண்ணுகிறவனுக்குத்தான் காலமாயிருக்கிறது. 'பொய்யும் புனை சுருட்டும், அகட விகட சாமர்த்தியம் என்ற மாறுவேஷத்துடன் வெகு நாணயமாக செலாவணி ஆகிறது. என் மனசாக்ஷிக்கு மாறுபெயர் சாமர்த்தியமின்மை!' என்று உலகப்போக்கை நினைத்துகொண்டே போனேன். மேலதிகாரிகளிடமிருந்த அதிருப்தி உலகத்திலேயே ஒரு தாங்கலை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது.

வெளியே, 'பிளாக் அவுட்' குல்லாய் போட்டுக்கொண்டிருந்த எலக்ட்ரிக் விளக்குகளிலிருந்து, திட்டுத் திட்டாக வெளிச்சம் விழுந்துகொண்டிருந்தது. தெருவில் நடமாட்டமேயில்லை. வானத்தில் நக்ஷத்ரங்கள் லக்ஷக்கணக்கில் மின்னிக் கொண்டிருந்தன. என்ன நிசப்தம்! என்ன அமைதி! அது என்னைக் கேலிசெய்வது போலிருந்தது.

பசி வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்தது. ஐந்தரை மணிக்கு குடித்த காப்பி, வயிற்றுக்குள்ளேயே உட்கார்ந்திருக்கிறதா? அது ஜீரணமாகி வெகு நேரமாகிவிட்டது. வீடு ஆபீசிலிருந்து ஒண்ணரை மைல் தூரத்திலிருக்கிறது. வாடகை சௌகர்யத்திற்காக அங்கு ஜாகை வைத்திருந்தேன். அவ்வளவுதூரம் போகவேண்டும். வாடகை சௌகர்யத்திற்குப்பார்த்தால் இரவில் திரும்பிப் போவது ரொம்ப அசௌகர்யமாயிருக்-

கிறது. சைக்கிள் வாங்கிக்கொள்வோ மென்றால், ஐம்பது, அறுபதுக்கு யாரிடம் போவது?

'பைல்'களிலிருந்து மூளை வெளியே வந்தவுடன் வீட்டு ஞாபகம் வந்தது. ஆம், வீட்டில் ஆத்துக்காரிக்கு வயிற்று வலி எப்படியிருக்கிறதோ? வேலை, வேலை என்று சொல்லிக்கொண்டு, குடும்பப் பொறுப்பிலிருந்தே ஓடி ஒளிந்து கொள்கிறேன் நான். அவள் என்ன கஷ்டப்படுகிறளோ?

தெருவில் ஒரு கடைகூடத் திறக்கக் காணும். வெற்றிலை பாக்குக் கடைகூட சாத்தியாகிவிட்டது. "வெற்றிலை பாக்குக்கடை தேவலை எங்கள் ஆபீசிற்கு" என்று திட்டிக்கொண்டேன் இரவு நேரத்திற்கு வழி தெரியாமல் நீண்டுகொண்டேயிருந்தது. ஜட்கா வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. 'நாழியோ ஊர்ப்பட்டதாகிவிட்டது. நடந்து போவதற்குள் விடிந்துபோய் விடும்போலிருக்கிறது. இன்று வண்டியிலே போய்த் தொலையலாம்' என்று தீர்மானித்து ஜட்காவைக் கூப்பிட்டேன்.

"என்னப்பா செக்காலைக்கு" என்றேன்.

"ஐந்தணு சாமி"

"மூணணுத் தானேடா"

"ரொம்ப நேரமாயிடுத்து. விளக்கணைக்கும் நேரம் வந்துடுச்சு. இரண்டணுவை பார்க்காதேயுங்க, ஏறுங்க"

இரண்டணு என்ன? ஐந்தணுவையே பொருட்படுத்தாமல் ஏறிஉட்கார்ந்தேன் காலையிலிருந்து சாப்பிடப்போகும் வரையில் பார்த்தவேலைக்கு எனக்குக்கிடைக்கும் சம்பளம் அது!

வண்டி புறப்பட்டு வேகமாக கிளம்பிற்று. நல்ல குதிரை சீக்கிரம் போய் விடலாம் என்று நினைத்தேன். ஒரு சந்துப்பக்கம் வந்தவுடன் திடீரென்று நின்றது. அதற்கப்புறம் வண்டி நகரவில்லை. வண்டிக்காரன், சத்தம்போட்டுக் கொண்டு சவுக்கினல் அடித்துக்கொண்டிருந்தான். ஆனல், குதிரை அசையவில்லை.

"என்னப்பா எடக்குப் பண்றது" என்றேன்.

வீட்டிற்குச் சீக்கிரம் போவதற்கு வண்டியை வைத்தால் இவ்விதம் நேர வேண்டுமா? வண்டி பின்னல் நகர்ந்தது. எலக்ட்ரிக் லாந்தலில் முட்டிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமே என்று கவலையடைந்தேன். வண்டிக்காரன் ஒரு சவுக்கடி கொடுத்தான். குதித்துக் கொண்டு முன்னல் தாவி நின்றது. நல்லவேளை கம்பத்தில் மோதவில்லை.

"அப்பா நான் இறங்கிக்கொள்ளவா" என்றேன்.

"நீங்க சும்மா இருங்க சாமி. இதோ போகச்சொல்கிறேன்" என்று தன்னுடைய நீண்ட சவுக்கினல் பிரயோகங்களை அதிகப்படுத்தினன் வண்டிக்காரன்.

எனக்கும் குதிரையின்பேரில் அளவு கடந்த கோபம் வந்தது. என் அவசரம் தெரியாமல், அகால வேளையில் பக்கர் செய்வது கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. "நன்றுய்சாத்து. குதிரைகளே இப்படித்தான். குதிரைவண்டியை நம்பி ஒருவன் புறப்படவே கூடாது" என்றேன்.

வண்டிக்காரன் காலினல்உதைத்தான். கையினல் அடித்தான். சக்கரத்தில் கம்பைக் கொடுத்துச் சத்தம் செய்தான் சவுக்கை எடுத்து வீசினன். ஒன்றும் பலிக்கவில்லை. வண்டிக்காரன் கோபத்துடன் கீழே இறங்கினன். எனக்கு பயமாய்விட்டது. உயிரோடு வீட்டிற்கு சேருவோமா என்றுகவலை வந்துவிட்டது.

"வந்தவரையில் நான் வாடகை தந்து விடுகிறேன், என்னை இறக்கி விட்டுவிடு

நடந்தாவது விட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறேன்" என்றேன்.

"வெறுமனே இருங்க சாமி. கழுதைப் பயவிட்டுது, போகாதபோனால் யார் விட்டுடப்போறாங்க" என்று காலால் ஒரு உதை கொடுத்தான்; மந்திரங்களைப் போல் சில வசவுகளை உச்சரித்தான். புது தினுசான சவுக்கடிகளை பிரயோகித்தான். வண்டி நகர்ந்தது. லகானைப் பிடித்துக்கொண்டே அடித்துவந்தான். குதிரை ஓட ஆரம்பித்தது. அவனும் கத்திக்கொண்டே விரட்டிக்கொண்டு வந்தான். குதிரை பறக்க ஆரம்பித்தது.

"இனிமேல் போயிடுங்க" என்றான் எனக்கும் மனதில் தைரியம் வந்தது.

"இந்தக் குதிரைகளே இப்படித்தான்" என்று குதிரைகளைப்பற்றிய என் அபிப்ராயத்தை மறுபடியும் சொன்னேன். வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

"இல்லிங்க சாமி, இது எடக்குப் பண்ணவே பண்ணுதுங்க. ரொம்ப நல்ல குணமுங்க. லாந்தக்கம்போரம் சந்து இருந்ததே அங்கே என்வீடு. அந்த இடம் வந்தவுடன் வீட்டு ஞாபகம் வந்திருச்சு —விட்டுக்குப் போகணும்னு இழுத்துக்கிட்டுப்போச்சு. நேரமாகுதோயிலிங்க" என்றான்.

"அடேடே, அதற்குத்தான் அங்கே மக்கார் பண்ணித்தோ" என்றேன். எனக்கு அப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. ஆம், அதற்கும் நேரமாகிவிட்டது. குதிரையின் மேலிருந்த கோபம்மாறி அநுதாபம் உண்டாயிற்று.

"இன்னும் வெகுநேரம் சவாரியடிப்பியோ?" என்றேன்.

"இல்லிங்க, நேரமாயிடுத்து விட்டுக்கு போகவேண்டியதுதானுங்க" என்றான்.

பிறகு, ஒரு தகராறுமில்லாமல், வீடு வந்து சேர்ந்தது. வாடகையைக் கொடுத்தேன். வாங்கிக்கொண்டு திரும்பினான் வண்டிக்காரன்.

நான் விடுவந்துசேர்ந்தேன். குதிரையும் விடுபோய்ச் சேர்ந்திருக்கும்.

இருவருக்கும் ஒருநாள் வேலை முடிந்தது.



# கற்பா கனவா?

**'தேவதத்தன்'**

"பெண்கள் மனநிலை ஆண்பிள்ளைகளுக்கென்ன தெரியும்? கனம் சாஸ்திரியாரே சொல்லியிருக்கிறாரே, 'ஸ்திரீகளைப்பற்றி நம் நூலாசிரியர்கள் உள்ளதை உள்ளபடி அறிவார்களா? அதற்கு எவ்வளவு நெருங்கிப் பழகவேண்டும்? ஆடவர் எழுதும் புத்தகங்களில் பெண்களைப்பற்றிய கருத்துக்கள் தத்துவமாய் இருக்க மாட்டா என்று? ஆகையால் எங்கள் பாலருக்கு எது பத்தியமென்று நாங்கள் சொல்லுகிறோமோ அதை நீங்கள் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று ஜெயபேரிகை கொட்டலாம். கொட்டட்டும். ஆனால் சாஸ்திரியார் ஆண்பிள்ளை எழுத்தாளர்களை அவ்வளவு கையாலாகாதவர்களென்று சொன்னதற்குத்தான் நியாயம் விளங்கவில்லை......

சென்ற மாதம் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தமது பிறந்தவூராகிய வலங்கைமானைப்பற்றிய பாலிய நினைவுகளை வியாஸரூபமாக **கலைமகள்** பத்திரிகையில் வெகு அழகாக வருணித்தார். அதில் 'பெண்களின் உரிமை' என்ற விஷயத்தின் சம்பந்தமாகப் பல அரிய கருத்துக்களை வெளியிட்டு இறுதியில் பின்வருமாறு கூறினார்:

"கற்பு விஷயத்தில் ஆடவர்களைவிடப் பெண்டிர் ஐம்பது மடங்கு மேலானவரென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். இது நம் ஜாதிக்குப் பெருமைதான்.... அவர்களுக்கிவ்வளவு உயர்வு வருவதற்குக் காரணம் பெரும்பாலும் நாம் ஏற்படுத்தியிருக்கும் நிர்ப்பந்தமும் கட்டுப்பாடுமே. இவைகள் வரவர தளர்ந்து வருகின்றன. நவநாகரிகம் வேண்டுமென்று ஸ்திரீஜாதிக்கு முன்னேற்றம் தேடுவோர், அவர்களுடைய நடத்தையைப்பற்றி ஏதாகிலும் காதில் பட்டால், இது தீராதென்று மனத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொள்வது அவசியம். கெடுதல் கலவாத நன்மை பிரமனுடைய கற்பனையிலில்லை."

இதைப்படித்ததும் நமக்குக்கொஞ்சம் திகைப்பாகவே யிருந்தது. வெகுவாக நம்மைப்போலவே படித்தவர்களையோரும் திடுக்கிட்டிருக்கலாமென்று எண்ண இடமிருக்கிறது. ஆகையால் மேற்கண்ட அபிப்பிராயங்களைச் சற்று ஆராய்வோம்.

பிரமன் தலையில் பழிசுமத்துவது அப்புறம் ஆகட்டும். பெண்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்றால் நடத்தை முன்பின்தான் இருக்கும் என்று வேதாந்தம் படிக்குமுன், 'முன்னேற்றம்' என்ற பதத்திற்கு உண்மைப் பொருள் என்ன என்பதை விசாரித்தல் அவசியம். நவநாகரிகத்தில் தேர்ச்சியே முன்னேற்றமாகுமா? அதுதான் முன்னேற்றம் என்று எண்ணுபவர், ஸ்திரீகளின் நடத்தையைப் பற்றிப் புகார் ஏற்பட்டால், அது தீராதென்று எண்ணிக் காதில் வாங்காமலிருப்பது அவசியம் என்று சாஸ்திரியார் சொல்லுகிறார். ஆனாலும் கற்பே நம்மாதருயர்வுக்குக் காரணமென்றும் கொண்டாடுகிறார். கற்பு அப்படி மெச்சத்தகுந்த பொக்கிஷமாகில், நவநாகரிக மோகத்தால் அது சிதறினாலும் அதுபற்றி வருந்துவதில் உபயோகமில்லை யென்று அவர் கூறுவதுதான் பொருத்தமாயில்லை.

இன்னொரு விஷயமும் கவனிக்கத் தகுந்தது. முப்பது நாற்பது வருஷங்களுக்குமுன் கிராம வாழ்க்கையில், அதுவும் முக்கியமாக பிராம்மணர் வகுப்பில், காணப்பட்ட சில ஸழகப்

பழக்க வழக்கங்களை—அதாவது மாமி அதிகாரம், குடும்பக் கட்டுப்பாடு, ஆடவரும் பெண்டிரும் பகிரங்கமாகக் கலந்து பேசிச் சல்லாபம் செய்யாமலிருப்பது இவைபோன்றவைகளை—விஸ்தரித்து, அவைகள் ஸ்திரீகளின் சுயேச்சைக்கு முரணக விருந்தன என்று உணர்த்தி, பிறகு இந்த நிர்பந்தங்களும் கட்டுப்பாடுகளும் ஒரு விதத்தில் நன்மையே செய்தன என்று சாஸ்திரியார் முடிவுசெய்கிருர். அது எப்படி என்ருல், நமது மாதர் கற்பரசிகள் என்று புகழ்பெற்றதற்கு மேற்கூறிய நிர்பந்தங்களும் கட்டுப்பாடுகளுமேதான் முக்கியக் காரணம் என்கிருர். இதை நமது ஜனங்களின் மனப்பான்மையை அறிந்தவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் கொடுமையானவை யென்றும் கேடு விளைவித்தன வென்றும் மொத்தமாக அவைகளை தாக்குவதே முன்னேற்றமடைந்தவருக் கடையாளமாக தற்காலம் எண்ணப்படுகிறது. சாஸ்திரியார்கூடத் தம் வியாசத்தில் இவ்வெண்ணம் தொனிக்கத்தான் செய்திருக்கிருர். ஆனல் அப்படி ஒரேயடியாய்ப் பழையகாலக் கட்டுப்பாடுகளை நிந்திப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை. எந்த மேம்பாடுடைய சட்டதிட்டமும் விவேகமற்றவர்கள் கையில் அகப்பட்டால் பிறருக்கு இம்சையைத்தான் செய்யும். பிறர் சுகித்திருப்பதைக் கண்டு பொருமைப்படும் ஸ்திரீ தன் நாட்டுப்பெண் புருஷனேடு கூடி இன்புறுவதைத் தடுக்கப் 'பொட்டைக்காருபார்' செய்யலாம். அதைக்கண்டு மாமிகளே க்ரூர ஜந்துக்கள் என்று ஒருவன் ஊகித்தால் அவனுக்கு உலகம் தெரியாதென்றுதான் சொல்லவேணும். இதை சாஸ்திரியாரே ஒப்புக்கொள்ளுகிருர்.

விவேகிகளான பெரியோர்களுக்கு அடங்கி நடக்கும் சிறுவர்கள் கொடுங்கோல் மன்னன் ஆளுகைக்குட்பட்டவர்கள்போல் தங்கள் தலைவிதியை நொந்து கொள்ள எக்காரணமும் எப்பொழுதும் நமது ஸமூகத்தில் இருந்ததில்லை. ஒரு வீட்டில் நாலு ஐந்து பிள்ளைகளும் நாட்டுப்பெண்களும் அவர்கள் குழந்தைகளும் வயதான தாய் தந்தையரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள் என்ருல், தாய் தந்தையர் பக்ஷபாதமின்றியும், அன்போடும் தங்கள் க்ஷேமத்தைக் கருதியுமேதான் நிர்பந்தங்களையும் கட்டுப்பாடுகளையும் விதித்தார்கள் என்று கீழ்வரிசைப்பட்ட எல்லோரும் மனப்பூர்வமாக நம்பியிருந்திருக்க வேண்டும் இக் கட்டுப்பாடுகள் உலக அனுபவக் குறைவால் ஏற்படக்கூடிய தீங்குகள் வரவொட்டாமல் தடுக்க வல்லன என்பது அவர்களுக்குத் தலைமுறை தத்துவமாய் வந்த ஞானம். கற்பிற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் விரோதிகளான மனிதர்கள் எல்லாச் சமூகங்களிலும் உள்ளவர்களே. அவர்கள் சேஷ்டைகளுக்கு இடங்கொடாமலிருக்கவேண்டுமென்று நியமிக்கப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள் எல்லாத்தேசங்களிலும் காணலாம். நமது நாட்டில் அவை சற்று அதிகம் என்ருலும், அவைகளாலேயே நமது பெண்மணிகளின் கற்புக் காப்பாற்றப்பட்டு வந்ததென்றும், இக் கட்டுப்பாடுகள் வரவரத் தளர்ந்து வருவதால் கற்பு இனிக் குலையவேண்டியதுதான் என்றும் சித்தாந்தம் பண்ணுவது, தொன்னைக்கு நெய் ஆதாரம் என்ற கக்ஷியைச் சேர்ந்ததாகும். நமது மாதர் கற்புக்கரசிகளாய் இருந்துவருவதற்குச் சாசுவதமான தர்மத்தில் நமது ஜனங்களுக்கு அழுந்தின பக்தி இன்றைக்கும் குன்ருமலிருப்பதுதான் காரணம். நவநாகரீக வெள்ளம் கரைபுரண்டோடும் பட்டணங்களிலேயே காலங் கழித்தவர்க்கு நாம் சொல்லுவது ஆச்சரியமாயிருக்கலாம். ஆகிலும் லக்ஷக்கணக்கான கிராமங்களில் வசித்துவரும் நம்மக்களைப் பற்றி அப்படிச் சொல்லுவது மிகையாகாது.

புருஷர்களுடன் எல்லாத் துறைகளிலும் எல்லாத்தொழில்களிலும் ஸ்திரீகள்

சமத்துவம் அடைவதே சுயேச்சை என்பது மேல்நாட்டார் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடப்பவரின் கொள்கை. “எட்டு, ஒன்பது பிராயமானதும் இருபாலரையும் பிரித்துவிடுகிறோம். விளையாட்டு வேறு; கூட்டம் வேறு; கற்கும் கலை வேறு; பேசும் பேச்சுக்கூட அனேக அம்சங்களில் வேறு. நம் உத்தியோக நிகழ்ச்சிகளும், வாழ்க்கையின் பெரும் போக்குகளும், துயரங்களும் ஆசைகளும் முற்றும் அவர்களுக்குத் தெரியாதவை,” என்று சாஸ்திரியார் வருந்துகிறார். உண்மையே. ஆனால் இந்த வேற்றுமைகளுக்கெல்லாம் மூலகாரணமான வேற்றுமை ஒன்றுள்ளதென்பதைத்தான் மறந்தார் போலும். ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசம் சரீரத்தைமட்டும் ஒட்டியதல்லவென்றும், குணவிசேஷங்களிலும் மனோபாவங்களிலும் அது இன்னம் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது என்றும் யாரும் அறிந்த விஷயம். பண்டைக்கால நாகரீகங்கள் எல்லாவற்றிலும் ஆடவருக்கு ஆண்மையும் பெண்டிருக்குப் பெண்மையுமே முக்கிய அலங்காரமாகக் கருதப்பட்டது. இப்பிறவிக் குணங்களை ஒழுங்காய் வளர்க்கும் படிப்பும், பழக்கமும், விளையாட்டுமே பொருத்தமானவை என்று நாம் ஒப்புக்கொண்டால் இருபாலருக்கும் இவ்விஷயங்களில் மாறுபாடுகள் இருந்துதானே ஆகவேண்டும்? மேல்நாட்டு அனுபவமும் அனேக துறைகளில் இந்த உண்மையை வெளிப்படுத்தி வருகிறது. பொதுப்படிப்பு (Co-education) ஒருகாலத்தில் எதிர்பார்த்த பயனளிக்கவில்லையென்பதும் அதன் காரணமாகத் தவிர்க்கக்கூடிய சில தீங்குகளும் நேரிடுகின்றன என்பது பல பாஸ்ச்சாத்திய வித்தியாதிகாரிகள் கொண்ட தீவிர அபிப்பிராயம். இதே விதமாக, ஆண்பிள்ளைகளுக்குரிய படிப்பில் வெகு ஸ்திரீகள் மேன்மையான தேர்ச்சி பெற்று, பௌதிக சாஸ்திரம் முதலிய துறைகளில் உலகர் மெச்சும் உன்னத ஸ்திதியையடைந்திருக்கும் அந்த நாடுகளிலும் ஸாமான்யமான ஸ்திரீகளுக்கு ஆண்பிள்ளைப் படிப்பு அதிகம் பயனில்லை என்ற நிச்சயம் நாளடைவில் வந்துகொண்டிருக்கிறது படிப்பிலேயே வித்தியாசம் வேண்டுமென்றால் விளையாட்டில் கேட்கவேணுமா? தேக தர்மமும் மனப்பான்மையும் இவ்விதம் வேற்றுமையை முரசறைய, ஆடவர் செய்யும் வேலைகளைப் பெண்களும் செய்யத் தலைப்பட்டால் அதனால் இருபாலருக்கும் அன்னியோன்னியம் உண்டாகுமென்று எப்படித்தீர்மானிக்கலாம்? இற்றைக்குச் சுமார் முப்பது வருஷத்திற்குமுன் ஆங்கில தேசத்தில் சொப்பனத்தில்கூடப் பெண்கள் தங்களுக்கு லாயக்கு என்று எண்ணாத தொழில்கள் பலவற்றிலும் அவர்கள் ஏராளமாகத் தற்காலம் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் குடும்ப வாழ்க்கையிலோ சமூக வாழ்க்கையிலோ முன்னைவிட அமைதி அதிகப்பட்டதாகத் தெரியவில்லை. இயற்கைக்கு மாறான தொழில்களிலும் பெண்கள் ஈடுபட்டதால் கைகண்ட பலன், தற்காலம் நடக்கும் பயங்கர யுத்தத்தில் இருதரப்பிலும் சண்டையை அகண்டமாக விருத்தி செய்யக் கோடிக்கணக்கான ஸ்திரீகள் கோரக் கொலை புரியும் ஆயுதங்களையும் யந்திரங்களையும் தயாரிக்கும் வேலையில் நிர்ப்பந்தமாய் அடைபட்டிருப்பதுதான்.

இருபாலரையும் பிரித்து வைக்கும் நமது சம்பிரதாயத்தை மேற்கண்டவாறு குறிப்பிட்டுச் சாஸ்திரியார் பின்னும் சொல்லுவதாவது. “நம்முடன் அவர்கள் இந்த முக்கியமான விஷயங்களில் கலந்து சரிசமானமாய்ச் சம்பாஷித்து உதவி வாழ்க்கைப் பங்காளிகள் என்று நினைக்கக்கூடிய நிலைமையை இன்னும் அடையவில்லை” என்பதே. இது நமது ஸமூக முன்னேற்ற இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய வெகுகாலத்துப் பல்லவி. நமது மதங்களிலும் தேசாசாரத்திலும் வெறுப்புக் கொண்ட ஐரோப்பியப் பாதிரிமார் முதல் முதல் தொடுத்த புகார் இது. அவர்களிடம் தங்களுக்கேற்பட்ட பக்தியாலும், ஸமூக முன்னேற்றப் போராட்டத்தில் அவர்களே தங்களுக்கு வழிகாட்டிகள் என்ற

அபிமானத்தாலும், இந்த அவதாரருக்கு ஏதேனும் காரணமுண்டா என்று விசாரிக்காமலே அதைத் தங்கள் கொள்கையாக முற்போக்காளர் என்று தன்மதிப்புக்கொண்ட நம்மவர் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அவ்விதம் அவர்கள் ஏற்றுக்கொண்டதால் அது உண்மையாகிவிடுமா? "அடிசிலிர்க்கினியாளே, அறிவுடையாளே, படிசொற் றவறாத பாவாய்!" என்று திருவள்ளுவரால் போற்றப்பட்ட அவர் மனைவி எந்தச் சர்வகலாசாலையில் பட்டம் பெற்றாளோ? "தொலிநேசேஸின பூஜாபலமு" என்ற கீர்த்தனத்தில் தியாகய்யர் கொண்டாடிய அவர் பத்தினி அவர் பாட்டைப் போலவே சுத்தக்கர்நாடகமாக வல்லவா இருந்ததாகத் தெரியவருகிறது கர்ண பரம்பரையாக வந்த செய்தியில்!

"அந்த காலங்களில் எப்படியோ யிருந்திருக்கலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் இவ்விதம் நாணுவதும், கோணுவதும், 'அ' 'ஆ' தெரியாத அசமுடையானை ஆண்டவனைக் கும்பிடுவதும் அழகாயில்லை" என்று புது நாகரீகம் படைத்த ஸ்திரீகள் கம்பீரமாய்க் கோஷிக்கிறார்கள் என்பது வாஸ்தவம் தான். இவர்களுக்கு ஏகாதிபத்தியம் ஏற்பட்டால் இந்த மூடப் பழக்கங்களையும் நம்பிக்கைகளையும் ஒரே உத்திரவில் மாற்றிவிடுவார்கள் என்று கூட வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவ்விதக் கட்டாயமாறுதல்களை நமது ஸ்திரீ ஸமூகம் பெரும்பாலும் விரும்புமா, அல்லது மனமுவந்து ஒப்புக்கொள்ளுமா? இக் கேள்வியைக் கேட்டால் மேற்கண்ட நவநாகரீகப் பெண்மணிகள், "பெண்கள் மனநிலை ஆண்பிள்ளைகளுக்கென்ன தெரியும்? கனம் சாஸ்திரியாரே சொல்லியிருக்கிறாரே, 'ஸ்திரீகளைப்பற்றி நூலாசிரியர்கள் உள்ளதை உள்ளபடி அறிவார்களா? அதற்கு எவ்வளவு நெருங்கிப் பழகவேண்டும்!.... ஆடவர் எழுதும் புத்தகங்களில் பெண்களைப் பற்றிய கருத்துக்கள் தத்துவமாய் இருக்க மாட்டா' என்று? ஆகையால் எங்கள் பாலருக்கு எது பத்தியமென்று நாங்கள் சொல்லுகிறோமோ அதை நீங்கள் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை," என்று ஜயபேரிகை கொட்டலாம். கொட்டட்டும். ஆனால் சாஸ்திரியார் ஆண்பிள்ளை எழுத்தாளர்களை அவ்வளவு கையாலாகாதவர்களென்று சொன்னதற்குத்தான் நியாயம் விளங்கவில்லை. எழெட்டுப் பிராயமான பிறகு ஸ்திரீகளுடன் சகஜமாய்ப் பழக அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லையென்றும் ஆகையால் ஸ்திரீகள் மனப்பான்மையை அறிந்து உள்ளபடி சித்திரிக்க முடியாதென்கிறார். நடுத்தெருவில் ஆடவரும் பெண்டிரும் கைகோத்துச் செல்வதில்லையென்றால் அதிலிருந்து நமது ஸமூகத்தில் பெண்களும் புருஷர்களும் தனித்தனியாய்க் கூட்டில் அடைபட்ட புலி கரடிகள் போல் ஒருவருக்கொருவர் கண்ணில் படாமலும் காதில் கேளாமலுமே காலந் தள்ளுகிறார்களென்று முடிவுசெய்கிறது? எச் சாதியிலும் எவ்வித அந்தஸ்துள்ள குடும்பத்திலும் நெருங்கின பந்துக்களான இருபாலரும் விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டுமல்லாமல் சாதாரணக் காலங்களிலும் ஒன்றுகூடி உற்சாகமாயும் 'பண்டும் பரிகாசமாயும்' காலங் கழிப்பதை சாஸ்திரியார் கண்டதில்லையா? அதுவும் தவிர, வேற்று மனிதர்கள் இருக்கும் இடங்களில்கூட சிற்சில சமயங்களில் நமது பெண்மணிகள் தங்கள் இனத்தாரோடும் தங்களுடன் சகஜமாய்ப் பழகக்கூடிய ஆடவரோடும் கலகலப்பாய் உரையாடுவதைத் தேர் திருவிழாக்களை அநாகரீகமென்று நினைக்காதவர்களும், கோவில் குளம் போவது முழுமுட்டாள்தனமென்று எண்ணாதவர்களும் ரயிலில் மூன்றாம் வகுப்பிற்கு மேலான அந்தஸ்துடன் பிரயாணம் செய்ய இயலாதவர்களும் இன்றைக்கும் காணலாம். இவ்விதம் நமது சகோதரிகளைப் பலபடியாக உள்ளங்கை நெல்லிக்கனியெனக்கண்டு அவ்விதமே அவர்களைப் படிப்போரும் பார்க்கச் செய்திருக்கும் நூல்கள் தமிழில் பஞ்சம் என்ற கூற்றை ராஜமையர், மாதவையா முதலியோர் எழுதி

யிருக்கும் நவீனங்களைப் படித்தானந்தித் தவர்கள் கணமேனும் பொறுப்பார்களா?

இருபாலரும் யாதொரு கட்டுப்பாடுமின்றிப் பொதுவாய்ச் சந்திப்பதாலும் சம்பாஷிப்பதாலும் சல்லாபம் செய்வதினாலும் ஒருவரை யொருவர் அறிவதற்குக் காரணமாகிறதென்றும் அவ்வழியேதான் ஸமூக முன்னேற்றம் ஏற்படவேணுமென்றும் எண்ணுபவர் முக்கியமாக ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். ஆண்பாலார் கூட்டம் கூட்டமாகவோ இரண்டொருவராகவோ சேர்ந்து பழகவொட்டாமல் தடுக்கும் நிர்ப்பந்தம் நமது தேசத்திலாகட்டும் வேறு எத்தத் தேசத்திலாகட்டும் இல்லை என்றாலும், நடவடிக்கையில் அப்படி எல்லையற்ற ஸம்ஸர்க்கம் இருந்துவருகிறதா? படிப்பாளி படிப்பாளியோடும், இனத்தார் இனத்தாரோடும் இவ்விதம் யாரரருக்கு எதேது காரணம் பற்றியாவது தனிப்பட்ட சம்பந்தமோ பொதுப்படையான நோக்கமோ இருக்கிறதோ அவர்களே தான் ஸ்வாபாவிகமாக ஒருவரை யொருவர் அணுகுகிறார்கள். இதனால் மற்றவர்களிடம் அவர்களுக்கு வெறுப்பென்றாவது பேதபுத்தி யென்றாவது யாரும் எண்ணுவதில்லை. அதுபோலவே தான் நமது தேசத்தில் ஹிந்து ஸமூகத்திலாகட்டும் ஸ்திரீகளும் புருஷர்களும் சாதாரணமாகத் தனித்தனியே அவரவர்கள் அலுவல்களைக் கவனித்து வருவது அந்த அலுவல்களின் வேற்றுமையினாலும் இருபாலருக்கும் உள்ள ஸஹஜமான இதர வித்தியாசங்களாலும் ஏற்படும் சுவாபாவிகமான நடத்தையேயொழியப் பிரகிருதிக்கு மாறுபாடாகவோ குரூரமான எண்ணத்தோடு செய்த கட்டுப்பாட்டின் பலனாகவோ ஏற்பட்டது என்று எண்ணுவதற்கில்லை.

சந்தைக் கூட்டத்தில் பழகுவதுபோல் பழகினால்தான் இருபாலரும் மற்றவருடைய மனப்பான்மையை அறியலாமென்று மேல்நாட்டு நாகரீக மோகத்தால் நாம் எண்ணினாலும் நுண்ணறிவு படைத்த பல பாஸ்சாத்திய நூலாசிரியர்கள் பலர் அதை ஒப்புக்கொள்ளுவதாயில்லை. பிரபல நவீனங்களைக்கொண்டு ஆங்கில பாஷையை அலங்கரித்து ஸமீபத்தில் காலகதி யடைந்த **வர்ஜீனியா வுல்ப்** (Virjinia Woolf) என்ற மாது சிரோமணி 'தனெக்கென்று பிரத்தியேகமான ஒரு உள்' (A Room of One's Own) என்ற நூலிலும் இதர வியாஸங்களிலும் ஸ்திரீகள் மனப்பான்மையை உணர்த்த ஸ்திரீகளான நூலாசிரியருக்குத்தான் முடியும், எத்துணை புத்தி கூர்மையும், அனுபவ ஞானப் பரப்பும், ஊஹசக்தியும் வாய்ந்தவர்களாயினும் கேவலம் மானிடர்கள் ஸ்திரீ ஹ்ருதய மர்மங்களைக் கண்டு பிடிக்க இயலாதென்கிறார். இது உண்மையாகில், கனம் சாஸ்திரியார் எண்ணியபடி ஐரோப்பிய ரீதியில் நாம் நமது ஸ்திரீகளோடு பழகிவாராததே நமது கல்விவளர்ச்சிக்கு முக்கிய முட்டுக்கட்டை என்று நினைத்து வருந்துவது அனாவசிய மென்றல்லவா தோன்றுகிறது? கல்வியைப்பற்றிக் கவலைப்படாமலும் பிரமன்பேரில் அவதூறு சொல்லாமலும் பண்டைக்காலப் பழக்கவழக்கங்கள் ராக்ஷஸப் பழக்கவழக்கங்களென்று ஒருபுறம் நிந்தித்து உடனே அவை நல்ல வேளையாய் மலையேறி விட்டபடியால் நாம் ஸ்திரீகள் நடத்தையைப்பற்றி இனிக் கவலைப்பட்டு உபயோகமில்லை என்று முன்னுக்குப்பின் தர்க்கித்து ஏமாற்றமடையாமலும், தர்மம் சாசுவதம், அதைக் கைப்பற்றுவதே க்ஷேமம் என்று ஊர்ஜிதப்பட வேண்டும்.

ஜெமினி

# நந்தனார்

படத்திலுள்ள பாட்டுக்களில்
மிகவும் நன்றாயுள்ள மூன்று
பாட்டுக்களைத் தெரிவித்து



**ரூ 10,000**
லாபம் பெறுங்கள்

**5**வது
வாரம்

| | | |
|---|---|---|
| சென்னை | — | வெலிங்டன் |
| மதுரை | — | நியூ ஸினிமா |
| பெங்களூர் | — | ஸஃப்பர் |
| கோயமுத்தூர் | — | ராஜா |
| காரைக்குடி | — | ராமவிலாஸ் |
| சேலம் | — | நியூ ஸினிமா |
| திருநெல்வேலி | — | பாலஸ் |
| கும்பகோணம் | — | டைமண்ட் |
| திருப்பாப்புலியூர் | — | நியூ ஸினிமா |

*சென்னையில்*
தினசரி 3 காட்சிகள் : 3, 6-15, 9-30 மணி



**1942ன் உன்னத சங்கீதப் படம்**



# ஸரஸ்வதி பூஜை

கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. எல்.

ஸரஸ்வதி பூஜையன்று நாரதர் தாயைத் தரிசித்து வர பிரும்மலோகம் சென்றார். அங்கே நிகழ்ந்தவற்றை அப்படியே எழுதி உதவியிருக்கிறார் ஸ்ரீ கி. சந்திரசேகரன்... நாரதர் தான் திரிலோக ஸஞ்சாரியாயிற்றே—அவர் மூலம் 'தகவல்' கிடைத்தது போதும்!

இடம்—பிரம்மலோகம்.

[காலைவேளை. அழகிய பிரதேசம். தடாகங்களும் சோலைகளும் சுற்றிலும் காண்கின்றன. வெண்தாமரைகள் சூரியனுடைய ஸ்பர்சம் பட்டு புன்னகை பூக்கின்றன. அவைகளினின்றும் வண்டுகள் சுழன்று பறந்து செல்கின்றன. இரவில் இதழ்கள் மூடவும், தாமரைகளில் அகப்பட்டுக்கொண்டு மதுஉண்டு உறங்கிய வண்டுகள், தங்கள் விடுதலைக்குக் காரணமான காலைக் கதிரவனைப் புகழ்வதுபோல் ரீங்காரம் செய்கின்றன. வெகுதூரத்தில் நாரதர் தம்மேல் சாத்தியிருந்த தம்புராவைக் கீழே வைத்துவிட்டு, இயற்கையின் மதுரகீதத்தில் லயித்தவர்போல், பத்மாஸனமிட்டுத் தியானத்தில் உட்காருகிறார்]

மற்றொரு பக்கம் பிரவேசம்
ஸரஸ்வதிதேவியும் ஒரு சேடியும்

**ஸரஸ்வதி:—** அப்பப்பா! இனி முடியாது, என்னால் இவ்வேதனையைப் பொறுக்க [தன் நான்கு கரங்களாலும் தலையின் இரண்டு பொட்டுகளையும் பிடித்துக்கொண்டு]

அம்மா எணாக்ஷி! நாரதரைக் கூப்பிட்டுக்கொண்டுவா. ஏன் இவ்வளவு நாட்களாய் அவன் பார்க்க வரவில்லை!

[சேடி விரைந்து போகிறாள்]

[தனக்குள்] ஏதேது, பூலோகத்திலுள்ளவர்கள் நம்மைச் சும்மா விடமாட்டார்கள் போலிருக்கிறதே! என்ன மணி அடிக்கின்றார்கள்! என்ன அமர்க்களம் செய்கின்றார்கள்! என்னவெல்லாம் விளம்பரப்படுத்துகிறார்கள்! தாங்கள் செய்யும் பூஜை பலருக்குத் தெரிய வேண்டுமாம். தெரியப்படுத்தும் ஆவேசத்தில் ஒருவருக்கொருவர் காது அடைத்துவிடும்படி சப்தம் போடுவதை என்னால் பொறுக்கவே முடியவில்லை.

[நாரதர் சேடியுடன் மெதுவாக நடந்து வருகிறார்]

**ஸரஸ்வதி:—** அப்பா நாரதா! ஏன் இவ்வளவு தாமதம் என்னைக்காண வருவதற்கு? எனக்கு வழக்கத்தைவிட அதிகமாகவே தலைவலி இன்று ஆரம்பித்திருக்கிறது. இதற்கு மருந்து நமது வைத்தியர் தன்வந்திரியிடமிருந்து வாங்கிவருவாயா? அடிக்கடி இம்மாதிரித் தலைவலி எடுத்துவிடுகிறது. வலி இல்லாத நாட்களே இப்பொழுது குறைவு. போதாததற்குப் பூலோகத்து மக்கள் படுத்தும்பாடு தலைவலியைத் திருவலியாக்கிவிட்டது.

**நாரதர்:—** தாயே, உங்கள் தலைவலிக்குக் காரணம் நான் அறிவேன். மூக்குக் கண்ணாடி உங்களுக்கு அவசியம்

வேண்டியிருக்கிறது திருஷ்டி தோஷத்தை நீக்க. இதற்கு வைத்தியரும் வேண்டாம்; மருந்தும் வேண்டாம்.

**ஸரஸ்வதி:—** நீ எப்பொழுதும் சொன்னதைச் செய்ய மாட்டாயே எனக்கு நன்ருய்த் தெரியுமே!

**நாரதர்:—** அம்மா, நான் ஒருபாட்டு நல்லதாகப் பாடட்டுமா? அதைக்கேட்டால் மனதின் ஆயாசம் சற்றுக் குறையலாம்; தலைவலியையும் மறப்பீர்கள். நீங்கள் மஞ்சத்தில் சயனித்துக் கொள்ளுங்கள். நான் சுருதி இல்லாமலே பாடுகிறேன். எனக்குத் தம்புராவைக் கண்டாலேயே வரவரப் பிடிக்கவில்லை. அதைத் தூக்கிக்கொண்டு அலையவேண்டாம் என்றுதான் அங்கேயே வைத்துவிட்டு வந்தேன். சின்னதாக ஒரு சுருதி பெட்டிக்குச் சொல்லி யிருக்கிறேன் பூலோகத்தில்.

**ஸரஸ்வதி:—** சுருதி இல்லாவிட்டால் என்ன பிரமாதம்? ஸ்வஸ்வரமாய்ப்பாடு கேட்கிறேன். தலைவலி குறையுமா என்று பார்க்கிறேன்.

[நாரதர் ஹிந்துஸ்தானி மெட்டில் தமிழ் ஸாகித்திய மொன்றைப்பாடுகிருர். படுக்கையில் ஸரஸ்வதிதேவி புரண்டு கொண்டு இருந்துவிட்டு]

நாரதா! என்ன இப்படிப் பாடுகிருயே?

**நாரதர்:—** என் அம்மணி, பிடிக்கவில்லையா உங்களுக்கு? தமிழ் என்ருல் உங்களுக்கு உயிராயிற்றே என்றுதான் நல்ல சினிமாப் பாட்டாக ஒன்றைப் பாடினேன். என்னவெல்லாமோ புது ரகங்களில் பாட்டுகள் பல பூலோகத்தில் உண்டாயிருக்கின்றன. உங்களுக்கொன்றும் தெரியாது. இன்னும் சில அழகான தமிழ் உருப்படிகளைப் பாடட்டுமா?

**ஸரஸ்வதி:—** போதும், நாரதா, நீ கற்ற வித்தையை என்னிடமே காட்டிவிடுகிருயே. புதிய பாட்டு என்பதனல் மட்டும் பாட்டுக்கு அழகு உண்டாகிவிடுமோ? அல்லது ஸாகித்தியம் ஒன்றுதான் ஸங்கீதத்திற்கு முக்கிய அம்சமோ?

**நாரதர்:—** இல்லை அம்மணி நவினங்கள் எவ்வளவோ வந்திருக்கின்றன. அவைகளை விட்டுவிட்டு திரும்பவும் பழயவைகளையே பாடுவதும் சரியல்ல.

**ஸரஸ்வதி:—** நீ பூலோகத்திற்கு அடிக்கடி போகிறவன். அங்குள்ளவைகளைக் கண்டால் உனக்குப் பிடிக்க ஆரம்பிக்கிறது. அவர்கள் செய்யும் ஒவ்வொன்றையுமே நீ ஆமோதிப்பாய் போலிருக்கிறது. உன்னிடம் அவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை.

**நாரதர்:—** என்ன அப்படிச் செய்கிருர்கள் அவர்கள்! பாவம் எவ்வளவோ விதங்களில் புதிய முறைகளில் பாடுபட்டுக்கொண்டிருக்கிருர்களே. அவர்களுடைய விசித்திர நோக்கங்களுக்கே நம் மனதை அவர்கள்பால் அநுதாபம் காட்டச்செய்யக் கடமைப் பட்டுள்ளோம்.

**ஸரஸ்வதி:—** ஓகோ, அதுகூடவா? என்னை அவர்கள் என்னவெல்லாம் செய்கிருர்கள் தெரியுமா! நீதான் சினிமாவில் வேஷம் போடக்கிளம்பிவிட்டாயே! உனக்கென்னைப்பற்றி என்ன கவலை!

**நாரதர்:—** என்ன அம்மணி, அப்படி ஒன்றும் உங்களிடம் தவறுதலாக அவர்கள் நடக்கவில்லையே! பாருங்கள், நவராத்திரி ஆரம்பித்ததுமே உங்கள் பூஜைக்காக எவ்வளவு விதங்களில் அவர்கள் கவனத்தைச் செலுத்துகிருர்கள்?

**ஸரஸ்வதி:—** போதும், போதும், அவர்களுடைய பூஜையும் புனஸ்காரமும் இவ்வளவு தடபுடல் செய்யாமல் இரண்டு இலைகளைக் கிள்ளி எறிந்தாலும் எனக்குப் பரம திருப்திதான். ஆத்மார்த்தமாய்ச் செய்தால் என் முழு

உருவமும் அவர்களுக்குத் தெரியும். என் புத்தகங்களை மேன்மேலும் அடுக்கி வைக்கிறார்கள்? குவித்த புத்தகங்களையும் புஷ்பங்களால் மூடிவிடுகிறார்கள். என்ன பாவம் செய்தனவோ இளஞ் செடிகளும் கொடிகளும், இம்மாதிரி புஷ்பிக்காத அரும்புகளையும்கூட விடாமல் கிள்ளி அவர்கள் என்மேல் தூவ! எனக்கு மூச்சுவிட இடம் கிடைப்பதில்லை, புத்தகமயந்தான் எங்கும். கண் திறக்க வழி இல்லை, சூடத்தின் புகைதான் சுற்றிலும். காதைத்துளைக்கின்றன கிண்டாமணி ஓசையும், பூஜையின் படாடோபமும். என் வீணையைச் சுருதி கூட்டி எங்கே எனக்கு வாசிக்கமுடிகிறது? அதுதான் கிடையாதே சுருதி சேர்த்து இரண்டு ஸ்வரஸ்தானங்களிலிருந்து சுத்தமான நாதத்தைக் கிளப்ப வகையே இல்லை. எங்கே போவது! யாரிடம் முறையிடுவது! உன் பிதாவை 'சற்று நீங்கள் இதை விசாரியுங்கள்' என்றால், வேலை அதிகம் தனக்கு என்று சொல்லி காலையில் உத்தியோகத்திற்குச் சென்றவர் சாயந்திரம் அல்லது இரவுதான் திரும்புகிறார் வீட்டுக்கு. கேட்டால், யுத்த நெருக்கடியானதால் புதிய சிருஷ்டிகளைச் செய்தாகவேண்டியிருக்கிறது, மேலும் தாமதமன்னியில் இறந்தவர்களுக்குப் பதில் எண்ணிக்கையை உயிர்ப்பிக்க வேண்டிய நிலைமை நாட்டில் வந்துவிட்டதை சால்ஜாப்பு சொல்லிவிடுகிறார். உனக்குத்தான் வீட்டிலேயே இருப்புக்கொள்வதில்லை. சினிமாவும், ரேடியோவும், தமிழ்ப் பாட்டும் எங்கே என்று கிளப்பிவிடுகிறாய். உன்னை அழைத்துவர ஆளனுப்பும் காலம் அல்லவா வந்திருக்கிறது. அவ்விதம் ஒருசமயம் என்னைப்பார்க்க நீ வந்தாலும், புதிய விஷயங்களில் நீ பெற்றிருக்கும் தேர்ச்சியை என்னிடம் பிரயோகிப்பதில் திருஷ்டியாய் இருக்கிறாய். [நாரதர் சிரிக்கிறார்] என்ன சிரிப்பு இவ்வளவு? நீ ஏளனமாய் நகைத்தது இதுவரையிலும் கிடையாது இதுதான் முதல்தடவை. இவ்வளவு இழிவு படுவேன் என்று சொப்பனத்திலும் எதிர்பார்க்கவில்லையே.

[தேவி கண்ணீர் விடுகிறாள்]

**நாரதர்:—** (திடுக்கிட்டு) தாயே, வருந்தாதீர்கள். நீங்களாக ஏற்படுத்திக் கொண்ட இடைஞ்சல்களை விலக்க வழியை என்னிடம் கேட்கின்றீர்களே சிரித்தேனே தவிர, மரியாதைக்குறைவினால் அல்ல. அப்பாவைப் பாருங்கள்! அவர் வேலையுண்டு அவருண்டு, வேறு கவலைகளுண்டா அவரிடம்?

**ஸரஸ்வதி:—** நாரதா, விளங்கவில்லையே உன் வார்த்தை.

**நாரதர்:—** சரி, இப்பொழுது நீங்கள் என்னைச்செய்வது ஏளனம். என்னிடம் தான் உங்களுக்கு வேடிக்கை, தெரியாதா அம்மா?

**ஸரஸ்வதி:—** இல்லை, நாரதா, வாஸ்தவத்தில் உன் பேச்சு நிஜமா, தமாஷா என்று உணரவே முடியவில்லை. 'கூட'மான அர்த்தமொன்று இருக்கும்போல் தோன்றுகிறது.

**நாரதர்:—** அதோ பாருங்கள் அம்மணி, ஒரு சிறு கறுத்த மேகம் சூரிய கிரணங்களை மறைப்பதாகத் தோன்றுகிறது. எல்லாம் சாமான்ய கண்ணுக்கு அப்படித்தான் தோன்றும். மேகத்தின்பின் மறைக்க முடியாத, அணையாத ஜோதியின் பிரகாசமிருப்பதை மூன்று உலகங்களும் அறியுமே அம்மணி. புத்தகங்களால் உங்களை மறைப்பதாகச் சொல்லுகிறீர்களே, நீங்களே அதை நம்புகிறீர்களா?

**ஸரஸ்வதி:—** என்ன உபசார மொழிகள்? இதைவிடவும் அரிய புகழ் வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு என் இதயமெல்லாம் புண்ணாகி விட்டது.

**நாரதர்:—** எல்லாம் நீங்கள் நினைப்பது ஒன்றும் நிஜத்தில் இல்லை. என் வரவர ஒருவருடனும் கலக்காமல் தனிமையில் இருக்கிறீர்கள்? நாளுக்குத் தக்கவிதம் மனதைச் சரிபண்ணிக்கொள்ள வேண்டும். எதற்காக உங்கள் வாயிற்கதவுகளை

திறந்துவைத்தீர்கள்? எல்லோரும் உள்ளே வருவதற்குத்தானே! வருகிறவர்களில் ஊமையும், குருடும், செவிடுமாய்த்தான் பலர் இருப்பார்கள். சிலருக்கு வரும் வேகத்தில் இருக்கிற கண்ணும் தெரிவதில்லை. எல்லாம் செய்யும் ஜாலம். யார் உங்களைக் கையில் புத்தகமெடுக்கச் சொன்னார்கள்? உங்களைப்போல் நாங்களும் புத்தகங்களைக் கையில் வைக்க ஆசைப்படுவது அவர்களிடம் ஒரு குற்றமாகிவிடுமா? அம்மணி, ஏன் அவர்களுக்கு உங்கள் புத்தகத்தையும் திறந்து காண்பிக்காமல் சும்மா இருந்தீர்கள்? அச்சிட்ட புத்தகங்கள் எல்லாம் நீங்கள் வைத்திருக்கும் புத்தகமல்ல என்று அவர்கள் அறியாதது யாருடைய குற்றம்? உங்கள் ஸ்படிக மாலையைக்காணவும் அவர்களும் ஜபமாலையை நாடுகிறார்கள். ஜபத்தைவிட ஜபமாலையில் லக்ஷியம் ஏற்படுவதும் சகஜந்தானே அம்மணி. உங்களை யார் ஜபமாலையை வெளியே காட்டச் சொன்னார்கள்? வாஸ்தவத்தில் உங்களுக்கு ஜபம் செய்யவும் மாலை வேண்டியதுண்டா? எல்லாம் தானாகவே நீங்கள் வரவழைத்த சிரமங்கள்தாம். இன்னும், வீணையை நீங்கள் வாசிப்பதே குறைந்துவிட்டது. எதற்காக வீணையை கையில் மட்டும் வைத்துக்கொண்டு வாசிக்க முயலுவதில்லை? நான் என் தம்புராவைச் செய்தமாதிரி உங்கள் வீணையையும் மூலையில் சாத்திவிடுங்கள் வாசிக்காத வீணையின் வெளித்தோற்றத்தில் தான் மயங்கி உலகமும் புராதன வாத்தியமென பூஜையில் வைக்கிறது.

**ஸரஸ்வதி:—** நாரதா, எதை வேண்டுமானாலும் என்னைப்பற்றி புகார் சொல்லு ஒன்றுமட்டும் நீ சொல்வதை என்னால் பொறுக்க முடியாது. வேண்டுமென்று நான் மனிதர்களைக்கண்டு ஒதுங்குவதாக சொன்னாயே அது தவறு. வேதனையைப் பொறுக்காமல் சிலசமயங்களில் தனிமையில் சுகம் கொஞ்சமேனும் கிடைக்குமா என்று பரீக்ஷை செய்து பார்க்கின்றேன். மற்றப்படி துவேஷமில்லை ஒருவரிடமும் எனக்கு.

**நாரதர்:—** சிறியவன் பேச்சு அம்பலத்தில் ஏறுது அம்மணி. ஆனால் உலகத்தை சதா சுற்றுவதால் என் அநுபவமும் பெரும் புத்தகமாகி விட்டது. அதையே தினம் பக்கம் பக்கமாகப் புரட்டிப் படிக்கின்றேன். கேளுங்கள் என் அன்பின் உணர்ச்சியினால் வெளிவரும் வார்த்தைகளை. முதலில் உங்கள் புத்தகத்தைக் கையிலிருந்து எடுத்து விட்டெறியுங்கள். நான்கு மறைகளையும் உலகிற்கு அருளிய என் பிதா புத்தகமா அம்மணி படித்தார்? உங்கள் ஜபமாலையைக் களையுங்கள். மாலையில் என்ன இருக்கிறது? நீங்கள் அடையும் ஆத்மஸாக்ஷாத்காரம் ஜபமாலையின் வாயிலாகவா கிடைக்கின்றது? உங்களையும் மற்றவரையும் இரண்டாக நினையாத மனப்பாங்குதான் அதற்கு முக்கியம். வீணையை எடுத்து இன்னிசையைக் கூட்டுங்கள். உங்கள் சிரத்தையிலிருந்து சங்கீதம் வரவேண்டுமே தவிர பிறர் அதைக் கவனித்துக் கேட்கவேண்டுமென்பதினாலா? பிறர் காதில் சங்கீதம் படுவது மட்டும் உங்கள் காதுக்கு இதய ஒலியாகுமா? உங்களைப் பார்த்துதான் பலரும் தங்களுக்கென்றில்லாத சங்கீதத்தை அர்ப்பணம் செய்கிறார்கள் போலும் உங்களிடமே. அதோபாருங்கள், இயற்கையின் தோற்றத்தை! மயிலும் தன் தோகையை விரித்து விட்டது. ஒரு சிறிய மேகத்தைக் காணவும் அதற்கு எவ்வளவு சந்தோஷம் பாருங்கள்? சிறியவனை என்னை நினைத்துத்தான் இனி வீணையை கையில் ஏந்துங்களேன். பளிங்காசனத்தில் உட்கார்ந்துகொண்டு பக்கத்தில் பாயும் அருவி ஜலம் சரிந்து விழுந்து மத்தளம் வாசிக்க, மயிலின் கால்கள் நர்த்தனம் செய்யும் பாவனையாய்த் தாளங்கள்போட, தந்தியின் இன்னிசையைக் கிளப்புங்கள். பிறகு உலகமும் நீங்களும் சேர்ந்து இருவருமாய் மெய் மறப்பதில் வேறு ஒன்றையும் அறியமாட்டீர்கள். தலைவலி என்று ஒன்று உண்டா என வியப்பீர்கள்.

**ஸரஸ்வதி:—** ஆம், குழந்தாய், உண்மைதான் நீ சொல்லுவது............

எனாக்ஷி, கொண்டுவா என் வீணையை இனி யார் என்னைத் தொந்திரவு செய்யினும் அதில் மனதைச் செலுத்தி நான் ஏமாறுவதில்லை. இது நிச்சயம். நாரதா, எனக்களித்த மருந்தை உலகினிற்களித்து சுகம் நல்கும் மருந்தாகச் செய்கிறேன்.

[தேவி வீணையை வாசிக்கிறாள். நாரதர் மறுபடியும் தடாகத்தின் கரையிலுள்ள மரத்தடியில் பத்மாஸனம் போட்டுக் கொண்டு கண்களை மூடிய வண்ணம் நாத நிஷ்டையில் நிலைக்கின்றார்.]

# பாசாங்கு

**'பேரன்'**

ஆஞ்சனேயர் பிரும்மசாரி வேஷம் போட்டார்; அதனால் அவர் சாரனாகச் சென்றபோதும் ஸ்ரீ ராமரிடம், 'நான் ஆஞ்சனேயன்' என்று சொல்லிவிட்டார். பிரும்மசாரி வேஷத்திலே பொய் சொல்லமுடியவில்லை,

இராவணன் சன்னியாசி வேஷம் போட்டான்; அதனால் அவன் சோரனாகச் சென்றபோதும் ஸ்ரீ சீதாதேவியிடம் 'நான் இராவணன்' என்று சொல்லிவிட்டான், சன்னியாசி வேஷத்திலே பொய்சொல்லமுடியவில்லை,

காரிமாறப்பிரான் நெடுமாலை வஞ்சிக்கக் கருதி அடிமை வேஷம் போட்டார்; 'வள்ளல்! மணிவண்ணனே!' என்று கள்ள மனத்தோடு வஞ்சிக்க நினைத்தார்; அடிமை வேஷத்தில், 'உயர்வறவுயர் நலமுடையவன்' என்றதுமே, அவர் 'மதிநலம்' அருளப்பெற்றார். அடிமை வேஷத்தில் பொய்யும் கைம்மையும் சொல்லமுடியவில்லை.

உலகிலே பலர் நல்லோராக வேஷம் போடுகிறார்கள். அதனாலேயே நல்லோராகிவிடுகிறார்கள். அண்ணன் தம்பி, குரு சிஷ்யன், கணவன் மனைவி, முதலிய உறவு முறைகளும் நட்புமே வேஷத்தில் தொடங்குகின்றன; உண்மையுள்ளபாக முதிர்கின்றன.

நானும் ஆசாரசீலனாகவும் பக்தனாகவும் வேஷம் போடுவேன்; யாரானாலும், கும்பலில் 'கோவிந்தா' என்றால், பக்தியும் ஞானமும் உடையவனாகிப் பேரின்பம் பெறலாமன்றோ?



# கணவனின் கடிதம்

ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

தபால்காரன் வருகிறானா என்று தெருக்கோடியை எட்டிப் பார்த்து எட்டிப் பார்த்து அவளுக்குண்டான கழுத்துவலியைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. கடிதம் எங்கேயாவது கிட்டுவின் கையில் அகப்பட்டு விடப்போகிறதே என்பதுதான் அவளுக்குத் திகில்.

காலைப்பொழுது. ஒன்பதுமணி சுமார். தபால்காரன் வரும் சமயம்.

சற்று வயது சென்றவர்கள் தூரதேசத்திலோ, அல்லது வேறு ஊரிலோ படித்துக் கொண்டிருக்கும் அல்லது உத்தியோகத்திலிருக்கும் மைந்தன்மார்களிடத்தில் இருந்தோ அல்லது புக்ககத்தில்வசித்துவரும் புத்திரிகளிடத்திலிருந்தோ க்ஷேம சமாசாரத்தைப்பற்றிய கடிதங்களை எதிர்பார்ப்பார்கள். வியாபாரிகள் பொருளாதார விஷயங்களைப்பற்றிய பலவித துரிதமான பதில்களையும் பார்சல்களையும் எதிர்பார்ப்பார்கள். கல்வி பயிலுவதற்காகப் பெற்றோர்களைப் பிரிந்து கலாசாலை ஹாஸ்டல்களில் வாசித்துவரும் மாணவர்கள் பெற்றோர்களிடமிருந்து மணியார்டரையும், கலியாணமான யுவர்கள் தங்கள் காதலிகளின் கடிதங்களையும் எதிர்பார்ப்பார்கள்.

கட்டழகிகள் அவரவர்கள் கணவன்மார்களுடைய காதல் கடிதத்தை எதிர்பார்த்தவாறு வேறு காரியம் எதுவும் ஓடாமல் நிமிஷத்திற்கொரு தடவை தபால்காரனின் வரவை வாசலில் வந்து கவனித்துவிட்டுச் செல்வார்கள். இந்த கடைசிரகத்தை சேர்ந்தவள் நம் இந்திரா.

இந்திராவுக்குக் கலியாணமாகி ஒரு வருஷம் ஆகவில்லை. அவள் சேலத்தில் தன் பிறந்தகத்தில் இருந்தாள். அவள் கணவன் சிவராமன் சென்னையில் பிரசிடென்ஸி காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். அன்று திங்கட்கிழமையல்லவா? இந்திராவின் ஆருயிர்க் காதலனிடமிருந்து கடிதம் வரும்நாள். ஒரு வேளை திங்கட்கிழமை தவறினாலும் தவறலாம், இந்திராவின் கணவனிடமிருந்து கடிதம் வருவது தவறாது. அது அவள் தன் கணவனிடத்தில் செய்துகொண்டிருந்த ஒப்பந்தம்.

சிவராமனுக்குக் காதல் ரசத்தைப் பொழிந்து பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதுவதற்கு ஞாயிற்றுக்கிழமைதான் போதிய அவகாசம் கிடைக்கும். சிவராமன் ஞாயிறுதோறும் கடிதம் எழுதவேண்டியது. இந்திரா ஒருவாரத்தில் குறைந்தபக்ஷம் இரண்டு மூன்று கடிதங்களாவது எழுத வேண்டியது. இதுதான் அவர்களுக்குள் ஏற்படிருந்த ஒப்பந்தம்.

சிவராமன் லீவில் வந்துவிட்டுச் செல்லும்போதெல்லாம் ஒரு கட்டுத்தபால்தலை ஒட்டிய கவர்களை வாங்கிக் கொடுத்துவிட்டுச்செல்வான். அத்துடன் கவர்கள் போதாமல் போய்விட்டால் திரும்பவும் வாங்கிக் கொள்வதற்காக இருபது ரூபாய்களையும் கொடுத்துவிட்டு செல்வான்!

இந்திரா சிவராமனை மயக்கும்படியான காதற் கடிதங்களை வரைவாள். அவள் நான்கு பக்கங்கள் எழுதினால்

சிவராமன் பத்து பக்கங்களை எழுதி அதில் காதல் ரசத்தை விதவிதமாகக் கற்பனை செய்து சித்திரித்திருப்பான்.

அன்று திங்கட்கிழமை என்று சொன்னேன் அல்லவா? இந்திரா முதல் நாள் இரவிலிருந்தே அன்றைய காலை ஒன்பதுமணிப் பொழுதை (தபால்காரன் வருகிற நாழிகையை) அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்கு முந்தினவாரம் சிவராமன் மிகவும் சுவாரசியமான கடிதம் எழுதி இருந்தான். ஆனால் கடைசியில் இந்திரா தற்பொழுது வாரத்திற்கொருமுறைகூட சரியாகக் கடிதம் போடுகிறதில்லை என்றும், எழுதும் கடிதங்களும் மிகவும் சுருக்கமாக இருக்கின்றன வென்றும் 'டோஸ்' கொடுத்திருந்தான்!

இந்திராவுக்குக் கலியாணமானவுடன் ஸ்கூல் பைனலில் வாசித்துக்கொண்டிருந்த அவளைப் பள்ளிக்கூடம் போவதிலிருந்து நிறுத்திவிட்டு, வீட்டு வேலைகளைக் கற்றுக்கொடுக்கும்படி அவள் மாமியார் அவள் தாயாருக்குக் கட்டளை இட்டுவிட்டாள். ஆதலால் அவள் தாயார் தர்மாம்பாள் தன் சம்பந்தியம்மாளிடம் நற்பெயர் எடுக்கவேண்டுமென்ற கருத்துடனும், தன் பெண் புக்ககத்தில் கெட்டிக்காரி என்று புகழ் பெறவேண்டுமென்றும் இந்திராவுக்கு ஓயாமல் வேலை சொல்லிவந்தாள்.

இந்திராவின்பாடு திண்டாட்டமாக முடிந்தது. அருமைக் காதலருக்கு நீண்டதொரு கடிதம் எழுதுவதற்கு அவகாசம் கிடைக்கவே இல்லை. போதாக்குறைக்கு அவள் தமக்கை பிரசவத்திற்கு வேறு வந்திருந்தாள். இந்திராவின்பாடு இன்னும் திண்டாட்டமாக முடிந்தது. அவள் கடிதம் எழுதுவது இருக்கட்டும், சிவராமனின் கடிதத்தைச் சாவகாசமாகப் படித்து அதிலிருக்கும் தேனொழுகும் அமுத மொழிகளை ரஸித்து அந்த அமுத வர்ஷத்தை உறிஞ்சி மகிழுவதற்கேபோதிய நேரம் கிடைக்காமல் போய்விடும்.

இந்தக் காரணங்களை அவள் அவனுக்குத் தெரிவிக்கவும் சங்கோஜப்பட்டாள். என்ன செய்வாள் பாவம் இந்திரா! 'திரிசங்கு சுவர்க்க'த்தில் அகப்பட்டுக்கொண்டு விழித்தாள். இந்த வாரமும் அவள் ஒரு கடிதந்தான் எழுத முடிந்தது. ஆனால் அந்தக் கடிதமும் ஒரு நாள் எழுதுவதற்குள்ளாகவே ஆயிரத்தெட்டு தடங்கல்கள் ஏற்பட்டன. இதையெல்லாம் சிவராமன் எவ்விதம் அறிவான்?

அன்று விடியற்காலம் ஐந்துமணிக்கெல்லாம் அவள் துயிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தாயாருக்கு ஒத்தாசையாகச் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் சடுதியில் செய்து முடித்துக்கொண்டு எட்டரைமணிக்கே வீதித்திண்ணையில் வந்து ஆஜராகிவிட்டாள்.

தபால்காரன் வருகிறானா வென்று தெருக்கோடியை எட்டிப் பார்த்து எட்டிப் பார்த்து அவளுக்குண்டான கழுத்து வலியைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. கடிதம் எங்கேயாவது கிட்டுவின் கையில் அகப்பட்டுவிடப் போகிறதே என்பதுதான் அவளுக்குத் திகில். அவள் உள்ளே காரியமாக இருந்துவிட்டால், வீதி அறையில் படித்துக்கொண்டிருக்கும் கிட்டு தபால்காரனின் கூக்குரலைச் செவியுற்றவுடன் வெளியேவந்து கடிதங்களை வாங்கிக் கொள்வது வழக்கம். அவள் பிராண நாதரின் காதல் கடிதமானது அவன் கையில் அகப்பட்டுவிட்டாலோ சாயந்திரம்வரையிலும் ஓடியாடிவிட்டு, தான் பக்ஷணம் வாங்கிச் சாப்பிடுவதற்காக எட்டணா சுங்கமும் கக்கவைத்துவிட்டுத் தான் கடிதத்தை அவள் கையில் சேர்ப்பிப்பான். அதற்குள் அவளது உள்ளம் புழுப்போல் துடித்துவிடும். ஆகையால் தான் அவள் திங்கள்தோறும் தானே வாசலில் வந்து காத்திருந்து கடிதத்தைத் தபால்காரனிடமிருந்து பெறுவாள்.

"போனதடவையே கடிதம் மிகவும் 'ஷோக்'காக இருந்தது. இந்தத் தரம் எவ்வளவு பக்கங்கள் எழுதி இருக்கிருரோ. 'அடுத்தவாரம் ரொம்ப நீளமாக எழுதப்போகிறேன் அதற்கடுத்த கடிதம் என்னிடமிருந்து வருகிறவரையிலும் நீ அந்த கடிதத்தையே படித்துப் படித்து முடிக்கமுடியாமல் விழிக்குமளவு பெரிதாக எழுதப்போகிறேன் என்று எழுதி இருக்கிருர். அது எவ்வளவு பெரிதாகவும் சுவாரசியமாகவும் இருக்கும்!" என்று இன்பக்கனவு காணவே அந்த அழகிய நங்கையின் முகத்தில் மோகனப் புன்னகை தவழ்ந்து அவளது எழிலைப் பதின்மடங்கு அதிகமாக சோபிக்கச்செய்தது.

"டீ, இந்திரா, இந்திரா!....எங்கடியம்மா போய்விட்டாய்?....குழந்தையைப் போய்ப் பார்த்துக்கொண்டு அக்காளைக் குளிக்க அனுப்படீ" என்று சமையல் அறையிலிருந்து தர்மாம்பாள் கூவினுள்.

பாவம் இந்திரா அரைமனதுடன் வாசலிலிருந்து விட்டிஉள் சென்று தமக்கையைக் குளிக்க அனுப்பினுள். தான் அறையினுள் இருக்கும் பொழுது தபால்காரன் எங்கேயாவது வந்துவிடப் போகிருனே என்ற திகிலுடன் குழந்தையின் அறையின் கதவை நன்ருகத்திறந்து வைத்து விட்டு வாசல்புறம் கண்பார்த்தவாறே குழந்தையைத் தூளியில் கடத்தி ஆட்டலானுள்.

அவளது தமக்கை சுசீலாவும் குளித்து விட்டு வந்தவள் 'அடீ இந்திரா, குசுமா (சுசீலாவின் தலைச்சன் குழந்தை,) வீதியில் போய் விளையாடிக் கொண்டிருக்கிருள் பார். உடம்பெல்லாம் ஒரே புழுதி மயம்! அவளை அழைத்துக்கொண்டு போய் ஒரு சொம்பு ஜலம் விட்டுக் குளிப்பாட்டிக்கொண்டுவா" என்ருள் இந்திராவின் நிலைமை தர்மசங்கடமாக முடிந்தது. 'ஐயோ! நான் குளிப்பாட்டப் போயிருக்கும் பொழுது தபால்காரன் வந்து விட்டுப் போய்விட்டால் என்ன செய்வேன்' என்று அவளது உள்ளம் துடித்தது.

மனதினுள் முனகினவாறு குசுமாவை குளிப்பாட்டுவதற்கு அழைத்துச்செல்வதற்காக வாசலுக்குச் சென்ருள். கடவுளின் அருளால் அதேசமயம் தபால்காரனும் வந்துசேர்ந்தான். இந்திரா மிகுந்த ஆனந்தத்துடன் அவனிடமிருந்த கடிதங்களைப் பெற்றுக்கொண்டு தனக்கு வந்த கடிதத்தைப் புடவை 'மாப்பழ'த்திற்குள் சொருகிக்கொண்டு தகப்பனுர் கடிதங்களை அவரிடம் கொடுப்பதற்காக ஆபீஸ் அறையில் நுழைந்தாள். கடிதங்களைப் பெற்றுக்கொண்டே அவளது தகப்பனுர் "அம்மா, இந்திரா, இதோ சுப்பு மாமா வந்திருக்கிருர். அவருக்குக் காப்பி கொண்டுவாம்மா." என்ருர்,

அவள் தாயாரிடம் சென்று "மாமாவுக்கு காப்பி தயாரிக்க வேண்டுமாம்." என்று விரைவில் தெரிவித்து விட்டுத் தன் காதலனின் கடிதத்தைப் படிப்பதற்காக ஏகாந்தமாக சந்தடியற்ற ரூமைத் தேடிக்கொண்டு புறப்பட்டாள். அவ்வளவுதான்! அவள்தாயார் "கச்சேரிக்கு நாழியாயிடுத்தடீ. அப்பா சாப்பிட வந்தூடுவார். கிட்டுவும் வந்து உபத்திரவம் செய்வான். இன்னும் சமையல் ஆனபாடில்லை. எனக்கு கை ஒழிந்திருக்கா என்ன? இந்தா குமட்டிக்கு இரண்டு தணலைப் போட்டுத்தரேன். நீயே காப்பி போட்டுக்கொண்டுபோய்க் கொடு....என் கண்ணேளியோ!" என்று கூறிக்கொண்டே இரும்புக் குமட்டியில் அடுப்பிலிருந்த தணலை வாரிப் போட்டுக் கொடுத்தாள்.

'அட ராமா' என்று வெறுப்புடன் காப்பி தயாரிக்கலானுள் இந்திரா. ஆனுல் அவளுக்குக் காரியம் ஓடவில்லை. அவளது கவனம் பூராவும் அப்பொழுது அவள் கைக்குக் கிடைத்த, இன்னும் பிரித்து வாசிக்காத, காதல் கடிதத்தின் மீது படிந்திருந்தது. 'கடிதம் பத்து பன்னிரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கலாம். நல்ல கனமாக வல்லவா

இருக்கிறது! போன வார கடிதத்தை விட ஜோராக இருக்கும் போலிருக்கு!.... அவா சொன்ன பேச்சுத் தவறமாட்டாளே.....என் மேல் எவ்வளவு ஆசை! பகவானே, சீக்கிரம் என் நாதருடன் என்னைச் சேர்ப்பிக்கமாட்டாயா' என்று என்னவெல்லாமோ யோசித்த வாறே டீ வடிக்கட்டும் சல்லடையில் காப்பி டிகாக்ஷனை வடிக்கட்டப் போனாள். உடனே அவள் தாயார் எச்சரிக்கை செய்யவே, துணியைக் கொண்டுவந்து வடிக்கட்டினாள். அப்புறம் டிகாக்ஷனுக்குப் பால் கலந்தாள். சர்க்கரைபோட மறந்துபோய், அப்படியே காப்பியை டம்ளரில் கொட்டிக்கொண்டு எடுத்துச்சென்றாள்.

சுப்பு மாமா எப்பொழுதும் தமாஷ் பேர்வழி. அவரிடம் மருந்துக்குக்கூட சங்கோஜ மென்பதே கிடையாது. காப்பியைவாங்கி ஒரு உறிஞ்சல் உறிஞ்சி விட்டு "என்ன இந்திரா எனக்கு 'டயாபிடீஸ்' என்று நினைத்துவிட்டாயோ!" என்றார் நகைத்துக்கொண்டே.

இந்திராவின் தகப்பனார் "என்சார்? குழந்தை சர்க்கரைபோட மறந்துவிட்டாளோ" என்றார்.

இந்திரா வெட்கத்துடன் ஒரே ஓட்டமாக அவ்விடமிருந்து ஓடிப்போய்விட்டாள். அடுத்தவினாடி கிட்டுவினிடம் சர்க்கரையை அனுப்பிக் கொடுத்தாள். அதற்குள் "குசுமாவிற்கு குளிபாட்டினயோடீ?" என்று சுசீலா கூவலானாள்.

இந்திரா குசுமாவை அழைத்துக் கொண்டுபோய் குளிப்பாட்டலானாள். அவள் மனது மட்டும் துவண்டுபோய் வேறு சிந்தனையில் மூழ்கிக்கிடந்தது.

'கடிதத்தைப் பார்த்தால் கட்டாயம் பன்னிரெண்டு பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கும்போலிருக்கே! இவ்வளவு பக்கங்களிலும் எவ்வளவு அழகாக அன்பு ரசத்தைப் பொழிந்திருக்கிறாரோ? இந்தத்தடவை என்னை எந்த செல்லப்பெயரால்அழைத்திருக்கிறாரோ? போனதரம் 'டார்லிங்' னாட்டு எழுதி இருந்தார். அதற்கு முதல் தடவை 'இந்தூடியர்'னுகூப்பிட்ருந்தார். அதற்கு முதலோ?—ஊம்—'கண்மணீ'ன்னு........ இல்லே, இல்லே, 'கண்ணுட்டீ'னாட்டு.... இந்தக்கடிதத்திலோ?' என்று யோசித்த வாறே குசுமாவைக் குளிப்பாட்டி அனுப்பிவிட்டாள்.

பின்பு ஸ்நான அறையின் கதவைச் சாத்தித்தாளிட்டுக்கொண்டு, கடிதத்தை மாம்பழத்திலிருந்து எடுத்துப் படிப்பதற்காகக் கவரை உடைக்கப்போனாள். பாவம்! கதவின் வெளிப்புறம் கிட்டு வந்து கதவை 'தடதட' வென்று இடித்த வண்ணம் "யாரது வென்னீர் உள்ளே? சீக்கிரம் திறவேன்........ஐயோ! மணி பத்தடித்துவிட்டது........ பள்ளிக்கூடத்திற்கு நாழிகையாய்விட்டதே. சீக்கிரம் திற...." என்று கூக்குரலிட்டான். கிட்டுவின் தடபுடலைவிட இந்திராவின் உள்ளத்தில் நடைபெறும் தடபுடல்தான் அதிகமாக இருந்தது.

பத்து, பன்னிரெண்டு பக்கங்கள் கொண்ட காதல் கடிதத்தைப் படித்து முடிப்பதற்குக் கொஞ்சம் நஞ்சம் பொழுது போதுமா? அதுவும் காதல் கடிதத்தைப் படிக்கும்பொழுது பிறத்தியாரின் இடையூறுகள்ஏற்படாவண்ணம் அமைதியான இடம் வேண்டும். முக்கியமாக, படிப்பவர் உள்ளத்திலும் ஆதங்கமில்லாமல் அமைதி நிலவ வேண்டும். அப்பொழுதுதான் காதல் கடிதத்தின் விலைமதிப்பில்லாத இனிய சொற்களின் சுவையை ருசிபார்த்துச் சாவகாசமாய் ஆனந்தத்தை அநுபவிக்கலாம். கிட்டுவின் கலாட்டாவின் நடுவில் இந்திரா அந்த அன்பொழுகும் அரிய பொக்கிஷமாகிய காதற் கடிதத்தை எவ்விதம் படித்தானந்திப்பாள், பாவம்? அச்சிறுமியின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது. துக்கம் தொண்டையை வந்து அடைத்துக்கொண்டது.

கையிலெடுத்த கடிதத்தை அதனுடைய யதாஸ்தானத்தில் வைத்து

மறைத்து விட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

அதற்குள் அவள் தாயார், இலை போடச்சொன்னாள்; ஆனால் அவள் அச் சமயம் ஓர் உயிரற்ற யந்திரம் போல் தான் வேலை செய்யலானாள். அவள் உள்ளத்தைத் தான் அவள் இடுப்பில் பத்திரமாகவிருந்த அந்த காதற் கடிதம் கொள்ளை கொண்டு விட்டதே! சாப்பிடும் அறையைப் பெருக்கி இலையும் போட்டாய்விட்டது. தகப்பனார் வந்தார். சாப்பிடுவதற்கு முன்பு மாத்யான்னிகம் செய்வதற்குப் பஞ்சபாத்திர உத்தரணிகளைத் தேடினார். அதை அவள் வைக்க மறந்துவிட்டாள்! தகப்பனார் தேடும் பொழுதுதான் நினைவிற்கு வந்து அதைக்கொண்டு வந்து வைத்தாள். பொட்டிட்டுக் கொள்வதற்கு வழக்கம் போல் சந்தனம் எடுக்கப் போனார். சந்தனத்தைக் காணோம். தர்மாம்பாள் "அடி, இந்திரா! உனக்கென்னடீ இன்றைக்கு இப்படி புத்தி தடுமாறிப் போயிருக்கிறது? சந்தனத்தைக் கூடவா அரைத்து வைக்காது ஒரு பெண்? நாளைக்கு மாமியார் அகத்தில் போய் இவ்விதம் அசட்டுப் பிசட்டுனு காரியம் சேஞ்சால் வாயை மூடிண்டு இருப்பாளா?—'பெண்ணை வளர்த்திருக்கும் அழகைப் பார்' னுட்டு என்னைத்தான் ஏசிக் காண்பிப்பார்கள்." என்று அபினயம் செய்தவாறு கர்ஜித்தாள்.

குனிந்த தலை நிமிராமல் சந்தனத்தை அரைத்துக் கொண்டுவந்து தகப்பனாரின் அருகில் வைத்தாள் இந்திரா. சாப்பாட்டுக் கடையும் தீர்ந்தது.

'இன்னும் பத்து நிமிஷங்கள்தான். அப்புறம் அம்மாவும் கூடத்தில் போய் படுத்துக்கொண்டு சற்றுக் கண்ணயர்வாள். அப்பாவும் ஆபீஸுக்குப் போய் விட்டார். குறும்புக்கார கிட்டுவும் பள்ளிக்கூடம் போய்விட்டான். குசுமா அடுத்தகத்திற்கு விளையாடச் சென்று விட்டாள். அக்கா நாவல் படிப்பதற்குத் துவங்கி விட்டாள். பத்துபாத்திரங்களை ஒழித்துப் போட்டுவிட்டு சமையல் அறைக் கதவை மூடிக்கொண்டு வந்துவிட்டால், மத்தியானம் காப்பிக்கடை ஆரம்பிப்பதற்குள் கடிதத்தைப் படிப்பதற்கு வேண்டிய அவகாசம் இருக்கிறது' என்று யோசித்தவாறு மிகவும் அவசர அவசரமாகக் காரியங்களைச் செய்ய வாரம்பித்தாள் இந்திரா.

ஆனால், அவள் சமயலறையின் கதவைத்தாளிட்டுவிட்டு வரும்பொழுதே அவள் சிநேகிதி வனஜா கையில் ஒரு கலர் நூல், ஊசி இவைகள் சகிதம் கூடத்தில் பிரத்தியக்ஷமானாள்! "டீ, இந்திரா! நீ நேற்று சொன்னவ்வளவு பின்னிவிட்டேன். கொஞ்சம் 'ஸ்வெட்டரின்' கழுத்தைத் திருப்பிக் கொடுத்து விடுடீ, போதும். அப்புறம் உன்னைத் தொந்தரவு செய்வதே இல்லை" என்றாள்.

பாவம் இந்திரா என்ன செய்வாள். தலைவிதியே என்று வனஜாவிற்கு நூல் வேலையைச் சொல்லிக் கொடுக்க உட்கார்ந்தாள். அடிக்கொருதரம் அவள் எதிரே அவள் கணவனின் கடிதம் தாண்டவமாடிற்று.

வனஜா இந்திராவின் வீட்டை விட்டுத் தன் வீடு திரும்பிச் செல்லும் பொழுது கூடத்தில் மாட்டியிருந்த பெரிய கடிகாரமும் "டாங்க், டாங்க்" என்று இரண்டு மணியடித்து விட்டது. கடிகாரம் அடித்த மணியைச் செவியுற்றவுடன் சற்று நாழிகை கண் அயர்ந்திருந்த தர்மாம்பாளும் தூக்கிப்போட்டவாறு கண் விழித்தனள். 'மணி ரெண்டு அடித்து விட்டதே! டீ இந்திரா, சாயங்காலம் கிட்டு வந்து பக்ஷணம் பக்ஷணம்னு என் பிராணனை வாங்கிப் பிடுவானே டீ. வீட்டில் ஒருபக்ஷணமும் இல்லையே. கொஞ்சம் தேங்குழலாவது பிழி...இங்கியே உட்கார்ந்தபடி சொல்லித்தரேன்! உனக்கும் காரியம் வரணுமோலியோ! எங்கே, மாவு, ஜலம், உப்பு எல்லாம் எடுத்துவா.... என் தங்கமோல்லியோ!" என்றாள்.

இந்திரா "ஊ..........ம்................. அம்மா, நாளைக்கு ஆகட்டுமே" என்று இழுத்தாள்.

"நாளைக்காவது, நாளன்றைக்காவது. நீ நாளைக்குப் புதுக்குடித்தனம் ஆரம்பித்தால்? இப்படி சோம்பித் திரிந்தால், சந்தி சிரிக்காதோ? வெடிய வெடிய, இன்னும் ரெண்டு பக்ஷணம் பண்ணத் தெரியலே, நாளைக்காம், நாளைக்கு! இத்தனை நாள் தான் பள்ளிக்கூடம், படிப்பு, பாட்டுன்னாட்டு, சமையல் அறையிலேயே ஒரு அடி எடுத்து வைக்கவில்லே. இனிமேலாவது ஒன்றொன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டாமோ. சின்னஞ் சிறிசுகள் எல்லாம் இப்படி சோம்பித் திரியலாமோ....நான் உன் வயதில் நாலாருக்கு வேலே செய்வேன்...." என்று ராமாயணம் படிக்க ஆரம்பித்துவிட்டாள்.

இந்திராவின் உள்ளம் அந்தக் கடிதத்தைப் படிப்பதற்கு ஒரே ஆவலுடன் குமுறிக் கொண்டிருப்பதை அந்தம்மாள் எப்படி அறிவாள்! அந்த சிறுமியின் காதல் நிறைந்த மிருதுவான உள்ளம் காலையிலிருந்து ஒரே ஆவலுடன் குமுறிக்குமுறி உச்ச நிலையை அடைந்துவிட்டது. அவள் கண்களிலிருந்து உள்ளக்கொதிப்பினாலுண்டான வேதனையைப்பொறுக்கமாட்டாமல் ஒன்றிரண்டு கண்ணீர்த் துளிகளும் உதிர்ந்து அவளுடைய பளிங்குபோன்ற பளபளப்பான கன்னங்களின் மேல் உருண்டு ஓடின. அதைக் கண்டு தர்மாம்பாள் தான் அவள் மனதை கடுஞ் சொற்களால் புண்படுத்தியதாக நினைத்து உருகினாள். புடவைத் தலைப்பின் நுனியால் கண்களைத் துடைத்துக்கொண்டு யந்திரப்போல் வேலே செய்யலானாள் இந்திரா.

தேங்குழலும் பிழிந்து மூடிவைத்தாய் விட்டது. இரண்டாம்தடவை குசுமாவிற்குத் தயிர்சாதம் கையில் போட்டுவிட்டு, எச்சிலே இட்டாள். தாயாருக்கும், தமக்கைக்கும் காப்பி தயாரித்துக் கொடுத்துவிட்டு, தானும் வேண்டா வெறுப்புடன் கொஞ்சம் சாப்பிட்டாள். இவ்வளவு வேலைக்கும் நடுநடுவில் தன் இடுப்பில் சொருகியிருக்கும் அருமைக் கடிதத்தை அடிக்கடி தொட்டுப்பார்த்துக்கொண்டு சந்தோஷமடைவாள்.

காப்பிக்கடை முடியும் வேளைக்கு மூன்றாவது அகத்துப் பார்வதி அம்மாமி அன்று மூன்று மணிக்கு சங்கீத சபாவில் நடக்கப்போகும் சங்கீதக்கச்சேரிக்கு தர்மாம்பாளை அழைத்துச் செல்வதற்காக வந்தாள். தர்மாம்பாள் இந்திராவையும் பாட்டுக்கச்சேரிக்குவரும்படி அழைத்தாள். ஆனால் இந்திரா "இல்லையம்மா, எனக்கு என்னமோ தலைவலிக்கராப்பலே இருக்கு, கூட்டத்தில் வந்து அடைந்தால் ஜாஸ்தியாய்விடும், நான் அக்காவுக்குத் துணையாக ஆத்திலேயே இருக்கிறேன். நீ மட்டும் போய் வா அம்மா" என்றாள்.

"போடீ கண்ணே, கொஞ்சம் அமிருதாஞ்சனத்தையாவது எடுத்து நெத்திப்பொட்டிற்குத் தடவிக்கொள்.... கொஞ்சம் பருப்பை மட்டும் கரி அடுப்பில் வேகப்போட்டுவை. நான் போய் வருகிறேன்" என்று உத்திரவிட்டு விட்டுப் பாட்டுக் கச்சேரிக்கு புறப்பட்டு போய்விட்டாள், தர்மாம்பாள்.

இந்திராவுக்கோ கட்டுக்கடாங்காத சந்தோஷமுண்டாய் விட்டது. அவளுடைய சிவந்த மேனியும், சப்பக மொட்டு போன்ற அழகிய மூக்கும், மாதலம் பூவை யொத்த சிவந்த உதடும், நீண்ட கரு விழிகளும், பரந்த நெற்றியும், அந்த சந்தோஷத்தால் ஓர்வித புது சோபையை அடைந்து, முன்னிலும் பதின் மடங்கு அழகாக விளங்கின. தன் காதல் பசியை தணித்துக் கொள்வதற்காக ஒரே ஓட்டமாக ஓடிப்போய் உக்ராண அறையினுள் சென்று, கதவை சாத்தி தாழ்ப்பாள் இட்டுக் கொண்டாள். இன்னும் கொஞ்ச நேரம் வரையில் ஒருவர் தொல்லையும்

கிடையாது. கணவன் மேல் அவளுக்கு இருந்த அன்பு அனைத்தையும் ஒருமிக்கத் திரட்டிக் கண்களில் வரவழைத்துக் கொண்டு அக்கடிதத்தை எடுத்து ஒரு பார்வை பார்த்தாள். தன் கணவனே அந்த கடிதத்தின் ரூபத்தில் எதிரிலிருப்பது போல் 'நாதா நாதா' என்று வாய்விட்டுக் கூறினாள். கடிதத்தைப் பல தடவைகள் கண்களில் ஒத்திக்கொண்டு, அதற்குப் பல முத்தங்களும் தந்தாள். பிறகு அதிக ஆர்வத்துடன் கவரை உடைத்துக் கடிதத்தைப் பிரித்தாள்.

கடிதம் என்னவோ பல தாள்கள் கொண்டதாகத்தான் இருந்தது. ஆனால் முதல்பக்கம் காலியாகவிருந்தது. அடுத்த தாளைத் திருப்பினாள். அதுவும் காலி! மூன்றாவதைத் திருப்பினாள், அதுவும் காலி! நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, எல்லாம் காலிதான். சற்றுமுன் மந்த ஹாசத்துடன் மலர்ந்திருந்த முகம் சுண்டைக்காய் அளவு சுண்டிப் போய் விட்டது. மிகுந்த நிராசையுடன் ஏடுகளைப் திருப்பிப் போட்ட வண்ணம் இருந்தாள். கடைசி ஏட்டில் "நீ இரண்டு வாரங்களாக ரொம்ப ரொம்பப் பெரிய கடிதங்களை எழுதிப் போட்டு விடுகிறாய். அதனால் தான் நான் உன்னை ஜயிக்க வேண்டுமென்று பதினைந்து ஏடுகள் கொண்ட இந்தப் பெரிய கடிதத்தை எழுதி இருக்கிறேன்....அப்பாடா! கை ரொம்ப வலிக்கிறது. இத்துடன் கடிதத்தை நிறுத்துகிறேன். இன்னும் எழுதினால் உனக்குப் படிப்பதற்குள் போதும் போதுமென்று ஆகி விடும் பாவம்!

இப்படிக்கு,
உன் அருமைக் காதலன்,
சிலு."

என்று எழுதி இருந்தது.

இந்திராவுக்கு என்னவோ தொண்டையில் வந்து அடைத்துக் கொண்டு விட்டது. கண்களிலிருந்து பல பல வென்று கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அவருக்கு நீண்ட கடிதங்கள் எழுதுவதில்லை என்பதை, தான் உணரவேண்டுமென்றும், தன்னுடைய சுவாரசியமற்ற சிறிய கடிதங்களைத் தன் கணவர் படிக்கும் பொழுது, ஏமாற்றமடைந்து, அதை வெளியிடுவதற்காகவே இந்த உபாயம் செய்திருக்கிறாரென்றும் அவள் உணர்ந்தாள். வெய்யிலின் நடுவில் மழை பெய்வது போல் வருத்தம் மேலிட்ட அவள் முகத்தில் ஓர் புன்முறுவல் திடீரென்று மலர்ந்தது.

"உன் அருமை காதலன்,
சிலு."

என்ற வார்த்தைகளையே வெகு நேரம் திரும்பத் திரும்பப் படித்தாள்.

# கெட்ட பிள்ளை

'ஜோதி'

கெட்டபிள்ளை யென்றே விலக்கிவிட்டேன்; கேட்டவர்க்குத்
துட்டத் தனமெல்லாம் சொல்லி அளக்கின்றேன்.
ஆனாலும் உள்ளே பொருமல் அடங்கவில்லை;
போனாலும் போனான்; புதியவன்பை உள்ளேற்றித்
தன்னை மறவாத் தகைமையிலே மூச்செறிந்தேன்.
முன்னம் இருந்த முழுவெறுப்புக் காணவில்லை.
கண்முன்னே நிற்கின்ற காலத் தவன்தீமை
என்முன்னே நின்றனகாண். இன்றே அவைமறந்தேன்.
கோயிலெல்லாஞ் சூழ்வந்து கோபுரத்தைக் கைகுவித்து
தூய விரதந் தொடங்கித் தவம்புரிந்து
பெற்றதுவும், பெற்று வளர்த்ததுவும், பேணியன்பில்
உற்ற மழலை யுவந்து முத்த மிட்டதுவும்,
ஒவ்வோர் விளையாட்டாய்க் கண்டே உளமுழுதும்
கவ்வி யிறுகிக் கவிந்ததுவும், ஆடைகட்டிப்
பொன்னா லணிபுனைந்து போற்றி மகிழ்ந்ததுவும்,
என்னோடே எங்கும் அழைத்துச்சென் றெய்தியதும்,
"என்பிள்ளை நன்றாகப் பேசுவான்" என்றெவர்க்கும்
அன்பி லிசைத்தே அவன் புகழைப் பேசியதும்,
கல்வி பயிற்றியதும், கட்டழகு கண்டவர்கள்
பல்விதமாய்ப் பாராட்டக் கேட்டுப் பரிந்ததுவும்
எல்லாமென் னுள்ளத்தே இன்று சுழன்றனகாண்.
நல்லா னவனை நவிந்தேனென் றெண்ணமிட்டேன்.
காலத்தின் கோலமென்றன் கண்ணை யவித்ததென
ஓலமிட்டேன்; துக்கத்தை உள்ளடக்கி வைத்திருந்தும்
எங்கோ ஒரு பிள்ளை இன்ன செய்தான் என்று கண்டால்
அங்கார் அவன்றானோ என்றே அயிர்ப்புறுவேன்
மோட்டாரிற் பட்டான் முழுநதியில் மூழ்கிவிட்டான்,
கூட்டாளி தம்மோடுங் கூட்டி லடைப்பட்டான்,
சூதாட்ட மாடித் துரைத்தனத்தார் கைப்பட்டான்
மாதோடு பொல்லா மனத்திற் செயல்புரிந்தான்
என்பனபோற் பத்திரிகை யிற்கண்ட போதெல்லாம்
துன்புடையே னாகிச் சுழன்றுமனம் தத்தளித்தே
"ஐயோ கடவுளே அந்தப் படுபாவி
மெய்யாக இந்த விதத்திற் கலக்காமல்
நீயருள வேண்டும்" என்று நெஞ்சாரவே துதிப்பேன்
சேயின் அருமைகண்டேன் தேர்ந்து.



# அரசியல் ஸ்மிருதி

கே. எஸ். எஸ். என். சர்மா

ஸகல நீதி சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவனும் சுந்தரன் என்று பெயர் வாங்கினவனும் மிருதுபாஷியாயும் ஸூக்ஷ்ம புத்தி உள்ளவனாயும் பொருளாதார விஷயத்தில் நிபுணனாயும் உள்ளவனையே மந்திரி ஸ்தானத்தில் அமர்த்த வேண்டும்........

ஒருசமயம் விஜயநகரஸம்ஸ்தான ராஜ தந்திரப் பிரவீண கட்டம் நரஸிங்கராவ் என்பவர் தமது ஆப்தரான சாஸ்திரிகளைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். வழக்கம் போல் நமது சாஸ்திரிகளும், ராஜதந்திரப் பிரவீணரும் மாலையில் உலாவுவதற்குக் கடற்கரை சென்றார்கள். இதுதான் தருணமென்று நானும் பின்றொடர்ந்தேன். காவிரிநதியின் முகத்துவார கட்டம் போய் எல்லோரும் உட்கார்ந்தோம். அர்த்த சாஸ்திர நிபுணர்களான இரண்டு வயோதிகர்களும் பல விஷயங்களைப் பற்றிப் பேசி வந்தார்கள். அப்போது கட்டம் நரஸிங்கராவ் நமது சாஸ்திரிகளைக்கேட்டார், "பிருமஸ்ரீ சாஸ்திரிகள்வாள்,மந்திராலோசனை என்பதைப்பற்றி நமது இந்திய அர்த்த சாஸ்திர ரீதியில் அதன் லக்ஷணம், உபயோகம், உபயோகிக்கும்காலம், உபயோகிக்கும் அதிகாரி, முதலிய ஜாடா விவரங்களையும் விஸ்தாரமாய் எனக்குத் தெரியப்படுத்தவேணும்" என்று. சாஸ்திரிகள் மந்தஹாஸம் செய்து கொண்டு கூறுகிறார்.

"நண்பா நரசிங்கா, லகுவாய் நான்கு வார்த்தைகளில் உன் கேள்வியை போட்டு விட்டாய். இந்தக் கேள்விக்கு அர்த்தம் புரிந்து அநுஷ்டான முறையும் பழக்கமாகிவிட்டால் ராஜ்ய தந்திர யந்திரம் தானாக ஓடிவரும். பிரஜைகளை யாதொரு கவலை யன்னியில் பரம குதூகலர்களாய் இருந்துவரும்படி அரசாக்ஷி செய்துவருபவனே ராஜா என்கிற பதத்தின் அர்த்தம் என்று மஹா கவி காளிதாஸன் கூறுகிறான்—ஓர் வண்டிச் சக்கரத்தின் கட்டு என்று சொல்லப் படுவது மேலே சுற்றியிருக்கும் கவசம் போன்ற ஓர் இரும்புப்பட்டை. அதைச் சக்கரத்திலிருந்து தனியாய் துண்டித்து விட்டால், வண்டிச்சக்கரத்தின் வட்டைகள், கால்கள் எல்லாம் எவ்விதம் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் சிதறிவிடுமோ, அதுபோல் ராஜ்ய தந்திரமான சக்கரத்திற்கு குடிகளே இரும்புக்கவசமான வட்டை போன்றவர்கள், அந்தக் குடிகளின் வலுவு பூர்ணமாயுள்ள வரையிலும் அந்த ராஜ்ய சக்ரத்தைப்பற்றி யாதொருகவலையுமில்லை —ஆதலால் குடிகளும் அரசனும் அன்யோன்ய பாவத்துடன் இருந்துவரும் தேசத்தில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலியவைகள் பெருகி எல்லா விஷயத்திலும் மேம்பாட்டுடன் பரம ஸுபிக்ஷமாய் இருந்து வரும். அந்த ராஜ்யத்தினிடம், பழுத்த விருக்ஷத்தில் பறவைகள் வந்து விழுவது போலும், மலர்ந்த பூங்கொத்தில் பிரமரங்கள் வந்து மொய்ப்பது போலவும், இதர ராஜ்யங்களில் அரசு செலுத்தி வரும் அரசர்களுக்கு நாட்டம் ஏற்படுவது ஸஹஜமாகையால், சுபிக்ஷமான தேசத்தை ஆண்டுவரும் அரசனுடைய பொறுப்பு ஸாமான்யமாக எடுத்துக் கூறக்கூடியது அன்று.

மேற்படி அரசர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பூர்ணமாய் வலுப்படுத்துவதுடன் ராஜ்யத்திற்கு வேற்றரசர்களால் ஏற்படக்கூடியதும், ஏற்பட்டும் வரும் சங்கடங்களை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது பல வகைகளிலும் முக்கியமானது. ஆகையால் ராஜரீக சாஸ்திரத்தில் அரசனுக்குக்கீழ்ப்பட்டு பதினெட்டு முக்யமான அதிகாரிகள் அத்யந்த ராஜ விச்வாஸிகளாய் அமைக்கப்பட வேண்டியவர்களென்றும், அந்த பதினெண் வகையினரிடம் பதினெட்டு வகையுள்ள, வகுப்புகளின் முக்யமான தலைமைப் பதவியானது ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறதுடன், இவ்வித தலைமை உத்யோகஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் மும் மூன்று சாரணர்களை ஒருவரையொருவர் அறியாமல் நியமனம் செய்து அந்த பதினெட்டு வகை தலைமை அதிகாரிகளையும் ரகஸ்யத்தில் அவர்கள் நடத்தையைப் பற்றி அரசன் கவனிக்க வேண்டியது அத்யாவச்யம் என்றும், காமந்தகம் சுக்ரநீதி, முதலிய அர்த்த சாஸ்திரங்கள் விஸ்தாரமாகக் கூறுகின்றன. நண்பா ராஜ்யதந்திர நிர்வாகிகளான 18வித அதிகாரிகள் யாவர் என்றும் அவர்கள் தொழில் முதலியவற்றையும் பின்னொரு நாள் தெரிவிக்கின்றேன். மந்திராலோசனை எனப்பட்ட விஷயத்தை அர்த்த சாஸ்திரக்காரர்கள் ஒரு ஜீவனுக்கு அமைந்திருக்கும் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணமெனப்படும் தேகத்ரயங்களைப் போல் ராஜதந்திரத்திற்கு சக்தி, உத்ஸாஹ சக்தி, மந்திரசக்தி என்கிற மூன்று சக்திகளும் அமைந்திருப்பதாய் கூறுகிறார்கள்.

ஸகல நீதிசாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவனும் சுந்தரன் என்று பெயர் வாங்கினவனும் மிருதுபாஷியாயும் ஸூக்ஷ்ம புத்தி உள்ளவனாயும் பொருளாதார விஷயத்தில் நிபுணனாயும் உள்ளவனையே மந்திரி ஸ்தானத்தில் அமர்த்த வேண்டுமென்று கூறப்பட்டுஇருக்கிறது. ஊன்றிக் கவனித்தால் வையாகரண ரீதியில் மந்திரத்தில் தேற்சி பெற்றவன் மத்திரி என்ற அர்த்தமாகிறது. அவ்வித மந்திரிகள் நமது அர்த்த சாஸ்திர ஸம்மதமாய் பண்டையகால இந்து மன்னர்கள் ஸபையில் இருந்து வந்த எல்லாரும் விசேஷமாய் பிராம்மணர்களே. மந்திரி பதவியில் ராஜநீதியின் கொள்கைப்படி அமர்த்தப்பட்டு வந்தார்கள் என்றும் சரித்திரவாயிலாய் விஸ்தாரமாய் அறியக் கிடக்கிறது.

இந்தியாவில் நந்தர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டி மௌரியராஜ்யத்தை நிலைநாட்டினவரும் ராஜரீக முறையை ஒருவாறு புதுப்பித்து வகுத்தவருமான கௌடில்யர் என்ற சாணக்கியரே முக்கிய மந்திரியாயிருந்து சந்திரகுப்தன் காலத்திலும் அவன் குமாரன் காலத்திலும் அரசாங்கத்தை தம் ஏக தேசமான நிர்வாகமாய் நடத்திவந்ததான சரித்திரம் நண்பர்களுக்கு நான் எடுத்துக்கூறத் தேவையில்லை. இத்யாதி காரணங்களால் மந்திரிகள் பலருள், உயிரும் உடலுமாயிருந்துவரும் பண்டிதனை ஒருவனைத் தனக்கு ப்ரதானனாகச் செய்து கொண்டு அவனுடன் அவச்யமான ஸமயங்களில் மந்திராலோசனையை அரசன் நடத்தவேண்டும். சிசுபாலவத காலத்தில் தனக்கிருந்து வரும் சில சிக்கலை நிவர்த்தித்துக்கொள்ள, கிருஷ்ண பாமாத்மா உத்தவர் பலராமர் இரண்டு பேருடனேயே, நவரத்தினங்கள் இழைத்து நிர்மாணிக்கப் பட்ட ஓர் பிரஸாதத்திலிருந்தே ஆலோசனையை நடத்தினதாக மகா கவியால் வருணிக்கப்பட்டிருப்பதை சற்று அறிஞர்கள் ஊன்றிக் கவனித்தால் ரத்தின கவசம் போடப்பட்ட சுவரானது சப்தத்தை வெளியே விடாமல் காக்கும் சக்தி பெற்றதாய் ஊகிக்க இடமிருக்கிறது. தவிர எவ்வளவோ பெரியார்கள், பண்டிதர்கள், ஞானிகள் கண்ணபிரானுக்கு வேண்டியவர்கள் இருந்தும் 3 பேரே கூடி யோஜித்ததாய் கூறியிருப்பதை முக்கியமாய் கவனிக்கவும் 'இத்யாத்மனு த்ருதீயேனமந்த்ர: கார்ய: மஹீபுஜா' தன்னுடன் 3 பேர்கள் தான் மந்திரா

லோசனைக் கூடத்தில் இருந்து வரலாமென்று முடிவுகட்டி இருப்பதால் இந்த ஸங்கியைக்கு மேற்பட்டதெல்லாம் (பரிஷத்) என்கிற மஹாஸபையாகவே பாவிக்கப்படவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருப்பதால் மந்திரம் என்று ரொம்ப கூடமாய் வைத்துக்கொள்ளக் கூடியதாலும் நடவடிக்கைக்குப் பிறகே தன்னைச் சேர்ந்தவர்களும் தன் ஸேனை ஸேனாதிபதிகளும் அறியக்கூடிய வகையில் காப்பாற்றப் படவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தவிரவும், மந்திரமானது ஆலோசிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டால் உடன் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரையில் அந்த மந்திரத்தின் பலமானது கெட்டு பேதத்தை அடைந்துவிடுமென்றும், பேதமடைந்த மந்திரத்தின் சக்தியானது தன்னையும் ராஷ்ட்ரத்தையுமே அழிக்கக்கூடிய விபரீதமான ஆயுதம் என்றும் ஆதலால் பதினெட்டு வகையினரான ப்ரகிருதி மண்டலங்களென்கிற நிர்வாகிகளும் யஜமான விஸ்வாஸம், தேசவிஸ்வாஸம் பொருந்தி ஸம்பூர்ணமானவனாயிருக்கும் அரசனுக்கே உடன் நடவடிக்கை எடுப்பது ஸாத்யமாகையால் மந்திரசக்தியின் பலம் அரசருக்கே உரிமையுள்ளது. மந்திரத்திற்கேற்ற காலங்களும் இன்னவை என்று அர்த்தசாஸ்திரப் விரிவாகக் கூறுகிறது, மந்திராலோசனை செய்யாமலும் செய்ய முற்பட்டும அர்த்த சாஸ்திர முறை தவறிச்செய்தும், கேவலம் அர்த்த சாஸ்திர முறையோடு தர்ம வாசனையற்றதுமான பலவித மந்திராலோசனைகள் நடந்ததில் நமது புராணங்களான ராமாயண மகாபாரதாதிகளிலிருந்து சில இடங்களை உதாகரிக்கிறேன்.

சூர்யகுல திலகனான சக்ரவர்த்தி தசரதன் ஓர் சமயம் வஸந்த காலத்தில் அவசரமாய் மஹாஸபையைக் கூட்டினான். ஸுமந்திரர் முதலிய ராஜ்ய நிர்வாகிகளும், நகரவாசிகளான ஆப்த நண்பர்களும், வஸிஷ்டாதிகளான ஆப்த மஹர்ஷி மண்டலங்களும், வந்து சபையில் கூடினர். சக்ரவர்த்தி தன் ஜேஷ்ட குமாரன் ராமனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைக்க விரும்புவதாய், தன் கோரிக்கையை சபையினருக்கு வெளியிட்டான். சபையோரால் இந்த விஷயப், ஏகமனதாய் ஆமோதிக்கப்பட்டது. உடனே சபையிலேயே, மறுநாள் முடிசூட்டுவதாய் முகூர்த்தமும் நிச்சயிக்கப்பட்டது.

சக்ரவர்த்தியின் மனதில் மட்டும் ஓர் தடங்கல் அதன் நிமித்தம் யாதொரு மந்திராலோசனையும் செய்து முடிவு செய்துகொள்ளாமலும், ஒருவரிடமும் விஷயத்தை வெளியிடாமலும் வைத்துக் கொண்டு, ராமனைத் தனிமையில் கூப்பிட்டு, "நாளைய தினம் உனக்கு முடிசூட்டுவதாய் முடிவு செய்துவிட்டேன். ஏனென்றால், உன் தம்பி பரதன் கேகய தேசத்தில் தங்கி வரும் காலமே உனது மகுடாபிஷேகத்திற்கேற்ற முக்ய காலமென, எனது முடிவு. நீ உடனே நமது குலகுருவின் சமீபம் சென்று, அவரால் இன்று இரவு உனக்கு நடத்தப்படும், ரக்ஷாபந்தனம் முதலிய வைதிக கார்யங்களில் அவர் உத்திரவுப்படி நடந்து கொள்," என்று உத்திரவிட்டு, தான் அந்தப்புரம் சென்றான்.

சக்ரவர்த்தியின் உத்திரவுப்படி வாயு வேகமான குதிரைகளில் மற்ற அரசர்களுக்குச் சேதிகள் பறந்தன. பகலென்றும், இரவென்றும் பேதமில்லாமல், நகரமானது கோடிக்கணக்கான தோரணங்களால், அலங்கரிக்கப்பட்டது. ராஜாதி ராஜர்கள், தங்களார்ப்பாட்டத்துடன் அயோத்தி வந்து சேர்ந்தனர். இவ்வித கோலாகலத்தில் உள்ளம் பூரித்து, பாம்பின் வாயில் போய் தேரை குதித்தது போல், அரசன் கைகேயின் அத்தப்புரம் சென்றான்.

சக்ரவர்த்தி வந்தால், இன்னவிதத்தில் அவரைக் கட்டுப்படுத்துவதென்று அபலைகளான கைகேயியும் கூனியும், முடிவுகட்டிவைத்திருந்தபடி சக்ரவர்த்தியின் பழைய வாக்குறுதிகள், அரசனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

அடுத்த நிமிஷம், ராமன் காடு செல்வதென்றும் பரதன் ராஜ்யபாரம் நடத்துவதென்றும், இரண்டு வரங்கள். சக்ரவர்த்தியும் உயிர்நீத்தான்! அன்று ஓரிரவு மட்டிலும் முன்கூட்டியே யோஜித்து, கைகேயியின் அந்தப்புரம் செல்லாமலிருந்தால், கார்யம் நிர்விக்னமாய், கைகூடியிருக்கு மல்லவா?

ஹனுமார் லங்கை வந்துபோன பிறகு ராமனும் யுத்த ஸன்னாஹமாகி ஸமுத்திரக்கரை வந்துசேர்ந்ததை அறிந்த ராவணன் விபத்து நெருங்கி வருவதைக் கண்டு ஒரு மந்திராலோசனை ஸபை கூட்டினான். நகரவாசல்களும் பந்தோபஸ்து செய்யப்பட்டன. உடனே நகரத்திலுள்ள அதிகாரிகள் பந்துக்கள் தொழிலாளிகள் முதலிய பலர் திமுதிமுவென்று கூடிவிட்டார்கள். 'ஸீதையை ராமனிடம் திருப்பிச் சேர்ப்பதென்ற விஷயம் நீக்கி மற்றப்படி இந்த ஸமயத்திற்கு என்ன யோசனைகளை எனக்குத் தந்து உபகரிக்கிறீர்கள்' என்று ஒரு நிபந்தனைவைத்து ஆலோசனையைக் கேட்டான்.

உடனே தர்மாதர்மமறியாதவர்களாயும் குடியர்களும் காமாதுரர்களும் நீதியறியாதவர்களும் கேவலம் முரடர்களுமான பலர் அரசனின் எண்ணத்தை அனுஸரித்து கோஷித்தார்கள். இவ்விதமான ஸமயத்தில் ராமனிருக்கும் நிலையையும் ராவணனிருக்கும் நிலையையும் அர்த்தசாஸ்திர ஞான சூன்யர்களான பலருடைய ஆலோசனையையும் இந்த ஸபையிலிருந்து கேட்ட ராவணனின் தம்பி விபீஷணன் எழுந்து தன் தமயனுடைய தவறுதலையும் எதிரியின் ஸம்பூர்ணமான வலுவையும் தெரிவித்து ராஜதந்திர சூன்யர்களின் ஆலோசனையால் விளையும் கேட்டையும் தெரிவித்து ஸீதையை ராமனிடம் ஒப்படைத்துவிட்டுச் சுகமாய் வாழ்வதைவிட வேறு வழியில்லை என்று எடுத்துக்காட்டினான். இந்திரஜித்தன் முதலிய துஷ்டர்கள் வார்த்தையே ராவணன் தர்பாரில் ஓங்கி நின்றது. துஷ்டர்கள் வசப்பட்ட ராவணனால் விபீஷணன் நாடுகடத்தப்பட்டான். கேவலம் தமோகுண ப்ரகிருதிகளின் வசப்பட்டு ராவணன் சிலதினங்களில் யுத்தத்தில் ஸகல பரிவாரங்களுடன் மாண்டான்.

தெற்கு ஸமுத்திரத்தின் வடகரையில் 70 வெள்ளம்வரை ஸைன்யங்களுடன் யுத்த ஸன்னாஹமாய் ராமன் வந்திறங்கினார். ஸமுத்திரத்தைக் கடக்கவும் சத்ருக்களை வதைப்பதும் அடுத்த கார்யமாய் ஆலோசிக்க வேண்டியதாய் இருந்துவந்தது. இந்த ஸமயம் இந்த ராக்ஷஸன் நம்மை வதைக்கவே வருகிறபடியால் பிடியுங்கள் கட்டுங்கள் கொல்லுங்கள் என்ற வானரர்களின் கோஷம் வானைப்பிளந்தன. வந்தவன் அஞ்சா நெஞ்சத்துடன் இருந்த இடமிருந்து ஒருநூல்கூட நகராமல் நின்று "ஏ வீரர்களே ராவணனுடைய தம்பியான விபீஷணன் தங்களையே அடைக்கலமாய் வந்தடைய வந்திருப்பதாய் ஸ்ரீ ரகுநாதனிடம் தெரியப்படுத்துங்கள்" என்று வேண்டினான். வானர வீரர்களுக்கு சொந்தமாக யாதொரு நடவடிக்கையும் எடுக்க வழியில்லை ஆதலால் வானராதிபதி பரமாத்மாவிடம் தெரிவித்தான். ராமனும் உடனே தனது நிர்வாகிகள் சிலருடன் அவஸர ஆலோசனை ஸபையைக் கூட்டினார். விபீஷணனை சேர்ப்பதா விடுவதா என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்.

விலக்கி விடுவதுதான் முக்கியமெனச் சிலரும், சிலபரீக்ஷைகள் செய்து சேர்க்கலாமெனச் சிலரும், உடனே சேர்க்கலாமென ஒருவருமாய் அர்த்தசாஸ்திர முறையுடன் தெரிவித்தார்கள். ஆகிலும் அந்த ஆலோசனைகளில் தர்மவாஸனை கிஞ்சித்தும் இல்லாமலிருந்ததை ஸ்ரீ ரகுநாதன் கண்டு தர்மத்தையே நிலைநிறுத்தத் தானெடுத்த அவதார மகிமையை உலகிற்குணர்த்த வேண்டியும் தர்மத்தை உபேக்ஷித்து ஒதுக்கிவிட்டு மற்ற எந்த புருஷார்த்தங்களை அண்டினாலும் விபரீதபலனே ஏற்படுவது நிச்சயம் என்பதை யாவருக்கும் அறி

ஷிக்கும் பொருட்டுப் தமது ஸொந்த முறையில் சரணாகதி யென்னும் தர்மத்தின் மகிமையை எடுத்து தமது ஸபையோருக்கு விளக்கியும் விபீஷணனை இச்சமயம் சேர்ப்பது சாஸ்திரவிரோதமன்று என விவரித்து விபீஷணனுக்கு அபய தானம் செய்து சேனையில் சேர்த்துக் கொண்டார்.

உடனே சேனையில் அவருக்கு ஒரு கௌரவம் இருக்கவேண்டுமென்று லங்காதிபதியாக ஆக்கினார். அவனிடமிருந்து ராவணனின் மர்மங்களை அறிந்தார். அவனுடைய ஸூக்ஷ்ம புத்தியைக் கண்டு அவன் தீர்மானங்களுக்கு ஒரு பெருமையைக் கொடுத்தார்.

விபீஷணனும் யுத்தத்தில் மஹத்தான உதவிகள் செய்து ராமன் தனக்களித்த உயரிய பெருமையழியாமல் தன் பெருந்தன்மையை கடைசிவரையிலும் காட்டினான். இன்றுவரை புகழப்படுகிறான்.

ஹிந்துஸ்தான்

**வீட்டு முனையை பாதுகாருங்கள்**

*இன்று வாழ்க்கை நிச்சயமற்றதாயுள்ளதைப்போல் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்பொழுதைப்போல்* **இன்ஷ்யூரன்ஸின்** *அவசியம் எப்பொழுதும் இருந்ததில்லை. உங்களை நம்பியுள்ளவர்களுக்கு பாதுகாப்பளிக்க சிறந்தவழி. இந்தமுறை பாலிஸிதாரர்களுக்கு அளிக்கும் மனச்சாந்தி வேறு எவ்வகையிலும் கிடைக்காது.*

**கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்.**

*இந்த அவசர சமயத்தில், ஆயுள் சம்பந்தமான சகலவித பாதுகாப்பையும் அளிக்கின்றது.* **இன்ஷ்யூரன்ஸ்** *அதிக இன்ஷ்யூரன்ஸ் செய்ய இதுவே காலம். இப்பொழுதே கவனியுங்கள்.*

தலைமை ஆபீஸ்:
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோட்,
கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:
7/67, ஜெயில் ரோட்,
கோயமுத்தூர்.




முதல் பரிசு பெற்ற கட்டுரை

# கடலின் மகிமை

**நா. இராமச்சந்திரன்**

கடல் என்பது கடவுள் படைப்பால் பரந்த, ஆழ்ந்த நீர்நிலை. ஆறு, குளம் முதலிய சிறு நீர் நிலைகள்கூட கரையால் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன. ஆயினும் சிற்சில சமயங்களில் உடைப்பு முதலியன எடுத்துக்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், கடல்மாத்திரம் எவ்வித கரையும் இல்லாமல் இருக்கும் விசித்திரம் என்ன? கடவுளின் ஆணையாலே இவ்வாறு இருக்கிறது. இதனால் தான் தாயுமானவர், "ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ" என்று கூறியிருக்கிறார்.

கடலை உற்றுப் பார்க்கின் சிறியனவும் பெரியனவுமாகிய பல அலைகள் நிமிர்ந்து, சுருண்டு, தாழ்ந்து கரைநோக்கிச் சென்று மணலைக் கரைத்து மறுபடி கடலையே சேரும் அழகைக் காணலாம். அத்தோற்றம் கண்ணையன்றி மனத்தையும் மகிழச்செய்யும்.

கடல் பூமிதேவிக்கு ஆடைபோலிருந்து அழகு செய்கிறது. கடல்நீர், பசுமை, நீலம், கருமை, வெண்மை முதலிய நிறங்களுடையதாக காண்கின்றது. அது அவ்வப்பிரதேசங்களின் பூமி நிறத்தை ஒத்திருக்கின்றது. என்றாலும், கடல்நீர் நீலம் கலந்த பச்சை நிறமே. இரவில் நிலவுவெளிச்சத்தில்கடல் வெள்ளித்தகடு போல் காண்கின்றது. இதைக்காண்பார் அச்சம், சோர்வு, வீழ்ச்சி முதலிய எவ்வித கவலையும் இல்லாமல் இன்பம் அனுபவிப்பர். கப்பலிலிருந்து எப்புறமும் பார்க்கும் மனிதர் எத்தனையோ அரிய கருத்துக்களையும், அவைகாரணமாக வியப்பையும், பிரமிப்பையும், பயத்தையும் காண்பார்கள். கோடை

காலத்தில் கடல்நீர் குளிர்ச்சியாயும், குளிர்காலத்தில் சிறிது வெப்பமாயும் இருப்பதால் உலாவுவதற்கு ஏற்றது கடற்கரையே. கடலிலிருந்துக் கிளம்பும் உப்பங்காற்று பற்பல நோயைப்போக்கும் தன்மையுடையது.

"மாரியின்றிக் காரியம்இல்லை" என்பது மக்களுக்கு உபயோகமாகும் மழையை சிறப்பிக்கும் பழமொழி. இச் சிறப்புக் குரியது கடலே. கடல் இல்லையானல் மேகமும், அதனல் மழையும் இல்லை. கடலானது நெடுந்தூரத்தில் உள்ள பற்பல தேசத்தினரை ஒன்றுபடுத்துகிறது. பற்பல தேசங்களில் விளையும் பொருள்களை அவைகளின் தேவையுள்ள நாடுகளுக்குக் கொண்டுபோகவும் உபயோகமாகிறது. மிகுதியான மழையினல் உலகம் நாசமடையாமல் ஆறுகள்மூலம் தண்ணீரை வாங்கிக்கொள்வதன்றியில் அசுத்தப் பொருள்களையும் தானுட்கொண்டு உலகுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் பாதுகாக்கும் சக்தி கடலுக்குண்டு. விலையுயர்ந்த முத்து, பவளம் முதலிய உயர்ந்த பொருள்கள் கிடைப்பதால் "ரத்னகரம்" என்று கடலைச் சொல்கிறோம். சங்கு, கிளிஞ்சில் முதலியனவும் கடலிலிருந்தே கிடைக்கின்றன. "உப்பில்லாப்பண்டம் குப்பையிலே" என்னும் பழமொழி உணவுக்கு ஜீவாதாரமான உப்பின் மேன்மையைத் தெளிவாக்குகிறது. அந்த உப்பும், நீரை சுத்தமாக்கும் "கடற்பஞ்சு" என்னும் பொருளும் கடலையே பிறப்பிடமாகக் கொண்டவை. கடல் சூழ்ந்துள்ள தேசத்திற்கு அரணக உள்ளது.

கடல் உஷ்ணமுள்ள சூரியகிரணம் படும்போது பொங்காமலும், சந்திர கிரணம் படுங்கால் பொங்குவதையும் பார்க்கும் போது இன்சொல்லால் மகிழும் உலகத்துக்கு ஒப்பாகின்றது. உரியபொருளைக் குறிக்குமிடத்தும், பெரிய பொருளை குறிக்குமிடத்தும் கடலை உவமிப்பது வழக்கம். படிப்பில் உயர்ந்தவர்களை "வித்யாசாகரம்" என்றும், ஆனந்தத்தால் விடும் கண்ணீரை "ஆனந்தசாகரம்" என்றும் தயையைக்கூறுமிடத்து "கருணைக்கடல்" என்றும் கூறுவார்.

கடலுக்கு நாம் செய்யும் கைமாறு உண்டா? சிறுவர்களாகிய நாம் கண்டு, களித்து, சுவைத்தலே.

" ஒப்பரிய புகழ் சுமப்பதொண் கடலே"

[இராமச்சந்திரன், மணல்மேடு]

## 2

## இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை

பாலையன்

பௌர்ணமி. மாலை நேரம். செவ்வானம்விட்ட அந்திநேரம். கீழ்த்திசையில் சந்திரன் தன் இனிமைக் கதிர்களை வீசுகிறுன்.

"பாட்டீ, அதோப்பார்! சந்திரன் எவ்வளவு அழகாக இருக்கிறது. பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது அல்லவா ஆஹா! என்ன இன்பம்" என்றேன்

"ஆமாமடா, சந்திரன் இனிமையை உடையதுதான். சூரியனுய் இருந்தால் இங்கு நாம் இவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க முடியுமா? இவை எல்லாம்

இவ்விடத்தில் பார்த்தால் அவ்வளவு இன்பம் தெரியாது. கடலின் அருகே இருந்து பார்க்கவேண்டும். இந் நிலா வெளிச்சம் கடல்நீர்மேல் படும்போது வெள்ளித்தகடுபோல் விளங்கும் காட்சியை நேரில் பார்த்தால்தான் தெளிவாகும்"

"பாட்டீ, அப்படின்னா நான் கடலைப் பார்க்கணும். நான் பார்த்ததே இல்லியே!" என்றேன். ஆச்சரியத்துடன் "உம் நீ பார்த்ததே இல்லியா? நீ சிறு குழந்தையாய் இருக்கும்போது ஆடி அமாவாசைக்கு காவிரிப்பூம்பட்டினம் போய் சங்கமஸ்நானம் செய்துவந்தோம் அதெல்லாம் உனக்குத் தெரியாது. வர தை மாதம் நாம் எல்லாரும் போவோம்" என்றாள்.

"பாட்டீ! கடல் ரொம்ப பெரிசா இருக்குமா? சத்திரத்துக்கிட்ட இருக்கே தாமரை ஓடை அவ்வளவு பெரிசா இருக்குமா?"

"இல்லேடா ராமு அது ரொம்ப பெரிசு. அதை நேரே பார்த்தால்தான் தெரியும்."

"பாட்டீ அப்படின்னா அதை யார் வெட்டினா? உனக்குத் தெரியுமா?" என்றேன்.

"அது பெரிய கதை அதுக்கெல்லாம் இப்போதே நேரம்?" என்று ஏமாற்றும் தொனியில் சொன்னாள். "ஊஹூம் அதெல்லாம் முடியாது. அந்தக்கதையைச் சொல்லாட்டா விடமாட்டேன்" என்று உள்ளே போக முடியாமல் கையை விரித்து வழிமறித்தேன். அனுப்பு சலிப்புடன் சொல்ல ஆரம்பித்தாள் என் பாட்டி.

"முன்னொரு காலத்தில் பூலோகத்தை சகரன் என்ற அரசன் அரசாட்சி செய்து வந்தான். இந்திர பதவியை அடைய அஸ்வமேத யாகம் செய்தான். இந்திரன் தன் பதவி போய்விடுமே என்று பயந்தான். அதனால் தன்வேலை ஆட்களை சகரன் விட்ட குதிரையை கட்டிவிடச் சொன்னான். அவர்கள் அக்குதிரையை பாதாளலோகத்திற்கு கொண்டுபோனார்கள்.

கபிலர் என்பவர் ஒரு முனிவர். அவர் அங்கு தவம் செய்து கொண்டிருந்தார். அந்த இடத்தில் குதிரையைக் கட்டிவிட்டுப் போய்விட்டார்கள். குதிரையைக் காணவில்லையே என்று சகரன் மிகவும் வருத்தப்பட்டான். அவன் புத்திரர்கள் அறுபதினாயிரம் பேர்களையும் கூப்பிட்டு குதிரையைக் கொண்டுவரும்படி சொன்னான். அவர்கள் எங்கும் தேடியலைந்து காணாமல், பூமியைத்தோண்டி பாதாள லோகத்தை அடைந்தார்கள். பாதாள லோகத்தை அடைய சகர புத்திரர்களால் தோண்டப்பட்டதுதான் இப்பொழுது உள்ள "கடல்" அதனால் தான் கடலுக்கு "சாகரம்" என்ற பெயர்வந்தது.

கபிலரிடம் குதிரை இருப்பதைக் கண்டார்கள். அவரே குதிரையைக் கட்டி இருப்பதாக நினைத்தார்கள். அதனால் அவர் தவத்திற்கு கெடுதல்கள் செய்தார்கள். கண் விழித்துப் பார்த்தார் கபிலர். மிகவும் கோபம் கொண்டார். சகரன் புத்திரர்கள் அறுபதினாயிரம் பேர்களும் சாம்பலாய்ப் போய்விட்டார்கள்.

இந்தச்செய்தி சகரனுக்குத் தெரிந்தது. மிகவும் வருத்தப்பட்டான். புத்திர

சோகத்தால் உயிர் துறந்தான். பிறகு சகரன் வம்சத்தில் உதித்த பகீரதன் ஆகாய கங்கையைக் கொண்டுவந்து (சகரன் புத்திரர்களாகிய) முன்னோர்களை நற்கதி அடையச் செய்தான்.

சகரபுத்திரர்களால் தோண்டப்பட்ட பள்ளத்தில் பகீரதனால் கொண்டுவரப் பட்ட நீர் தங்கியது. பூமியில் அக் காலத்தில் பெரிய மிருகங்கள் வசித்து இருந்தன. அவைகளுக்குப் போதுமான ஆகாரங்கள் கிடைக்கவில்லை. ஆனதால் அவைகள் கடலை அடைந்தன.

நம் ஆகாரத்திற்கு உதவக்கூடிய உப்பு கடலில் இருந்தே கிடைக்கிறது. "ராவணன் மீசை" என்று வேடிக்கையாகச் சொல்லும் நீரை சுத்தமாக்கக் கூடிய கடற் பஞ்சு கடலில் இருந்தே கிடைக்கிறது. ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்குப் போக்கு வரவு வசதியும், பண்டம் மாற்றுதலும் கடல் மூலம்தான் நடக்கிறது. கரிகால் சோழன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் பெரிய துறைமுகமாக விளங்கியது. இத்தனை நன்மை செய்யும் கடலுக்கு நாம் என்ன பிரதி உபகாரம் செய்கிறோம். நன்றி காட்டல் ஒன்று தான். அதனால்தான் ஆடி, தை, மாதங்களில் அமாவாசை அன்று கடலுக்கு பூசை செய்கிறோம்.

நேரமாயிட்டுது கடலைப்பற்றி சொல்லணுமுன்னா ரொம்ப ரொம்ப இருக்கு இன்னொரு நாளைக்கு சொல்லுகிறேன்" என்று முடித்தாள் பாட்டி.

"அப்போ நிச்சியமா வர தை மாதம் காவிரிப்பூம்பட்டினம் போவோமா?" என்றேன் ஆவலுடன்.

"நிச்சியமா போவோண்டா கண்ணு" என்றாள்.

நண்பர்களே! நீங்களும் வருகிறீர்களா சேர்ந்து போவோம்?

[பாலையன், மணல்மேடு.]




ஸ்ரீசாயிபாபா வெள்ளி, கோல்டு கில்ட்டு டாலர்களும், ஸ்ரீசாயி பாபா புஸ்தகங்களும், விபூதி பிரசாதமும் கிடைக்குமிடம். எஸ். ராஜகோபால அய்யர், மர்ச்சன்ட் ஸ்ரீசாயிபாபா ஸ்டோர், பெரியகடைத்தெரு, மாயவரம்.



# தமிழ் வளர்ச்சிக்கு வழி

**எஸ். கலியாணசுந்தரையர்**

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இயற்றிய 'தமிழின் பெருமையும் நம்மவர் கடமையும்' என்னும் பாடல்களையும், அவற்றிற்கு முன்னுரையாக இந்தக் குறிப்பையும் அனுப்பி யுதவிய ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரையரவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பகோணத்தில் என் தந்தையார் மகாமகோபாத்தியாய டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் இருந்த போது காலேஜில் தமிழ்ப்பாடஞ் சொல்வதிலும், வீட்டில் தமிழ் மகளின் பழவணிகளைப் புதுப்பித்தலிலும் ஈடுபட்டிருந்தார்கள். இந்த வகையில் தமிழ்த் தொண்டு புரிந்து வந்ததோடு அவ்வப்போது தமிழன்பர்களின் வேண்டுகோளின்படி உள்ளூரிலும் வெளியூரிலும் பல சபைகளில் தலைமை வகித்தும் தனியே பல விஷயங்களைப் பிரசங்கம் செய்தும் அவர்களை இன்புறுத்தி வந்தார்கள். கும்பகோணத்தில் காலேஜிலும், போர்ட்டர் நகர மண்டபத்திலும், டவுன் ஹைஸ்கூலிலும் வேறு பல இடங்களிலும் அவர்கள் பல முறை பேசியிருக்கிறார்கள்.

பள்ளிக்கூட ஆசிரியர்களும் வேறு உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து அந் நகரில் "**குடந்தை நண்பர் சங்கம்**" என்ற ஒரு சபையை நிறுவி வாரந்தோறும் பலரைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தும் தாமே பேசியும் வந்தனர். பெரும்பாலும் ஆங்கிலப் பிரசங்கங்களாகவே இருக்கும். அந்த சங்கத்தினர் ஒரு முறை ஐயரவர்களைப் பிரசங்கம் செய்ய அழைத்தனர். சங்க நூலாராய்ச்சியிலே மூழ்கியிருந்த அவர்களிடம் 'தமிழின் பெருமை'யைப் பற்றிப் பேச வேண்டுமென்று சங்கத்தினர் வேண்டிக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளின்படி அவ் விஷயத்தைப் பற்றிச் சிறிது நேரம் வாய்மொழியாகப் பேசிவிட்டுப் பிறகு தம் கருத்தைச் செய்யுள் வடிவத்தில் அமைத்திருந்த பின்வரும் பாடல்களையும் சொல்லி ஐயரவர்கள் தம் கருத்தைப் புலப்படுத்தினார்கள்.

ஐயரவர்கள் தமிழின்பண்டைக்காலப் பெருமையை நன்கு உணர்ந்தவர்கள். பழைய நூல்களை ஆராயும்போதும், பழம் புலவர்களின் உன்னதமான உணர்ச்சிகளை அவர்களுடைய கவிதையினால் அறிந்து இன்புறும் போதும், "அவர்களெல்லாம் எப்படி இருந்தார்களோ! அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களோடு வாழும் பாக்யம் நமக்கு இல்லையே!" என்று மனமுருகுவதுண்டு.

பிற்காலத்தார் தமிழைப் புறக்கணித்து ஆங்கில மொழியின்பாலுள்ள மோகத்தால், தம் தாய் மொழியிலுள்ள நூல்கள் அழிவதை உணராமல் சோம்பியிருப்பதைக் கண்டு வருந்தும் இயல்பு உடையவர்களாதலின் பழைய நிலைமையும் பிற்காலத்து நிலைமையும் இச் செய்யுட் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். குற்றம் செய்பவர்களை நேர்

முகமாகக் கடிய சொல்லால் கண்டிக்கும் வழக்கம் அவர்கள்பால் இல்லை. ஆதலின் இதன்கண் அவர்கள் கூறும் அறிவுரை கண்டனமாக இராமல் நண்பர்களுக்குக் கூறும் யோசனையாக இருக்கிறது. அந்த யோசனையும், 'நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள்: அது தவறு; இவ்வாறு செய்ய வேண்டும்' என்று முன்னிலை வாசகத்தில் இராமல் 'சிலர் இவ்வாறு செய்கிறார்கள்; அதை மாற்றி இப்படிச் செய்தால் நன்மை உண்டு' என்று படர்க்கை வாசகத்தால் அறிவுறுத்துகிறார்கள். கடுஞ்சொல் பயிலாக் கட்டுரை வன்மை அவர்கள்பால் இருந்தமைக்கு உதாரணமாகும் இது.

எந்தப் பிரசங்கம் செய்தாலும் பிரசங்கம் நடைபெறும் ஊர், இடம், சபை இவற்றைப்பற்றிய பழஞ்சரிதமோ சமற்காரமான வார்த்தைகளோ இன்றி ஐயரவர்கள் ஆரம்பிக்கமாட்டார்கள். இந்தப் பிரசங்கத்திலும் பழஞ் செய்தியும் சமற்காரமும் முதலில் இருக்கின்றன.

'கலைமகள், திருமகள் ஆகியவர்களுக்கு இருப்பிடம்; பராசக்தியின் பீடம்; சிவபெருமான், திருமால், விநாயகர், முருகக் கடவுள் முதலியவர்கள் எழுந்தருளியிருப்பவையும் சிற்ப எழிலமைந்தவையுமாகிய பலகோயில்களை உடையது. பல மதத்தினரும் வாழ்வது; சோழமண்டலத்தில் திலகம் போல்வது' என்று கும்பகோணத்தின் பெருமை முதலில் வருகிறது. 'தமிழ் மொழி கும்பசம்பவனாகிய அகத்தியர் இயற்றிய இலக்கணமுடையது; அவர் பிறந்த கும்பத்தின் சம்பந்தமுடைய கும்பகோணத்திலுள்ள உங்களால் ஆதரித்தற்குரியது' என்ற சமற்காரமும் பின்னே வருகிறது. கும்பசம்பவரும் கும்பகோணத்தினரும் கும்பசம்பந்தமுடையவர்; தமிழ்த் தொடர்பும் இருத்தல் பொருத்தந்தானே!

இந்தக் கட்டுரை செய்யுளாக இருந்தாலும் பிரசங்கத்தின் அமைப்புடையதாகவே இருக்கிறது. பிரசங்கத்திலே ஐயரவர்கள் இயல்பாகக் கூறும் அவையடக்கத்தை இதிலும் காணலாம். அமிழ்திற் சுவையுறு தமிழின் பெருமையும், ஒன்றுந் தெரியா வென்றன் சிறுமையும், ஒத்துற நோக்கிடி னெத்தனை தூரம்! என்ற அவையடக்கப் பகுதி இது பிரசங்க மென்பதை நினைவுறுத்துகின்றது.

'உலகத்தில் உள்ள எல்லோரும் எந்தக் காலத்திலும் எந்தச் சமயத்திலும் தமிழையே பேசுங்களென்று நான் சொல்ல வரவில்லை. எல்லா மொழிகளிலும் இதுவே உயர்ந்தது என்று சொல்லவும் வரவில்லை. இது தமிழ் நாடாதலின் இங்கே உள்ளவர்கள் அதன்பால் அன்பு வைத்துப் பேசினால் மிகப் பயன் உண்டு என்று என் மனத்திலே எண்ணினேன்.'

இந்த விநயமான விண்ணப்பத்தில் ஒரு பெரிய உண்மை அடங்கிக் கிடக்கிறது. ஒரு பாஷையை அதன் இனிமைக்காகப் படிப்பது வேறு; தாய்மொழி யென்ற நினைவினால் கற்பது நம் கடமை யென்றுணர்ந்து கற்பது வேறு. நாம் தமிழர்களாதலின் தமிழைக் கற்பது நமது கடமை. இந்த விஷயத்தைச் சொல்லியதோடு ஐயரவர்கள் நிற்கவில்லை. 'இனிமையும் இருக்கிறது; கற்பது மிகவும் எளிது' என்று மேலே சொல்லுகின்றார்கள்.

பிறகு தமிழின் பெருமையைச் சொல்லப் புகுகிறார்கள். சங்க நூல்களால் அறிந்த செய்திகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறார்கள். 'பழங்காலத்து அரசர்கள் புலவர்களைக் கூட்டிப் பாதுகாத்து நூல்களை இயற்றச் செய்தனர். வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கச் செய்தனர். சில அரசர்கள் தாமே தமிழிற் பெரும் புலவர்களாக விளங்கிச் சங்கப் பலகையில் வீற்றிருந்தனர். அவர்கள் காலத்தில் அரசர்களைப் பின்பற்றிக் குடிமக்களும் அன்பொடு சாலத் தமிழையே கற்றனர்'

(தொடர்ச்சி 204-ம் பக்கம்)

# தமிழின் பெருமையும் நம்மவர் கடமையும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

**பூ**வுறை நான்முக னுவுறை மடந்தைக்
கமலமார் சுவேத கமலம தாகிக்
காமனை யருள்பரந் தாமன்மார் புறைதிரு
மாமகட் கொருசெந் தாமரை யாகி
இமையமீன் றளித்த வுமையவட் குலவாப்
பாடமை மந்திர பீடம தாகிச்
சங்கரன் சுரிமுகச் சங்கரி கரிமுகத்
தைங்கர னிராறு செங்கரன் முதலாம்
பற்பல வானவர் அற்பினோ டமர்பல
சிற்பமார் சினகரப் பொற்பின தாகிப்
பூவிரி பொழிற்கரைக் காவிரி யிருபால்
இயங்க லுற்ற நயம்பெற் றதுவாய்ப்
பன்மதத் தவர்தந் தன்மையின் வழாது
மனமகிழ்ந் துறைபெருந் தனமுடைத் தாகித்
தண்டலைச் சோழ மண்டல மடமகட்
கிலகுறு நெற்றித் திலகம தாகி
விளங்குறு குடந்தை வளம்பதி யிதன்பால்
நயசுகு ணத்தா னுயரர சர்க்குறு
கல்வியா னுயர்ந்த செல்வர்காள்! வானத்
தமிழ்திற் சுவையுறு தமிழின் பெருமையும்
ஒன்றுந் தெரியா வென்றன் சிறுமையும்
ஒத்துற நோக்கிடி னெத்தனை தூரம்
என்பதற் கைய மெள்ளள வும்மிலை
என்பதை யெண்ணு திருப்பவ ரெவரே
அப்படி யிருப்பினுஞ் செப்புறு மொழியுட்
குணமே கொள்ளுநுங் குணமிகத் தூண்டச்
சொல்லத் துணிந்தவென் சொல்லைக் கேண்மினோ

**1-17 கும்பகோணத்தின் பெருமை;** 1. மடந்தை-கலைமகளுக்கு; 2. அமலமார்-தூய்மையையுடைய; சுவேதகமலம்-வெண்டாமரை; 3. காமனை அருள்பரந்தாமன்-மன்மதனைப் பெற்ற திருமால்; 6. பாடு-பெருமை; கும்பகோணம் சத்திபீடங்களில் ஒன்று; 7. சுரிமுகச்சங்கு அரி-சுழிந்த முகத்தையுடைய சங்கைத் திருக்கரத்தி லுடைய திருமால்; 8. இராறு செங்கரன்-பன்னிரு கையுடைய முருகக்கடவுள்; 9. அற்பினோடு-அன்போடு; 10. சினகரம்-கோயில்; 15. தண்டலை-சோலை; **18-19 அவையோர் பெருமை;**

யாவரு மென்று மெச்சம யத்தும்
மேவருந் தமிழையே விளம்புக வென்கிலேன்
எம்மொழி கட்கு மிம்மொழி யேயுயர்
செம்மொழி யெனவுஞ் செப்புகி லேனீ
திமிழ்கடல் வரைப்பிற் றமிழ்நா டாதலின்
ஆசறத் தமிழை நேசமொ டியப்பின்
மிகப்பயன் உண்டென் றகத்தெண் ணினன்மற்
றித்தமிழ் நாட்டுறு மெம்மொழி யவரும்
இத்தமிழ் மொழியையே யெளிதியம் புவரால்
அன்றியுங் கற்றற் கின்றமி ழெளிதால்
ஆரிட மெனவு மறையப் படுமால்
வழுவா வறிஞர் தழுவிய திதுவே
முந்நா ளிடையே யிந்நா டளித்த
விரைசெறி மலர்த்தார் அரசரிற் பலர்தாம்
இம்மொழி நாடொறு மேற்றமு றுறவே
செம்மொழி யறிஞரைச் சேர்த்தினி தளித்தே
அன்னோர் தம்மாற் பன்னூ லாக்குவித்
தளித்தன ருலகங் களிப்பபடைந் திடவே
வடமொழி நூல்சில திடனுற மொழிபெயர்த்
தீந்தன ராற்சில வேந்தர்க டாமே
நலமிகு முத்தமிழ்ப் புலவர்க ளோடு
வீறிய சங்க மேற்றனர் சிலரே
மன்னவ னெப்படி மன்னுயி ரப்படி
என்னுந் தொன்மொழிக் கியைவின் னோர்தங்
காலத் தெவருங் கடைப்பிடித் தன்பொடு
சாலத் தமிழையே தாங்கற் றனரே
இந்தக் காரணத் தித்தமிழ் மொழிதான்
இந்தப் பைதிரத் திலங்கிய தாற்பின்
பிருந்தவேற் றரசரி லிந்நிலை யின்றி
இருந்துண் டுடுத்தே யிறந்தனர் சிலரே
புனலாற் பலநூல் கனலாற் பலநூல்
அழித்தே காலங் கழித்தனர் சிலரே

---

**20-27** அவை யடக்கம்; **28-55** தமிழின் பெருமையும் வளர்ச்சியும்; 29. என்கிலேன்-என்று யான் கூறவில்லை; 32. இமிழ் கடல்-ஒலிக்கின்ற கடல்; 33. ஆசு-குற்றம்; 38. ஆரிடம்-ரிஷிகளால் செய்யப்பெற்றது அகஸ்திய முனிவரால் இயற்றப்பெற்ற இலக்கணத்தையுடைமையின் தமிழை ஆகஸ்திய மென்றும், ஆரிடமென்றும் கூறுவர்; 40. அளித்த-பாதுகாத்த; 41. விரை-நறுமணம்; 44. பன்னூல் ஆக்குவித்து-பல நூல்களை இயற்றும்படி செய்து; 55. பைதிரத்து-நாட்டில்;

இன்புறு தமிழிடை யன்புவைத் திருந்தும்
பெயர்ப்பித் தெழுத வயர்த்தனர் சிலரே
இக்கா ரணத்தான் மிக்கார் புகழும்
எத்தனை நூல்கள் இறந்தன! அவைதாம்
இத்தனை யென்ன எண்ணப் படுங்கொலோ!

---

61. பெயர்ப்பித்து-பழைய ஏட்டிலிருந்து புதிய ஏட்டில் பெயர்த்தது; அயர்த்தனர்-மறைந்தனர்.

(201-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விஷயத்தையே பழைய நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டி விரிவாகப் பல சமயங்களில் ஐயரவர்கள் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்கள்.

* * *

இவ்வளவு சிறந்த நிலையில் இருந்த தமிழ் நிலை குலைந்த காரணம் என்ன? 'வேற்று அரசர் இருந்து உண்டு உடுத்து இறந்தனர் சிலரே; புனலாற் பல நூல் கனலாற் பல நூல் அழித்தே காலங் கழித்தோர் சிலரே' என்று அநுபவ பூர்வமாகச் சொல்கிறார்கள். அவர்கள் பழந் தமிழ்ச் சுவடிகளைத் தேடியலைந்த காலத்தில் புனலாலும் கனலாலும் தமிழ் நூல்கள் அழிந்த கதைகள் பல கேட்டிருக்கிறார்கள். 'என் சரித்திரத்தில்' அவற்றிற் சில வருகின்றன. எவ்வளவு நூல்கள் பிரதி செய்யப்படாமல் அழிந்தொழிந்தன! 'தமிழிடை அன்பு வைத்திருந்தும் பெயர்ப்பித்து எழுத அயர்த்தனர் சிலரே' என்று வருந்துகிறார்கள். பழைய நூல்களைப் பிரதி செய்தலைப் பெரும் புண்ணியமாகக் கருதும் இயல்புடைய ஐயரவர்கள் தமக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதிகளைக் கூடியவளவு பிரதி செய்து வைத்துக் கொண்டார்கள்.

பிரதி செய்தவர்களாலும், நூல் கற்பவர்களாலும், பாடஞ் சொல்பவர்களாலும், நூல் இயற்றுகிறவர்களாலும், பதிப்பிப்பவர்களாலும் தமிழ் வாழ்கின்றது. அவர்களே தமிழைப் 'பாலனஞ் செய்த மேலவர்'; இவ்வளவு வகையிலும் ஐயரவர்கள் தமிழைப் பாலனஞ் செய்து வந்தார்கள். 'சொல்லிய வண்ணம் செய்யும்' பெருமை அவர்கள் பால் இருந்தது.

[தொடரும்]

*Edited & Published by K.S. Venkataramani at No 43, Mahadana Street, Mayavaram, Printed by V. Ramamurthi B. A., at the Mirasdars' Welfare Press 29, Mahadana Street, Mayavaram.*